ஸ்ரீ அரவிந்தர் அருளிய

# தேவ ஜீவனம்

1002

## (DIVINE LIFE)

1639

ஸ்ரீ அரவிந்த சித்தாந்தம்

Book No. 235



T11234
R003104

தானந்த பாரதியார்

மொழி பெயர்ப்பு

ஸ்ரீ அரவிந்தர் அருளிய

# தேவ ஜீவனம்

(DIVINE LIFE)

முதற் பாகம்

(ஸ்ரீ அரவிந்த சித்தாந்தம்)

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி (ஜில்லா)
1942

First Edition: AUGUST 1942

# DIVINE LIFE

## PART I

## SRI ARABINDO SIDDHANTAM

(ALL RIGHTS RESERVED)

Published By

ANBU NILAYAM

Ramachandrapuram, Trichy Dist.

Printers:

Sunday Times Press Ltd., Madras

# பதிப்புரை

ஸ்ரீ அரவிந்தர் அருளிய மகத்தான தத்துவ நூல், ''தேவ ஜீவனம்''; அதை யோகி சுத்தானந்த பாரதியார் தமிழுலகிற்கு இனிய எளிய நடையில் விளக்கியிருக்கிறார். 'தேவ ஜீவனம்' மூன்று பகுதியாக வெளிவரும். இது முதற் பகுதி—ஸ்ரீ அரவிந்தர் சித்தாந்தத்தைத் தெளிவாக விளக்குவது. இதில், 'எல்லாம் ஒரு மயம், பிரம்மமயம், ஜடமும் சித்தும் அதுவே, காணும் உலகும் உண்மையே' என்பதை ஸ்ரீ அரவிந்தர் மிக விரிவாக விளக்கியிருக்கிறார். தேவ ஜீவனம் இரண்டாம் பாகத்தில் தெய்வத்தன்மையும் அதைத் தடுக்கும் அசுரத்தன்மையும் விளக்கப்படும். மூன்றும் பாகத்தில் அமரவாழ்வைப்பற்றி விரிவாக விளக்கப்படும். காகித விலை சுமாரானதும் இவை வெளிவரும்.

தேவ ஜீவனத்தை ஹிந்துஸ்தான் பத்திரிகையில் வெளியிட்டுதவிய ஆசிரியர் ஸ்ரீ ரா. நாராயணன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

மானிடம் தெய்வ மாறுதல் பெறுக!

இராமச்சந்திரபுரம் }
14—6—1942 }

அன்பு நிலயத்தார்.

---

சகூ—க—உகூ

## பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | • பதிப்புரை | |
| | தேவ ஜீவனம் ... | 1 |
| 1. | ஸ்ரீ அரவிந்த சித்தாந்தம் ... | 4 |
| 2. | உள்ளதை மறுக்காதே ... | 6 |
| 3. | உலகை வெறுக்காதே ... | 9 |
| 4. | இரண்டிற்கும் பொருத்தம் ... | 14 |
| 5. | ஜீவ லட்சியம் ... | 17 |
| 6. | மனிதனும், உலகமும் ... | 20 |
| 7. | இருமை, ஆணவம் ... | 22 |
| 8. | வேதாந்த ஞான விசாரம் ... | 24 |
| 9. | சுத்த வஸ்து ... | 26 |
| 10. | சித் சக்தி ... | 29 |
| 11. | வாழ்வின்பம் ... | 31 |
| 12. | மாயா சக்தி ... | 37 |
| 13. | விஞ்ஞானம் ... | 40 |
| 14. | மனத்தின் வேலை ... | 46 |
| 15. | பிராணன் ... | 51 |
| 16. | சாவு, ஆசை, சோர்வு ... | 54 |
| 17. | ஜீவ விசாலம் ... | 59 |
| 18. | வாழ்வின் கேள்வி ... | 65 |
| 19. | சைத்ய சித்தி ... | 70 |
| 20. | ஜடம் ... | 77 |
| 21. | படியேற்றம் ... | 85 |
| 22. | ஏழு தந்தி ... | 91 |
| 23. | மேல் மனம் ... | 94 |
| 24. | சிருஷ்டிக்குப் பின் உள்ள வஸ்து ... | 99 |

# தேவ ஜீவனம்

"தேவ ஜீவனம்" என்ற வார்த்தையை இக் காலம் கேட்கிறோம்; இது வேத ரிஷிகளின் மணி வாக்கு. இந்த நூற்றாண்டில் இதை நமக்கு அளித்த மஹான் ஸ்ரீ அரவிந்தர். வார்த்தைமட்டும் போதாது; சர்க்கரை என்றால் வாய் இனிக்காது, சாதம் என்றால் வயிறு நிரம்பாது; "திவ்ய ஜீவனம்," "தேவ ஜீவனம்" என்று பழைய வாக்குகளைக்கொண்டு எழுதினாலும், பேசினாலும் போதாது. தேவ ஜீவனத்தை அடைந்த ஒரு மஹான் நமக்கு வழிகாட்டவேண்டும்; அதற் குரிய இலக்கணத்தை அவரே விளக்கவேண்டும்; அவரைக் கண்டதுமே "இவர் திவ்ய புருஷர், இவர் சொல் தேவ ஜீவனம் அளிக்கும்" என்பதை நாம் உணரவேண்டும்; அவர் வாக்குகளைப் பருகியதும், நமக்கு இவை வெறும் மூளை யிலக்கியமன்று, இவை அனுபவ மணிகள் என்று தெரியவேண்டும்.

அத்தகைய திவ்ய புருஷர் ஸ்ரீ அரவிந்தரே. அவர் பூரண யோகி. அவர் வாக்கு தெய்வவாக்கு என்பதை உலகம் அறியும். ஸ்ரீ அரவிந்தப் பிரகாசத்தில் அவரது தெய்விக வாழ்க்கை விளக்கப் பெற்றுள்ளது. "தேவர்போல மானிடரும் வாழ வேண்டும்; சுவர்க்கம்போல உலகம் இன்ப வாழ்வு பெற வேண்டும்; துன்பத்தை விரட்டியடிக்கவேண்டும்;

மனித சமுதாயம் அதற்கேற்ற தெய்விக மாறுதல் அடைந்து பூரணம் பெறவேண்டும்" என்பது ஸ்ரீ அரவிந்தர் திருவுள்ளம்; இதை அவர் எத்தனையோ நூல்களால் விளக்கியுள்ளார்.

அந் நூல்களுள் அதி அற்புதமானது **தேவ ஜீவனம் (The Life Divine)**. ருக்வேதத்திற்குப் பிறகு மனித சமுதாயம் ஓர் அருள்வேதத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமானால், இதோ இந்த தேவ ஜீவனத்தையே வணக்கத்துடன் ஏற்கவேண்டும். இந்த நூல் அற்புதமானது, அபாரமானது; இதில் பொதிந்துள்ள எண்ணங்கள் யோக சித்தியினின்றே எழுந்தவை. அவை சொல்லுக்கடங்காதவை. ஸ்ரீ அரவிந்தவாணியே அவற்றை இந்த மாதிரி விளக்க இயலும்; இந்த நூலை உள்ளுணர்ந்தே அறிய முடியும். "இமாலயம் வானோங்கியது, கம்பீரமானது, அதில் சிவனும் கௌரியும் தவம் புரிகிறார்கள்" என்று சொன்னால் மட்டும் இமாலயத்தை முற்றிலும் அறிந்ததாகாது. மலையில் முயன்று ஏறி அனுபவம் உள்ளவனே அதன் மாண் வனப்பை அறிவான்; "ஆழியில் முத்து இருக்கிறது" என்றால் முத்துமாலை வந்துவிடாது; ஆழச் சென்று எடுத்து வந்தாலே முத்தை அணியலாம், மாலையாக்கலாம்.

அதுபோல, தேவ ஜீவனம் என்றால் மட்டும் நம் மானிடக் குறைகள் மாறித் தேவாம்சம் வந்து விடாது. தேவஜீவனம் நீண்ட சாதனத்தால், தெய்வத் திருவருளால் வருவது. அதற்குரிய சாதனங்களை இதுகாறும் ஸ்ரீ அரவிந்தரைப்போல யாரும் விளக்க வில்லை. அதற்கே அவர் அவதரித்திருக்கிறார். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் இந்த அற்புத நூலில் நிரம்பிய உண்மைகளை அறியவேண்டும், அணியவேண்டும். நூல் மிகப் பெரியது. பெரிய அளவில் 1627 பக்கம் கொண்டது; ஆங்கில நடை

மிகவும் ஆழ்ந்து அகன்று வுயர்ந்து பரந்த புலவர் நடை. நூலில் உள்ள சங்கேத பதங்கள் பல ஸ்ரீ அரவிந்தரின் புனைவு.

ஸ்ரீ அரவிந்தரின் திவ்யவாணியை இந் நூல் எளிய நடையில் விளக்குகிறது. இதைத் தமது பத்திரிகையில் அன்புடன் வெளியிட்டுதவிய "ஹிந்துஸ்தான்" ஆசிரியர் ஸ்ரீ ரா. நாராயணன் அவர்களுக்கு நன்றி.

பஞ்சமா பாதகங்கள் அழிநடம் புரியும் இன்று உலகில் நமக்கு ஆறுதலளிப்பது அருள்பெற்ற மஹான்களின் வாக்குகளேயாம். ஸ்ரீ அரவிந்தவாணி வாழ்விற்கு அருள்மெருகேற்றவல்லது. தமிழர் அதைப் போற்றி நலம் பெறுக!

சுத்தானந்த பாரதி

---

ஜனசக்தி வாசக சாலை,
விக்டோரியா பஜார்,
முத்துப்பேட்டை.

# 1. ஸ்ரீ அரவிந்த சித்தாந்தம்

மனிதனுள் தெய்வாத்மா உள்ளது; அஃது அழியாதது; மாருதது; நிலையானது; நிறைவானது; கட்டற்றது; இருளற்றது. அது சுத்த சத்தியம், சுத்த ஆனந்தம். அதுவே அமர வாழ்வின் இரகசியம்; அதை வாழ்வில் விளக்குவதே அமர வாழ்வு. மற்றப்படி புறவியல்பில் எவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றாலும் மகிழ்வுண்டாகாது; தன்னுள் உள்ள கடவுளை அடைந்தாலே மனிதன் சுத்தம், சுதந்தரம், சமத்துவம், சத்தியம், ஜோதி, ஆனந்தமான வாழ்வு பெற முடியும். இதுவே மனித ஜீவனின் ஆதிகால முயற்சி; இதுவே இன்றும் மனித ஜீவனின் இரகசிய முயற்சியாகும்.

ஜீவனின் ஆதர்சம் என்ன? நர வாழ்வைத் தேவ ஜீவனமாக்குவதே. அதை விளக்குவோம் :—

(1) மனிதன் தனது அகம்பாவ உணர்வில் வாழ்கிறான்; அதனால் சீரழிகிறான்; அது மாறி அவன் கடவுளுணர்வில் வாழவேண்டும். (2) மனித மனம் இருளானது; பந்த தொந்த விகாரத்திரளானது; பேத மயக்கந் தருவது; அதை வென்று விஞ்ஞான ஒளி பெறவேண்டும். (3) மனிதன் மனத்தாலும் புலன் களாலும் எத்தனையோ வகையாக சுகத்தைத் தேடு கிறான்; ஆவேசத்தில் ஆடுகிறான். சுகத்துடன் துக்கமும் கலந்தே வருகிறது. மனிதன் அதனால் மகிழ்வற்று வருந்துகிறான். கோபதாபங்களால், ஆசா பாசங்களால் தவிக்கிறான்; நோயால் நோகிறான்; அமைதியில்லாமல் சதா தீயிற்பட்ட புழுப்போற் சஞ்சலப்படுகிறான். இந்த நிலை மாறி, நிலையான உப சாந்தமும், சஹஜமான ஆனந்தமும் அடைய வேண்டும். (4) இந்த உலகமோ தேகேந்திரியங்

களையே கருதி, அதற்கு வேண்டிய தேவைகளையே தேடுகிறது. அதில் பொருமை, பேராசை, போட்டி, போர்கள் வளர்கின்றன. ஒருவரை யொருவர் நசுக்கித் தாமே உலகை அனுபவிக்கப் போராடுகின்றனர். ஒருவன் உரிமையை ஒருவன் பறிக்கிருன்; அதனுல் உண்மையான சுதந்தரம் இயலாது போகிறது; இந்த உலகிலும் நித்தியமான எல்லையற்ற சுதந்தரத்தை நிலைநாட்டவேண்டும். (5) இவ்வுடலைச் சாவும் நோவும், மூப்பும் தளர்வும் நலிக்கின்றன. இந்த உடலிலேயே அமர வாழ்வைத் துலக்கவேண்டும். இதுவே தெய்வ வாழ்வு; பௌதிக இயல்பில் தெய்வ விளக்கம்; இதுவே உலக பரிணமத்தின் இலட்சியம்.

சுரங்க மண்ணில் தங்கம் இருப்பதுபோல், இந்த ஜடத்திலும் சைதன்யம் உள்ளடங்கி யிருக்கிறது. இயற்கையிலும் கடவுள் உள்ளடங்கியுள்ளது. படிப் படியாக மாறி, ஜடமும் தெய்வ சைதன்யத்தை விளக்கவேண்டும்; இயற்கையும் இறைவனை விளக்க வேண்டும்; தனி மனிதனும் விசுவ சேதனத்தை விளக்கவேண்டும். இந்த விளக்கமே பரிணமம் என்பது. இதனுல் மனம், உயிர், உடல் ஆகிய கீழ்க் கோசங்களும் திவ்யமான மாறுதலடைவதே ரூபாந்தரம் ஆகும். மனிதனுள் உள்ள தெய்வ விளக்கத்தால் திவ்ய ரூபாந்தரம் எய்தும்; அந்த ரூபாந்தரத்தினுலேயே திவ்ய ஜீவனம் கைகூடும்; இதையே நம் பெரியார்கள் "மாறிப் பிறத்தல்" என்றனர்.

## 2. உள்ளதை மறுக்காதே!

தேவஜீவனம் வேண்டுமானுல் முதலில் தெய்வத்தை ஒப்பவேண்டும். நாஸ்திக வாதத்தால் பயனில்லை; வெறும் உலகாயதத்தாலும் பயனில்லை. புகை இருக்கும் இடத்தில் தீயும் இருக்கும்; அதுபோல் உலகம் என்ருல் அதற்குத் தலைவனை இறைவனையும் ஒப்பவேண்டும்; ஜடம் என்ருல் அதனுள் உள்ள சித்தையும் ஒப்பவேண்டும். தேகம் என்ருல் தேகியும் சேர்ந்துதான்; பிரகிருதி என்ருல் புருஷனும் கூடத்தான் இருக்கும். இரண்டையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மலரை ஒப்புக்கொண்டால் மணத்தையும் நிறத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஜடவுலகை மட்டும் நம்பி, அதை இயக்கும் தெய்வத்தை மறுப்பது தோலை ஒப்பிச் சுளையை மறுப்பது போலாகும். புலன்களால் கண்டதே உண்மை, காணுதது பொய் என்பது பொருந்ாது; புலன்கள் காணுத எத்தனையோ பௌதிக சக்திகள் உள்ளன. புலன்கள் ஓர் அளவிற்கே காணும். அக் காட்சியிலும், குற்றங் குறைகள் உண்டு. கல்லிலும், மணியிலும், விறகிலும் தீ உண்டு; அதுபோல ஜடத்திலும் ஆத்மக் கனல் உண்டு. வெள்ளித் திரையில் நிழல்கள் ஆடுகின்றன; அவையே உண்மை எனலாகாது; திரைமறைவில் ஒரு சூக்ஷ்ம யந்திரம் உள்ளது; அதை ஒரு புருஷன் இயக்குகிருன்; அவனுலேயே யந்திரம் வேலை செய்கிறது; திரையில் காட்சிப் படலங்கள் ஆடுகின்றன. அக் காட்சிகளும் சில ஜீவன்களின் நிழற் படங்களே; அவர்கள் இல்லாவிட்டால் படமே யிராது. அதுபோல், பிரகிருதியைப் பின்னிருந்து சாக்ஷியாக இயக்கும்

ஒரு புருஷன் இருப்பதை நம்பவேண்டும். அப் புருஷனே ஜீவாத்மா; நரனில் உள்ள நாரணன்; சவத்தில் உள்ள சிவம்; சடத்தில் உள்ள சக்தி; தேகத்தில் உள்ள தேகி; யாக்கையிலுள்ள சுத்தான்மா! அதுவே சத்தியம், சாந்தம், ஆனந்தம், சமரசம், சுத்தம், சுதந்தரம் தரவல்லது; ஏனெனில் இவை அதன் இயல்பு. தண்ணீரே உடம்பைச் சுத்தம் செய்ய வல்லது; ஆத்ம ஞானமே ஜீவசுத்தி தருவது.

உலகாயதம் இதை அறிய முடிவதில்லை. சாருவாகருக்கு ஜடமே உண்மை. தற்காலம் பௌதிக ரசாயன ஆராய்ச்சிகளால் மனித மூளை சில அற்புதங் களைச் செய்கிறது. அது சிந்தனை சக்தியை வளர்த்தது; பூத பௌதிக இயற்கையைத் துருவித் துருவி ஆராய்ந்து ரேடியோ, மின்சாராதிகளைக் கண்டு பிடித்துக் காலதூரங்களை வென்றுள்ளது. அஃது உண்மையைக் கண்ணுக்கு மெய்யாகக் காண முயல்கிறது; அது கடவுளைக்கூடச் சோதனைக்குழாயில் கொண்டுவர முயலுகிறது. அது மனிதனை உலகில் பலமாக ஊன்றவைக்கிறது; உலகம் உண்மை, உடல் உண்மை, தூலாதாரம் உண்மை என்பவற்றை வலி யுறுத்துகிறது. அஃது உலகறிவை விரிவாக்குகிறது; உள்ளறிவைத் தேடுகிறது. அது பௌதிக வாதத்தின் நன்மை. அதை நாம் ஏற்கவேண்டும். அஃது உலக அறிவுறுதியைப் பெருக்கி, "உலகம் பொய்" என்னும் வாதத்தை மண்டையிலடித்து வீழ்த்துகிறது; திவ்ய ஜீவனத்தின் அடிப்படையான வாழ்வை வெறுக்காது, ஏற்றுப் போற்றுகிறது. அது சாவைக்கூட வென்று நித்திய தேகம் பெற முயல்கிறது. அது காலத்தையும், இயற்கையையும், விதியையுங்கூட வெல்லப்பார்க் கிறது.

அது ஜட வியற்கையின் உண்மையை ஆழ்ந்து அறிந்துள்ளது. வாழ்வை வறட்டாமல், துறக்காமல்,

அதை அழகுபடுத்தி விசாலமாக்குகிறது. இந்த மட்டில் அதற்கு நன்றி செலுத்துவோம்.

இந்த ஆராய்ச்சி அறிவே விசாலமாகி, பௌதிக வாதிக்கு இயற்கை யுடலில் உள்ள கடவுட் பொருளை அறியும் நாளும் வரும். ஏனெனில், அறிவும் ஆராய்ச்சியும், "போ முன்னே!" என்று மனத்தை உந்துகின்றன. அனைத்திற்குந் தாயகமான தெய்வப் பொருளைத் தொட்டாலன்றி எந்த அறிவும் ஆராய்ச்சியும் நிறைவாகாது, மகிழ்வுறாது. எல்லா ஆராய்ச்சிகளும் ஒருமையைத் தேடுகின்றன; எதில் அனைத்தும் ஒன்றாகிச் சமதை பெறுமோ அதைத் தேடுகின்றன. அந்த ஒன்றை ஸயன்ஸ் ஆகாசம் (ஈதர்) என்கிறது; வேத வேதாந்தம் ஈசன், பரமாத்மன் என்கிறது; உள்ளது ஒன்றே, அதுவே தன் சக்தியால் பலவாக விரிந்து காண்கிறது என்கிறது. அந்தப் பரமாத்ம சக்தி விலாசமே உலகம். அஃது ஒவ்வொருவருள்ளும் உள்ளது. மண் முதல் மனிதன் வரையில் உள்ளது. அந்தச் சக்தி சேதனத்தின் பரிணாமமே பலவகை ஜீவராகக் காண்கிறது. எல்லையற்ற ஜீவனம், ஞானம், சக்தி இவையே அந்தப் பரமாத்ம வஸ்துவின் இயல்பாகும். அதுவே உயிர்த் தொகுப்பின் உயிராயுள்ளது; அதுவே உடலாயுள்ளது; உலகாயுள்ளது. அதுவே நானாவஸ்துக்களிலும் தானே தானாயிருப்பது. அதுவே மனிதனிடமுள்ள கடவுள்; அஃது எல்லாம் அறிந்தது, எல்லாம் வல்லது; விசுவ நாராயணனாய், நர நாராயணனா யிருக்கிறது. மனித வாழ்வில் இந்தத் தெய்வப் பொருளையே விளக்கவேண்டும்! உலகை யறிந்த பௌதிகக் கலை, அனைத்திற்கும் உள்ளமான பரமாத்ம சேதனத்தை அறிந்து, இரண்டும் பொருந்தி வாழ்வதே தெய்வ வாழ்வாகும்.

# 3. உலகை வெறுக்காதே!

ஜீவனத்தை ஒப்பாமல் திவ்ய ஜீவனமில்லை; உலகை ஒப்பாமல் விண்ணரசு, சத்யயுகம், அமர வாழ்வு என்பன இல்லை. சுவர் வைத்தல்லவா சித்திரம் எழுதவேண்டும்? "அன்னம் பிரம்மம்" என்கிறது உபநிடதம்; அன்னம் என்றால் சோற்றுலான தூலா தாரம், ஜடம், பௌதிக வுடல். உலக வெறுப்புக் கூடாது; உலகின்றி வாழ்வில்லை; வாழ்வின்றித் தேவ வாழ்வில்லை. மண்ணில்லாமற் பயிர் முளைக்காது; மரமில்லாமற் பழம் வராது; அடிவாரம் இல்லாமல் அரண்மனை எழாது. பஞ்ச பூதங்கள், மதி, இரவி, உயிர்த் தொகுதி இவை இறைவனின் எட்டு உருவங்கள் என்று சித்தாந்தம் கூறுகிறது. எல்லாம் பிரமம், எங்கும் பிரமம் என்பது வேத சம்மதம். தேகம் தேகி, சடம் சித்து, இகம் பரம் ஆகிய இரு நிலைகளும் பொருந்திய வாழ்வே திவ்ய ஜீவனத்திற்கு அடிப்படையாகும். உலகாயதன் இகமே, உடலே, பார்ப்பதே, சடமே உண்மை யென்கிறான்; மற்ற மகத்தான உண்மையை மறுக் கிறான். துறவி 'பரமே, தேகியே, காண்பானை ஆத்மாவே உண்மை; மற்றதெல்லாம் மலடி மகன், முயற் கொம்பு, கானல் நீர், சிப்பியில் வெள்ளி, தூணில் கள்ளன், கயிற்றில் பாம்பு.......போன்று வெறும் மன மயக்கம். அகமுதித்தாலே ஜகம். தன்னை யறிந்த பேருக்கு உலக வியாபாரமே வேண்டிய தில்லை,' என்கிறான். உலகாயதன் பிரம்மத்தை மறுக்கிறான். பிரமமே உண்மை, மற்றது அதில் கற்பனை என்று துறவி உலகை வெறுக்கிறான். அந்த மறுப்பும் கூடாது; இந்த வெறுப்பும் கூடாது; இரண்டும் மனப் பிழைகளேயாம். தூல இயற் கையைத் துருவி ஆராயும் ஸயன்ஸ் மூளைகூட

ஜடத்திற்கு அப்புறம் ஒரு சக்தி உள்ளது என்பதை அறிகிறது; ஐம்புலன்களுக்கு எட்டாத சூக்ஷ்ம அணுக்களை அது கண்டுபிடித்திருக்கிறது. அந்த அணுக்களால் ஒலி பரப்பல், தொலைக் காட்சி, தொலைக் கேள்வி முதலிய அற்புதங்களைச் செய்கிறது. வெறும் காதும் கண்ணும் மட்டுமன்று; காதால் ஏதோ கேட்கிறது; கண்ணால் யாதோ காண்கிறது; புலன் அறியாத யாதோ ஒன்றுள்ளது என்பதை ஸயன்ஸூம் மெல்ல மெல்ல ஒப்புகிறது; அஃது ஒருநாள் புலன்களுக்கும் மனத்திற்கும் அப்பால் உள்ள மோன சாட்சியை அறியலாம்.

அதே மாதிரி இந்தத் தூல வுலகைக் கடந்த அதி சூக்ஷ்ம வுலகங்கள் இருப்பதையும் அஃது ஒப்ப லாம். ஆதலால் பௌதிகனின் மறுப்பு அறியாமையால் வருவதே. அதேமாதிரி துறவியின் உலக வெறுப்பும், மித்யா வாதமும், உலகிலும் உண்மைப் பொருளைக் காணாமையால் வருவதேயாகும். உலகம் மனமயக்கம் என்கிறான் துறவி. அதே துறவி சமாதியில் மன மிறந்து நிற்கும்போது உலகம் இருக்கிறது; அதிலே தான் அவன் உயிர்க்கிறான். அவனுக்கு முன்பு, அவன் மனத்திற்கு முன்பு உலகம் இருந்தது; பின்பும் அஃது இருக்கும். உலகமின்றி வாழ்வில்லை; அதுவே வாழ்வின் நிலம்; ஆதாரம். சாருவாகத்தின் நாஸ்திக மும், சந்யாசத்தின் நேதிவாதமும் உண்மையின் முடி வன்று. இரண்டும் என்ன பேசினாலும் உலகும், உயிரும் இருந்தே தீரும்; உலகம் மாறி மாறி நிலைக்கும் உண்மை.

உலக போகிக்கும், ஆத்ம யோகிக்கும் வாதம் பிடிவாதம், சண்டை, பிரிவினை வேண்டியதில்லை. இரண்டும் அகம்பாவ வுணர்வேயாகும். இகத்தையும் பரத்தையும், வாழ்வையும் தெய்வ வுணர்வையும், யோகத்தையும் போகத்தையும் இணைக்கும் ஓர்

அகண்ட சேதன சக்தியுண்டு ; அதனுல் தனி மனித உணர்வு அகில ஜீவனத்துடன் இணையும். இந்த அகண்ட சேதனத்தைத் தத்துவ நூலாரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். நம் அத்யாத்ம சாத்திரங்கள் இந்த அகண்ட சேதனத்தை வற்புறுத்துகின்றன. இச் சேதனத்தை மனத்தால் அடையமுடியாது. மனங்கடந்த விஞ்ஞானத்தாலேதான் அது வரும். விஞ்ஞானத்தால் அகண்ட சேதனம் பெற்றவனுக்கு எல்லாம் ஒரு மயமாகும் ; பேதத்தொல்லை நீங்கும். சர்வாத்ம சமதரிசனம் கைகூடும். பூத பௌதிக விகாரமும் ஒன்றின் விளக்கமாகக் காணும். அப் போது உலகம் பொய்யாகத் தோன்ருது ; வாழ்வும் துன்பக் கனவாகத் தோன்ருது. ஜீவ சேதனம், விசுவ சேதனம் இரண்டிற்கும் அப்பால், பரமாத்ம சேதனம் உள்ளது ; அதை விஞ்ஞானத்தால் அடைந் தால் மித்யா வாதத்திற்கே இடமிராது ; எங்கும் அதன் மயம், அதன் இன்பம், அதன் ஆடலாகக் காணலாம் ; ஆனுல் அரைகுறையான மனத்தால் அணுகினுல் அது மனத்தை உண்டுவிடுகிறது. மனம் அந்த அகண்ட மோனப் பொருளில் லயித்துப் போகிறது;அதனுல் அஃது உலகம் இல்லை,பொய் என்ற முடிவுக்கு வருகிறது. அகண்ட விஞ்ஞான சேதனம் கேவலம் மனோ லயத்தினுலாவது மனோ நாசத்தினுலா வது உண்டாகாது. மனம் மௌனப் பொருளில் லயித்துப்போய் ‘அதுவே இருப்பது ; உலகம், வாழ்வு முதலியன இல்லை’ என்னும் நேதி வாதத்திலிருந்தே உலகை வெறுக்கும் துறவு முளைத்தது. ‘மித்யாப் பிரபஞ்சத்தில் நமக்கென்ன வேலை ; இது பொய், அநித்தியம், கானல் நீர், அசுகம்’ என்று அது பிரகிருதியுடன் முரண்பட்டொதுங்கியது. அதனுல் சித்துக்கும் ஜடத்திற்கும், தெய்வ நிலைக்கும் வாழ் வுக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டது.

பௌத்த மதம் 'வாழ்வு ஒரு நொடித் துன்பக்கனவு, க்ஷணிக வேதனை, க்ஷணமங்குரம்' என்றது. அதனால் "வாழ்வு மாயம், நாம் மண்ணுவது திண்ணம், ஆதலால் இதைக் கட்டியழுவானேன்?—" என்ற எண்ணம் மனிதர் மனத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டது. காஷாயமே வாழ்வின் முடிவாக மாந்தர் கருதினர். 'வினையால் பிறவி வருகிறது; பிறவியால் துன்பம் வருகிறது; பிறவியை அறவே ஒழித்தலே இன்பம்; இந்த உலகம் ஒரு விகாரக் காடு; இதில் அணுவளவும் சுகமில்லை; இந்த நாய்வாலை யாரும் நிமிர்த்த முடியாது; இதை விட்டுப் பரலோகம் சென்றாலே சுகமுண்டு. பூலோகத்தை உதறித் தள்ளி, வைகுண்டம், பிரம்மலோகம், கோலோகம் இவற்றிலேயே நித்திய சுகத்தைக் காணலாம். ஆதலால் இந்த உலகின் முகத்தில் விழியாமல் காஷாயம் வாங்கிக் கொண்டு ஓடிப்போய், காடு மலைகளில் சமாதியில் ஆழ்ந்து, பிரம்ம நிர்வாணம் பெறுவதே உயர்ந்த இன்பம். அப்படிப் பெற்றவர்களே மஹான்கள்' என்ற எண்ணம் நமது சமுதாயத்தைப் பலமாகப் பற்றிக் கொண்டது. இந்தக் கொள்கையை உபதேசிக்க எத்தனையோ துறவிகள், மடங்களைக் கட்டிக்கொண்டு, ஆசாரிய பதவி வகித்தனர். எத்தனையோ சாமியார்கள் 'உலகை விடு, உன்னை யறி; போ மோட்சத்திற்கு! வாழ்வு மாயம்' என்று உபதேசித்தனர்.

இந்த உபதேசத்தால் வந்த அபாயமே நாம் இன்று உலகில் தாழ்மையுற்றிருப்பது. துறவு மனிதனுக்கு ஆத்ம வொளி காட்டியது; நம் அத்யாத்மப் பொக்கிஷங்கள் துறவின் வரப்பிரசாதமே யாகும். பௌதிகர் எல்லையற்ற உலகறிவைத் தந்தனர்; துறவிகளும் மிக வுயர்ந்த உள்ளறிவைத் தந்தனர்; அதற்காக நன்றி; ஆனால் உள்ளறிவால்

## உலகை வெறுக்காதே!

உலகை வெறுத்தோடுவது பிசகு; உள்ளறிவால் உலகை வெல்லவேண்டும். ஸ்வராஜ்ய சித்தியால் சாம்ராஜ்ய சித்தி பெறவேண்டும். நான் பிரம்மம் என்பதுடன், எல்லாம் பிரம்மம் என்னும் உணர்வு பிறக்கவேண்டும். வாழ்வை அஞ்சி ஓடுவதற்குப் பதிலாக வென்று ஆளவேண்டும்.

ஜீவனை ஒதுக்குவதற்குப் பதிலாகப் புதுக்க வேண்டும். அதுவே தேவ ஜீவன ரகசியமாகும்.

# 4. இரண்டிற்கும் பொருத்தம்

இரண்டு ஓட்டங்கள் சேர்ந்து மின்சாரமாகின்றன—நேர் ஓட்டம், எதிர் ஓட்டம். அதுபோலவே சித்தும் ஜடமும், ஸத்தும் அஸத்தும் உண்மைப் பொருளின் இரண்டு தத்துவங்களாகும். பௌதிகன் ஜடத்தை மட்டும் உண்மையென்கிறான்; துறவி சித்தே உண்மை யென்கிறான். இருவரும் மனோ நிலையிலிருந்து ஆராய்வதால் இந்தப் பிளவும் மறுப்பும் வெறுப்பும் உண்டாகின்றன. மனத்தினும் உயரச் சென்று விசுவசேதனம் பெற்றால், அந்நிலையில் சித்தும் ஜடமும், ஸத்தும் அஸத்தும், ஏகமும் அநேகமும் பொருந்தக் காண்போம். அந்நிலையில் இரண்டும் நித்தியமாகவே காணும். ஒருமை யுணர்ச்சி இயல்பாக உண்டாகும். அவ்வுணர்வால் உடலும் உயிரும், பூவும் நாரும்போல ஸத்தும் அஸத்தும் சேரக் காண்போம். மனம் அது தன்னைப் பலவாகத் தோற்றும் கண்ணாடிபோலும். பிராணன் அது பௌதிக தேகத்தில் உருக்கொண்டிருக்கும் சாதனமாகும்.

பிரம்மம் ஒன்றே; எல்லாம் அதுவே; அது ஸதஸத்; விலாஸமானது. அது நிச்சல மோனத்தில் சுத்த சித் ரூபமாக விளங்குகிறது. அதே பிரம்மமே சகுணமாக, கிரியா சக்தியுடன் விளங்குகிறது. மோனத்திலிருந்தே சிருஷ்டி வாசகம் உண்டாகிறது; நிச்சல சாந்தமே கலங்கா வுறுதியால் கருமத்தைத் தாங்கி அதற்குத் திறமையளிக்கிறது. உள்ளே பரம சாந்த நிலை பெற்றவர்கள் அபாரமான கிரியா சக்தி பெறுவார்கள். உபசாந்த மோனமடைந்த யோகி உலகைத் துறக்கவேண்டியதில்லை; வினையை ஒதுக்க வேண்டியதில்லை. ஞானமும் கர்மமும், சாந்தமும் செயலும், மோனமும் முயற்சியும் ஒன்றுக்கொன்று விரோதமானவை யன்று. அமைதியான பூமியின்

மோனத்தில் வேரூன்றி மரம் தழைத்தோங்குகிறது; அமைதியான உள்ளத்தில் ஊன்றி உலக வாழ்வும் அப்படியே தழைத்தோங்கவேண்டும். உலக வாழ்வும் பிரம்மமே; பிரம்மம் தன்னை உண்மைக்கு உண்மை விசாலிக்கிறது; அதனிடம் மித்யா பாவனை கிடையாது. வேருக்குக் கிளை விலக்காகாது. சுத்தப்பிரம்மத்திற்கு உலகம் நிஷேதமில்லை; ஏனெனில் அதுவே உலகாயிருப்பது; ஸத ஸத்தும், நிர்குண-சகுணமும், நிஷ்கிரிய-கிரியையும் ஆகாசமும் காற்றும், கடலும் அலையும் போல ஒன்றுக்கொன்று அனுஸரணையானவை. இவற்றைப் பிரித்து வெறுப்பது இருமன விகாரமே யாகும். மன விகாரங்களைத் தாண்டி விஞ்ஞான நிலையிலிருந்து பார்த்தால், ஸத்து அஸத்து, ஆத்மா உலகம், எல்லாம் ஒரு மயமாகக் காணும்; பிரம்மமும், சக்தியும், உலகமும் சத்தியம் என்பது புலனாகும். மாயா வாதத்திற்கே இடமிராது. உலகம் பொய் என்பதே பொய். உலகமெல்லாம் பிரம்ம மயம். சுத்தப் பிரம்மமும் விசுவப் பிரம்மும் பொன்னும் நகையும் போலாகும். பொன் உண்மையானால் நகை பொய்யாகுமா? உண்மையான அத்வைதம் சர்வம் பிரம்ம மயம் என்பதை விளக்கும்; அது 'பிரம்மம் வேறு, உலகம் வேறு; உள்ளது பிரம்மமே, உலகம் இல்லது' என்று பிரிக்காது; ஒரு நாணயத்தின் பூவும் தலையும்போல் இரண்டும் ஒன்றெனவுணரும். மோனப் பிரமத்தை யடைந்தவர் உலகில் தெய்வ நிலையைக் காண்பர். உலகை மாயம் என்று உதறித் தள்ளும் வறட்டுத் துறவு பூரண ஞானமாகாது. மோன தியானத்தால் சாந்தமடைந்த புத்தர் அயராது அன்புப் பணி செய்தார். உலகம் மாயை, பொய், கனவு, முயற் கொம்பு, வந்தியாபுத்திரன் என்பதெல்லாம் வெறும் மாயாவாத எத்துக் கடைகள்; பேத புத்தியின் பிதற்றல்கள். நாம் பார்க்கும்

உலகு பொய்த் தோற்றமன்று. பிரம்மம் எப்படி உண்மையோ அப்படியே பிரம்ம மந்திரமான உலகும் உண்மையாகும். சுவாமி உண்மையானால் கோயிலும் உண்மைதான். பூரண ஞானம் மலர்ந்தால் எல்லாம் பிரம்மம், உலகும் பிரம்மம் என்பதை உணரலாம். உள்ளது இல்லது என்ற பிரிவினையின்றி தானே தானான ஒன்றே உலகாகவும் விளங்குகிறது. இரண்டிற்கும் பகையில்லை, பொருத்தம் உண்டு.

---

# 5. ஜீவ லட்சியம்

அ முதல் ன வரையில் எல்லாம் பிரம்மமே; அதைத் தவிர வேறென்றும் இல்லை. ஸத்து, அஸத்து, உள்ளது இல்லது, பிரமேயம் அப்ரமேயம், உரு அரு, சேதனம் அசேதனம், ஜீவம் அஜீவம்— எல்லாம் பிரம்மமே. அதனின்றே எல்லாம் வந்து, வளர்ந்து அதற்கே எல்லாம் திரும்பிச் செல்கின்றன. அது வாய்மனங் கடந்தது; அதை இன்னது, இப்படி என்று யாரும் அளவிட்டுச் சொல்லமுடியாது. இதுதான் பிரம்மம், மற்றது மித்தை என்று பகுத்துச் சொல்வதும் பிசகு. வேத வேதாந்த முனிவர் சச்சிதானந்தர் பிரம்ம ஸாட்சாத்கார மடைந்த பிறகும், ஓர் அஸத்துத் தத்துவம் இருப்பதாகக் கண்டனர்; வித்யா தத்துவம்போல் அவித்யா தத்துவமும், ஏகத்வம்போல் அநேகத்வமும் பிரம்மமே என்று கண்டனர். ஒன்றின்றி நானுபாவனை யில்லை; நானுபாவனையின்றி ஒன்றிற்கு விளக்கமில்லை. வித்தையால் கடவுளின் ஒருமையை அறிகிறோம்; அஃதின்றிப் பன்மையுணர்வு அறியாமை இருளில் கலந்து குலைந்திருக்கும். பன்மையின் தாயகமான அவித்தையை மறந்தால், வித்தையின் ஜோதியால் கண்கூசி, அஃது ஒளிரும் நிலத்தைப் பார்க்க முடியாது போகும்.

உலகம் பொய், வாழ்வு மாயம் என்னும் கட்டுக் கதைகள் பிற்காலம் உண்டானவை. அவை ஒரேயடியாகப் பரமாத்மானந்தத்திற்குத் தாவி, அதிலேயே லயித்துப் போகச் சில துறவிகள்கொண்ட அவசரக் கொள்கை. பரம சாந்த புருஷர்களான வேத ரிஷிகள் எங்கும் பிரமம் கண்டனர். ஸத்து அஸத்து, விண் மண், வாழ்வு அனைத்திலும் இறைவனைக் கண்டனர். அவர்கள் வாழ்வை வெறுக்கவில்லை; ஸத்தே உண்மை, அஸத்து பொய் என்னவில்லை.

உலகம் பொய்யென்னும் மாயா வாதமும், கடவுள் பொய்யென்னும் நாத்திக வாதம் போலப் பொருளற்றதாகும். உயிர் வாழ்வாகப் பொலிவது கடவுளே ; அக் கடவுளைக் கண்டு கலப்பதே உயிரின் கருத்து.

தெய்வ நிறைவும் தேவஜீவனமும் பெறுதலே மானிட வாழ்வின் நோக்கமாகும். மனிதன் தெய்வச் சிகரத்திற்கு உயரவேண்டும். ஆனால் மேலே செல்லச் செல்லக் கீழ்ப்படிகளை மறக்கக்கூடாது; அலட்சிய மாக ஒதுக்கக்கூடாது. மனோ நிலை யடைந்தவன் தூல நிலையை அலட்சியம் செய்வது பிழை. அத்யாத்ம நிலை பெற்றவன் மனோ நாசமும், உயிர் வெறுப்பும் போற்றுவது கூடாது ; ஏறிய ஏணியைத் தட்டிவிட்டு உடைக்கக்கூடாது. தூலாதாரம் வாழ்வின் அடிப் படை, வீரியகோசம் சுவர், மனம் முகடுபோலும். மாடியில் ஏறியவர் கீழிருக்கும் பகுதிகளை இடித்துத் தள்ளுவது அறிவாகாது. நாம் ஏழு மாடி ஏறினாலும் அஸ்திவாரத்தை மறக்கமுடியாது. எவ்வளவு உன்னத ஞானசித்தி பெற்றாலும் உடல் உயிர் மனத்தை வெறுக்கக்கூடாது. மூன்றையும் தெய்விக மாறுதல் பெறச் செய்யவேண்டும்; இன்றேல், பூரண சித்தி வராது. பிரம்மம் பல படிகளில், உடல் உயிர் உலக வாழ்வு அனைத்திலும் நிறைந்து பூரணமாயிருப்பது போலவே, பிரம்ம ஞானமும் சித்தியும் பரிபூரணமா யிருக்கவேண்டும். பரமே நினைந்து இகத்தை மறக்கக் கூடாது. உயிர், உலகு, இறை ஆகிய முப்பொருளின் தொகுதியே வாழ்வாகும். உடல் உயிர் உலகை வெறுத்து, ஸந்யாஸி பிரமைக்கியம் பெற முயலு கிறான். இது பிசகு. முக்த புருஷர்கள் இப்படி உலகை வெறுத்தால் அது நோவும், சாவும், மடமை யும், அசுரக் கொடுமையும் நிறைந்ததாகும்.

ஞான தீரர்கள் ஒதுங்கி நின்றால், உலகம் அஞ்

ஞானக் காடாகும். ஆத்ம சித்திபெற்ற தீரர்கள் உலக வாழ்வைப் பொலிவுறப் போற்றவேண்டும். மாயா வாதம் தானுகிய ஒன்றே உண்மை, மற்றதெல்லாம் பொய்க் குப்பை என்றொதுக்கி, அனன்ய பாவனையில் இருக்க வற்புறுத்துகிறது; வாழ்வை மாயக் கனவு என்று தப்பியோடுகிறது. இதனுல் ஒரு பயனுமில்லை. இப்படித் தப்பியோடுவதால் பரமாத்மாவுக்குப் பய னில்லை. அஃது எப்போதும் சுத்தமுக்தமோன நிலையில் நிர்விகாரியாயிருக்கிறது. உலகிற்கும் இந்த வறட்டுத் துறவால் ஆவதொன்றுமில்லை. பெரியார் உலகை மாயை என்று ஒதுக்கினுல், அஃது என்றும் பந்த தொந்தங்களில் இடர்ப்படுகிறது. இது சுயநலத் துறவு; தனக்கே சுகந்தேடுந் துறவு. உலகே இல்லை யென்னும் மாயாவாதி அதைத் துறப்பதும் பொய் தான். இல்லாத உலகை, இல்லாத மனத்தில் மயங்கி, இல்லாத கொள்கையுடன் துறவி துறப்ப தாகச் சொல்வதும் விநோதமே! துறந்தோடிப் போனுலும் மாயம் நம்மை விடாது பற்றிக்கொண்டு, "பேதையே, எனது இரகசியம் உனக்கென்ன தெரியும்?" என்று சிரிக்கிறது! நிர்வாண வாசலில் நின்று புத்தர் "உலகில் இன்னும் பந்தத் துயராலும் அகங்காரத்தாலும் ஒரு ஜீவன் வருந்தினுலும், நான் நிர்வாண வாசலைத் தாண்டி உள்ளே போக மாட்டேன்" என்று திரும்பினுர். அதுபோல், கோடானுகோடி ஜீவர்கள் உலகில் துன்பப்படும் போது, தனக்கு மட்டும் முத்தி தேடி ஓடிப்போவது சுத்த சுயநலமாகும். கடவுளே உலகை மேற் கொண்டு நடத்துகிருர். அப்படியிருக்க நாம் மட்டும் அதை அலட்சியம் செய்வது அகம்பாவமாகும். இறைவனைப்போலப் பூரணம் பெறவேண்டும்: அதற்கு அவனைப்போலவே உயிர் உலகு இரண்டுட னும் வாழவேண்டும். இதுவே ஜீவலட்சியம்.

# 6. மனிதனும், உலகமும்

உலகம் மன மாயமன்று, வெறுமையன்று; வாழ்வு கனவன்று; இரண்டும் உண்மையானவை. இந்த வுலகில் உயிர் மேன்மேலும் வளர்ந்து மனிதப் படியை அடைந்துள்ளது. தேவ ஜீவனத்திற்கு மேலோங்கிச் செல்வதே இனி மனிதன் கடமை யாகும். அதுவே மனித வாழ்வின் குறிப்பாகும். உள்ள பொருள் சச்சிதானந்தம்; அஃது எங்கும் உள்ளது; உடல் உயிர் மனம் ஆகிய கீழ்ப்படிகளிலும் அது பரவியுள்ளது; அது தானே தானுனது; ஜீவன் மூலம் விளங்குவது. அதைக் கீழ்ப்படிகளிலும் விளக்கி வாழ்வை அதன் மயமாக்குவதே நமது லட்சியம். அந்தச் சச்சிதானந்தத்தையே மனிதான்மா தேடுகிறது. அஃது அறிவிற் கெட்டாத பரம்பொருள். அதுவே உலகாகவும், வியக்தி ஜீவனுகவும் தன்னை விளக்குகிறது. அஃது இறங்கி வரவர ஜீவசேதனம் உயர்கிறது. அஃது உயிர் நிலையிலிருந்து மனோ நிலைக்கு உயர்ந்துள்ளது. மனம் ஜீவ பாகங்களைத் தொகுத்து விஞ்ஞானத்திலுள்ள தெய்வச் சிற்பிக்கு அளிக்க வேண்டும். அந்தச் சிற்பிதான் நமது மானிடத்தைத் தெய்வ வடிவாக்க முடியும். அவனே நமது வியக்தி ஜீவனை விசுவ ஜீவனுக்கமுடியும். ஜீவன், ஜகத்து இரண்டும் தெய்வ விளக்கத்திற்கு மிகவும் அவசிய மானவை. உலகம் இறைவன் நிறைவே; அவனே எண்ணரிய சராசரங்களாகக் காலதேச வர்த்தமானங் களிலெல்லாம் பரவி யிருக்கிறுன். தனி மனிதன் கால தேசத்திற்குக் கட்டுப்பட்டவன். உலகம் அவனுக்கு நிலைக்களன். அவன் விசுவ மானிடனுலேதான் அகண்ட சேதனனை இறைவனைத் தன்னில் விளக்க முடியும். உலகை மறுத்தால் மனித லட்சியம் கைகூடாது. உயிரும் உலகும் மனிதனுடன்

பொருந்தியுள்ளன. உலகின் பல பான்மையான தோற்றத்தையும், அதன் இரகசியத்தையும் மனிதன் அறியவேண்டும். விலங்குகள் பசி தாக மோகங்களைத் திருப்தி செய்வதுடன் மகிழும். மனிதன் உடல் தேவையை நிரப்புவதுடன் திருப்தியாக முடியாது. அவனிடம் எப்போதும் மனக் குறையுண்டு; உன்னத லட்சியமான தெய்வத்தன்மை பெற்றாலே அக்குறை நீங்கும். மனிதன் மனு, மானவன், நினைப்பவன் மனோமய புருஷன். அவனே தெய்வ விளக்கத்திற்கு அருகன். அவன் தனக்கு மேலுள்ள ஆத்ம தத்துவத்தைத் தேடுகிறான். அத் தேட்டமே தேவ ஜீவனத்திற்கு அவனை உந்துகிறது. பிணி, மூப்பு, தளர்வு, கவலை, துயர், சாக்காடுகள் அவன் முயற்சியை எதிர்க்கின்றன. இவற்றை ஒதுக்கித் துறப்பதல்ல, வெல்வதே வீரம். இவற்றின் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. எல்லாம் மர்மமா யிருக்கிறது. உள்ளுண்மை எளிதில் விளங்குவதில்லை. ஆனால் அனந்த சக்தி, ஞானம், சுதந்தரம், அன்பு, அழகு, அமரத்தன்மை, இவற்றை மனிதன் பெற ஆவலாகவே யிருக்கிறான். உலகம் கனவு, தீமை என்று ஒதுங்கி வாழ்வதால் இவற்றை அடையமுடியாது. இயற்கையை வெல்லவேண்டும். துயரை இன்பமாக, தீதை நலமாக, பொய்மையை மெய்மையாக, நரத்தை அமரமாக மாற்றவேண்டும். இந்த மாறுதலாலேதான் உலகம் விண்ணாகும், வாழ்வு இனிதாகும்.

எந்த ரசவாதத்தால் இந்த மாறுதல் இயலும்? உண்மை யறிவாளர் உலகப் புதிரை நழுவ விடக் கூடாது. ஆழ்ந்து பார்த்து அதற்கு விதாயகம் கண்டு பிடிக்கவேண்டும்.

---

# 7. இருமை, ஆணவம்

எல்லாம் சச்சிதானந்தமே; குறை, தீமை, துயர், சாக்காடுகள் உடலுக்கு மெய்யாகத் தோன்றினும், உண்மையில் கற்பனையாகவே யிருக்கவேண்டும். பைபிள், ஈடன் சுவர்க்கத்திலிருந்து ஆதாமும் ஏவாளும் வீழ்ந்ததாகச் சொல்லுகிறது; ஆதாம் புருஷன், ஏவாள் பிரகிருதி. ஏவாளை உலகியல்பு வசப்படுத்தி வாழ்வுக்கனி யுண்ணச் செய்கிறது. அவள் கணவனுக்கும் பேத புத்தி உண்டாக்குகிறாள். இருவரும் குண தொந்த விகாரங்களிற் சிக்கி இடர்ப் படுகிறார்கள். பேத புத்தியற்று விசுவ சேதனமடைந்த பிறகே மனிதனுக்கு விடுதலை கிடைக்கிறது. அப்போது சுக துக்கங்களைச் சமானமாகப் பார்க்கும் சமதை ஏற்படுகிறது. அப்போது வாழ்வுக் கனி யுண்டால் கெடுதல் செய்வதில்லை.

சர்வம் சச்சிதானந்தமயம் என்றறிந்தால், இரு விகாரங்களும் ஒருமையின் இரு பாங்காகவே காணலாம். துன்பமென்பதும் இன்பத்தின் மறு பக்கமாகவே தோன்றும். இரு விகாரத்தை வெல்ல நிர்விகாரமான பொருளை உணரவேண்டும். அப்போது சாவும் நித்திய வாழ்வில் ஒரு மாறுதலே யாகும்; நோவும் இன்பத்தின் எதிர்மோதலேயாகும். நன்மை தீமைகளின் இந்த உடன்பாட்டை அறிந்தாலே அமைதியுண்டாகும்.

அகங்காரத்தினாலேதான் சுகதுக்கப் பிணைப்பு கள் உண்டாகின்றன. அகங்கார வுணர்வின்றி உண்மையை ஆழ்ந்து அறியவேண்டும். அகங்கார நிர்ணயங்கள் உள்ளமட்டும் உண்மை புலப்படாது. உலகம் எப்படிப் போனாலென்ன, தான் சுகமாக வாழவேண்டும் என்பது பிசகு. வாழ்வின் இரகசியம் தனிமையன்று; இரு விகாரங்களன்று; உயிரின்

முடிவு சாவதன்று; உணர்வின் செயல் இன்ப துன்ப விகாரமன்று; மனவெழுச்சியின் ஒளியும் நிழலும் சுகதுக்கமன்று; அறிவின் இரு முனைகள் மெய்யும் பொய்யுமன்று. அப்படியானால் உலகம் உருப்படாது; வாழ்வும் சாரமில்லை என்று சங்யாசம் வாங்கிச் செல்வதே பாங்காகும்.

உண்மை வேறு; நமது மாமூல் மனம் பூர்வ வாசனைகளைப் பற்றிக்கொண்டு உண்மையைக் குழப்புகிறது. டார்வின் குரங்கு முற்றி மனிதனானதாகச் சொல்லுகிறார். ஒரு காட்டுக் குரங்கு மனித நிலையை ஊகிக்க முடியாது; தனது வர்க்கமே இப்படி மனிதராகி, அறிவு பெருகி, இயற்கையை வென்று, காடு திருத்தி, வீடமைத்து, கப்பல், ரயில், ஆகாயவிமானம், தந்தி முதலிய சாதனங்களால் நாகரிகமாக வாழ்வதெனக் குரங்கு அறியமுடியாது. அதுபோலவே சாதாரண மானிடன் உணர்வு முதிர்ந்த தெய்வ மானிடத்தின் பூரண நிலையை அறியமுடியாது. துன்பக் கலப்பே யில்லாத இன்பம், நிழலே யில்லாத ஒளி, சாவே யில்லாத வாழ்வு, குறையே யில்லாத நிறைவு— இவற்றை மனித மனம் வேண்டுகிறது; ஆனால் அந்தப் பரிபூரணானந்த நிலையை அடைய முடியாதெனச் சந்தேகிக்கிறது. பிரம்மம் சச்சிதானந்தம்; அதுவே எல்லாம். அதுவே அனைத்திலும் உயிராயிருப்பது; அனைத்தின் சாரமும் அதுவே யெனின் எல்லாம் அதன் ஆனந்தமென்பதே உண்மையாகும். உணர்வின் சாரம் அந்த ஆனந்தமே; நினைப்பின் பொருளும் அதன் உண்மையே; செயல்களின் பயனும் அதன் நன்மையே யாகும். அகந்தைக் கட்டு மானம் ஒழிந்தால், வாழ்வின் உண்மை துலங்கும்; தெய்வமலர்ச்சி யுண்டாகும்; ஆனந்தம் உணர்வாகும்.

---

# 8. வேதாந்த ஞான விசாரம்

உலகில் சச்சிதானந்தத்தின் காரியமென்ன? அதற்கும் உலகப் பொருள்களுக்கும் உறவென்ன? அகங்கார விடுதலை பெற்று அதை எப்படி அடைவது? தெய்வ ஜீவனத்திற்கு இந்த ஆராய்ச்சி அவசியமாகும்.

நாம் புலன்களால் மட்டும் பார்த்தால், ஜடவுலகும் அதன் காட்சிகளுமே தெரியும். புலன் மனம் இரண்டிற்கும் அப்பால் சென்று நோக்கினுல், தெய்வக் காட்சியும் தேவ ஜீவனமும் உணர்வாகும். புலன்வழி நிற்கும் மனம் ஆழ்ந்த பார்வையற்றது; அதன் முடிவுகளில் பிழை அதிகம். அதற்குமேல் புத்தியுள்ளது; புத்தியினுலேதான் மனிதன் பிற வுயிர்களுக்கு மேலாக விளங்குகிருன்.

ஆழ்ந்த புத்தி விசாரத்தால், உள்ளாராய்ச்சி உண்டாகிறது. புத்திக்கு இருசெயல் உண்டு; ஒன்று கலப்புள்ளது; மற்றென்று தூயது—மிச்ரபுத்தியின் செயல் புலன் வழியே சென்று புறப்பொருள்களுடன் கூடியது. அது பொருள்களை அரைகுறையாக, மேலெழுந்த வாரியாக அறியும்; சுத்த புத்தி உள்ளாழ்ந்து சென்று பொருள்களின் வேரை அறிவது. அது வெளிப்பகட்டில் மயங்காது. ஒவ்வொன்றின் அந்தரங்கத்திலும் புகுந்து உண்மையையறியும். மிச்ர புத்தியால் வெளிப் பார்வை, வெளி விவகாரம், வெளிப் பொருளறிவே வளரும். சுத்த புத்தியால் உட்பார்வை, ஆத்ம விசாரம், உட்பொருளறிவு வளரும். உள்ளறிவே அறிவு. எல்லா அனுபவங்களுக்கும் அதுவே தாயகம். நாம் புலனுல் காண்பதுகூட மனத்தைப் பொருந்திய பிறகே இந்திரியங்களுக்கு உணர்வாகும்.

மனதை ஆரும் இந்திரியம் என்பர். மனம் ஒரே இந்திரியம் என்றும் சொல்லலாம். பஞ்சேந்திரியங்களின்றியே மனம் செயல் புரியவல்லது.

அவை மனத்தின் அங்கங்களேயாம். மனம் வெளிச் சென்று வெளிப் பொருளில் திரிந்தால், விகார விருத்தி உண்டாகிறது; மனம் உள்ளே திரும்பி உள்ளாராய்ச்சியில் ஆழ்ந்தால், சித்தவிருத்தி தோன்றுகிறது. மனம் புத்தி இரண்டின் முடிவும் நிறைவன்று; ஏனெனில் உள்ள பொருள் இரண்டையும் கடந்தது. ஆத்மா, பிரமம் என்னும் அப்பொருள் எங்கும் எல்லாமாய் நிறைந்தது. அதுவே ஆதாரம், ஆதேயம்; அதுவே கண், காட்சி, காண்பான். அதைப் புத்திக்கும் மேலோங்கிய ஒளியறிவால் அறியலாம்; அறிவதே அதுவாய் இருப்பது. அதைத் தன்னுள் அறிவதே எங்கும் அறிவதாகும். இதுவே பழைய வேதாந்த உண்மையின் அஸ்திவாரமாகும். இந்த உண்மையைப் புலனாலும், புலன்வழி மனத்தாலும் அறிய முடியாது; அருளறிவாலேதான் இதை உணர முடியும். அருளறிவு நம்முள் உள்ள சுத்த முக்த சொரூபத்திற்கு வழி துலக்கும். அதுவே முடிவான பொருள். அது இருப்பதாலேயே நாம் இருக்கிறோம்; உலகும் உள்ளது.

"நான் அவன், அது நீ; இதெல்லாம் பிரம்மம்" என்னும் உபநிஷத் வாக்கியங்கள் அந்தச் சொரூபத்தையே குறிக்கும்.

உபநிஷத் முனிவர் அருளறிவால் அனுபவங் கண்டு, சொல்லால் முடிந்ததை விளக்கினர். பின் வந்தவர்கள், வெறும் படிப்பு வல்லபத்தால், மூளை யறிவால், ரிஷி வாக்குகளை மனம்போனபடி குழப்பினர். அதனாலேதான் பல தத்துவக் கட்சிகள் ஏற்பட்டன. அருளறிவால் அறிந்தால் உள்ள பொருள் ஒன்று; அதுவே உலகம், உயிர்; அதுவே எங்கும் என்பது புலனாகும்.

# 9. சுத்த வஸ்து

எல்லையற்ற பிரம்ம சக்தி எங்கும் நிறைந்தது; அஃது எல்லையற்ற இடத்தில், என்றுமுள்ள காலத்தில் பொலிகிறது; அஃது அனந்த ஸத்வம், அனந்த கர்ம முடையது. உலகிலுள்ள அகம்பாவங்களெல்லாம் சேர்ந்தாலும் அதை எட்ட முடியாது; கற்பகோடி காலங்களெல்லாம் அதன் ஒரு நொடித் தூசியே யாகும். எண்ணரிய நட்சத்திரக் கூட்டங்களெல்லாம் அதற்கு ஒரு சிறு கொசுக்கூட்டம் போலாகும். அற்ப அகங்கார விருத்திகளிலிருந்து பார்வையை உள்ளே திருப்பித் தேடினால், இந்த உண்மை புலப்படும். நமது அகங்காரத்தால் இந்த அகண்டப் பொருள், அதனால் இயங்கும் உலகம் எல்லாம் நம்மைச் சுற்றியே, நமக்காகவே, நமது சௌகரியத்திற்கே நடப்பதாக நினைக்கிறோம். நம் ஆசை, ஆவேகங்கள், நியமங்கள் ஆகியவற்றை நிறைவேற்றவே அஃது ஏற்பட்டதாகக் கருதுகிறோம்; அது பிசகு. சுத்த வஸ்து நமக்காக வன்று, தனக்காகவே இருக்கிறது.

நமது நோக்கம் நிறைவேறவன்று; அது தனது எல்லையற்ற லட்சியங்களையும், விருப்பங்களையும், நிறைவேற்றவே இருக்கிறது. தனது ஆனந்த பூர்த்திக்கே அது விளையாடுகிறது. எறும்பு முதல் இரவிவரையில் பிரம்ம சக்தி நிறைந்திருக்கிறது. சிறிது பெரிது என்பது உருத்தோற்றமே. அந்தராத்மா எங்கும் ஒன்றே. எளியாரிடம் உள்ள அதுவே வலியாரிடமும் உள்ளது. நாமே பெரியோம், நாமே முதன்மை, நமக்காகவே உலகம் இருக்கிறது; நமக்கு அன்னியம் எதுவும் இல்லை; தானல்லாதது மாயை, பொய் என்பன நிறைவான அறிவாகா. இந்தத் தனிச் செருக்கை ஒழிக்கவேண்டும். உலகை நடத்தும் மஹா சக்தியே நம்மையும் நடத்துகிறது என்று

நினைக்கவேண்டும். உலகை மறுப்பது அந்தச் சக்தியை மறுப்பதாகும். அதனால் வாழ்வின் முழுப் பயனும் கிடைக்காது.

நாம் உலக சக்தியின் அகண்டத் தன்மையின் ஒரு கூறு; அந்தச் சக்தியின் ஆடலில் நமக்கும் பங்குண்டு; அதை நிறைவேற்றுவதே வாழ்வின் நிறைவேற்றம். இந்தச் சக்தி சும்மா இருந்தபடி யிருப்பதன்று; இஃது எல்லையற்ற கர்ம சக்தி; உலகில் எதுவும் இருந்தபடி யிருப்பதில்லை; எல்லாம் செயல் புரிகின்றன. இந்தச் சக்தி அனைத்தையும் செயலுக்குத் தூண்டுகிறது. அனந்த வஸ்துவானது சிருஷ்டி யுலகை மறந்து, எங்கோ லயித்துத் தனியாகச் சும்மா இருக்கிறது என்பது எனது ஆராய்ச்சிக்குப் பொருந்தவில்லை. அப்படி அது நிராமயமாக, நிர்விகாரமாக, நிஷ்ப்ரபஞ்சமாக, தானே தானாகத் தனித்திருந்தால், எல்லாம் சூனியமாகவே முடியும்.

காற்று ஆகாசத்திலிருந்து வந்து அதிலேயே அடங்கிக் கலந்து போவதுபோல், பிரபஞ்சம் சுத்தப் பிரம்மத்திலிருந்து வந்து அதிலேயே அடங்கிப் போகிறதென்று வேதாந்தம் சொல்லுகிறது. அப்படியானால் நித்தியமான சுத்தப் பிரம்மத்தினின்று வரும் வஸ்து அநித்தியமல்ல, கனவல்ல, பொய்யல்ல. அஃது அந்த வஸ்துவைப்போல் உண்மையாகவே யிருக்கவேண்டும்; அப்போது மாயாவாதத்திற்கே இடமில்லை. பிரம்மம் ஸ்தாணுவாயிருக்கவும் இடமில்லை; ஏனெனில் அதுவே உலகாகிறது; ஜீவனாகிறது. இடமெல்லாம் அதன் புறவிளக்கம்; காலம் அகவிளக்கம். இடம், காலம், பிரம்மவிகாசம் எல்லாம் உண்மையே. முக்காலம் என்பது ஒரே காலமே; கால இயக்கங்களெல்லாம் ஒரே தொடராகும்.

இறந்த காலம், வருங்காலம் இரண்டும் அத் தொடரில் சேர்ந்து எப்போதும் நிகழ்காலமாகவே

யிருக்கின்றன. எப்போதும் உள்ள நிகழ்காலமே இறந்த காலம், வருங்காலம் ஆகிய இரண்டு கால் கொண்டு நடக்கிறது. கால்கள் இரண்டும் வெவ்வேருகத் தோன்றுகின்றன. நடை ஒன்றுதான். நடக்கும் போதும், குதிக்கும் போதும், இரண்டு அடிச்சுவடுகளைக் காண்கிறோம். ஆனால், நடையை இயக்கும் சக்தி ஒன்றுதான்; அதுவே இரண்டு கால்களையும் தொடர்ந்து செலுத்துகிறது; இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் என்றும் உள்ள ஒரு சக்தியே இயக்குகிறது.

நிலையாக என்றுமுள்ள சுத்த வஸ்துவைப் போலவே இந்தச் சக்தியும் அதன் ஆடலும் உண்மையாகும். அதை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. ஆதலால் சுத்த வஸ்து இரண்டு உண்மைகளாக விளங்குகிறது; ஒன்று ஸத்து; மற்றொன்று ஜகத்து. இரண்டின் உண்மையும் தன்மையும் அறிவதே அறிவாகும்.

பரப்ரம்மம் வாய்மனங் கடந்தது; அதை மனத்தால் நினைக்கவோ, வர்ணிக்கவோ முடியாது. அஃது ஒன்று; அதுவே நானுவுலகாக விரிந்து விளங்குகிறது. அது நிர்க்குணமாகவும் சகுணமாகவும், சிவனுகவும் காளியாகவும் விளங்குகிறது. உலக வாழ்க்கை சிவனின் ஆனந்த நடனமே; அந்த ஆடலால் அவன் தன்னையே பலவுயிர்களாக, பல நாம ரூப பேதங்களாக விளக்குகிறுன். இந்த நடனமும் அதன் சிருஷ்டியும் என்றுமிருக்கும். இறைவன் வேண்டுவது நடனனந்தமே.

---

# 10. சித் சக்தி

அகிலமெல்லாம் சக்திக் கடலில் மிதக்கிறது; அக்கடலின் அலைகளே எல்லாத் தோற்றங்களும். ஆகாச அணுக்கள் ஓமொலியுடன் பலவாகப் பிரிந்து, மோதிச் சுழல்கின்றன. அவற்றினின்று ஒலி, ஒளி, தீ, வெப்பம், இவை உண்டாகின்றன; அத்துடன் ஓர் ஆகர்ஷண சக்தியும், ஐக்கிய சக்தியும் தோன்றுகின்றன. இவற்றினின்றே எல்லா உலக வடிவங்களும் உருவாகின்றன. எல்லாம் பஞ்சபூத வடிவங்களே; சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய பஞ்ச தன்மாத்திரைகளால் அவை உருவாகின்றன. சக்திச் சுழற்சியால் சத்தம் உண்டாகிறது; அதனுடன் பொருள்கள் பொருந்தி, ஸ்பரிச வுணர்ச்சி உண்டாகிறது. ஒளி, தீ, சூடு ஆகிய சக்தியுடன்கூடி ரூப தன்மாத்திரை யுண்டாகிறது; நாம் பொருள்களைப் பல வடிவாகப் பார்க்கிறோம். தண்ணீரால் சுவையும், மண்ணினால் மணமும் உண்டாகின்றன. தன்மாத்திரைகள் சுழன்று பொருந்தியே இயற்கையிலுள்ள எல்லாப் பொருள்களும் உண்டாயின. இவற்றின் பின்னே மஹத் தத்துவமும், அஹங்கார தத்துவமும் உள்ளன என்று சாங்கிய யோகிகள் கண்டனர். இது தற்கால பௌதிக ஆராய்ச்சிக்கும் பொருந்தியதே; இயற்கை ஜடமானாலும், ஒரு சக்தியாக விளங்குகிறது. எல்லாச் செயல்களும் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி—ஆகிய மூன்றால் உண்டாகின்றன. இந்த மூன்றும் ஆதி சக்தியின் மூன்று பிரவாகங்களே. நமது இளைப்பாற்றங்கூட அந்தச் சக்தி ஆட்டத்தின் சம நிறையேயாகும்.

இந்தச் சக்தியியக்கம் எப்படி யுண்டாகிறது? அது சர்வசாக்ஷியான பரம்பொருளிடம் இயல்பாகவே யிருக்கிறது; ஆடும் பிரமமே சக்தி. சக்தியும் சிவமும் ஒன்றே; இரண்டும் சேர்ந்தே சிருஷ்டி லீலை நடக்கிறது. மாயாவாதங்கூட மாயா சக்தி அனாதி,

அனிர்வசநீயம், உலகம் சக்தி விலாசம் என்பதை ஒப்பும். சாங்கியர்களும் புருஷப் பிரகிருதி தத்து வத்தை ஒப்புவர். புருஷன் சேதன ஜீவன்; பிரகிருதி இயற்கை, க்ஷேத்ரம். புருஷன் க்ஷேத்ரக்ஞன். புருஷன் ஆத்மா; ஆத்ம சேதனமே இயற்கை யுடலை ஆளுகிறது. உறுப்புக்களல்ல; உணர்வான சேத னமே நமது வாழ்வின் விசை. ஓர் எஞ்சினில் உருளை களும் குழாய்களும் மட்டும் இருந்தாற்போதாவாம்; அனைத்தையும் உள்ளிருந்து இயக்கும் ஆவியே முதன்மையாம். அதுபோல் வாழ்விற்குச் சேதன சக்தியே முதன்மை. இச் சேதனம் எங்கும் நிறைந் துள்ளது. கல்லில் அஃது உறங்குகிறது. உலோகங் களில் அஃது இருப்பதாக ஆராய்ச்சி கூறுகிறது. செடி கொடிகளில் ஜீவசேதனம் நிரம்பவுள்ளது; உண்ணல் உறங்கல், இன்ப துன்பங்களை உணர்தல் எல்லாம் நம்மைப்போலச் செடிகளுக்கும் உண்டு. இதை ஜே. ஸி. போஸ் விளக்கியிருக்கிறார். விலங்குகளில் பிராண சேதனத்தைக் காண்கிறோம். மனிதனிடம் அது மனோமய சேதனமாயிருக்கிறது. அத்துடன் அது முடிவதில்லை; இன்னும் அது விஞ்ஞான நிலையில் பரசேதனமாக விளங்கும். சேதனம் என்பது தெய்வ சக்தி; அதுவே உலகை ஆக்கிக் காக்கிறது. அனைத்தும் அதன் நிறைவே. ஜடமும் மனமும் அந்தச் சேதனத்தின் வெவ்வேறு படிகளேயாம். அததன் இடத்தில் அதது சேதன நிறைவு பெற் றுள்ளது. பூச்சி புழு, விலங்குகள் எல்லாம் தம் தேவைகளைப் புலனறிவால் அறிந்து எளிதாகப் பெற்று வாழுகின்றன. உள்ளிருந்து ஓர் அறிவு அவற்றைத் தூண்டி நடத்துகிறது. அந்த அறிவே விதையைச் செடியாக்கிச் செடியை மரமாக்கி மலரும் கனியும் குலுங்க வளர்கிறது. மனிதனின் மனவுணர்வும் சித் சக்தி சேதனத்தின் ஒரு கூறுதான். அஃது இன்னும் வளர்ச்சிபெற்று விஞ்ஞான சேதனமாகவேண்டும்.

# 11. வாழ்வின்பம்

பிரம்மம் பூரணம், அனந்தம், சுதந்தரம்; அதற்கு எதுவும் தேவையில்லை; அது சாந்த நிறைவு.... எனில் அஃது ஏன் சிருஷ்டியில் தலைப்படவேண்டும்? நாமரூபாதிகளில் வியாபிக்கவேண்டும்?

ஸத்தான பிரம்மம் சித்சக்தியுடன் இணை பிரியாமல் இருக்கிறது; அது சகுண சக்தி; லீலா சக்தி; ஆடல் அதன் தன்மை. ஆனந்தமே பிரம்மத்தின் இயல்பு. அந்த ஆனந்தம் சித்சக்தி மூலம் ஆடல் புரிகிறது. அதுதானே பலவான உலகாகப் பரந்து விரிந்து விளையாடி இன்புறுகிறது. இந்த இன்பத்தினின்று அது பிரிவதில்லை. இந்த ஆடலால் அது மாறுவதில்லை; நிலை திரிவதில்லை. நாம் காணும் அனைத்தும் அதன் விளக்கமேயாம். வந்து இருந்து செல்லும் நாம ரூப பேதங்களில், அது போக்கு வர வற்றுத் தானேதானாக நிலைத்திருக்கிறது. அது சச்சிதானந்தம். உலகும் வாழ்வும் சச்சிதானந்த விளக்கமே. அப்படியானால் உலகில் இவ்வளவு துன்ப மிருப்பானேன்? வாழ்வு துன்பக் காடுபோலக் காண்கிறதே! ஏன்? இது வெறும் தோற்றம், மனப் பான்மை; ஏதோ சிலருக்குத் துன்பம் அதிகமாயிருக்கலாம்; நன்றாகப் பார்த்தால், உலகில் இன்பமே அதிகம். அந்த இன்பத்தின் மேல் படிந்த இருளே துன்பம்; நாம் இன்பத்திற்குமேல் இன்பம் நுகரலாம். நாம் எல்லாம் துன்பம் அநித்தியம் என்று நினைப்பதால் இன்பம் விளங்காமலிருக்கிறது.

எல்லாம் சச்சிதானந்தம் என்பது வேத உண்மை. அப்படியானால் துன்பந்தான் இருப்பானேன்? கடவுள் கருணாநிதியாயிற்றே! அவர் ஏன் தாம் படைத்த ஜீவர்களுக்குத் துன்ப வேதனை தருகிறார்? அவர் நம்மைச் சோதிக்கவோ, தண்டிக்கவோ

துன்பம் தருகிறுர் என்பர் சிலர்; கடவுள் கண்ணைக் கெடுப்பார், மதியைக் கெடுப்பார் என்று சிலர் பயமுறுத்துவர்; இதெல்லாம் அபத்தம். துன்பத்தால் நம்மைச் சித்திரவதை செய்பவன் இறைவனுகான். அவன் அசுரனல்லன்; அவன் இரக்கமே வடிவான வன். அவரவர் கருமத்தால் துன்பம் வருகிறது; முன் வினைப்பயனை அனுபவித்தே தீரவேண்டும்; கடவுள் மேலிருந்து அவரவர் வினைக்கேற்ற அனு பவத்தைத் தருகிறுர் என்பர் சிலர். இதுவும் பிசகு; கடவுள் சுவர்க்கத்தில் சௌக்கியமாக இருந்து கொண்டு, ஏழை உயிர்கள் மேல் துயருந் துன்பமும் இடியும் புயலும் கொட்டி மிரட்டவில்லை....விதியை ஏவி, வினைக்கேற்றபடி தண்டிப்பதுமில்லை. இந்த எண்ணமே பிசகு; இது சர்வாந்தர்யாமியான பரமாத்மனை ஏதோ ஒரு சிகரத்தில் வைத்துப் பேசும் மயக்கம். பரமாத்மா எங்குமிருப்பவர்; உலகம் அவன் மயம்; உயிர்கள் அவன் விரிவு; அவனே எல்லாமா யிருக்கிறுன். அவன் துன்பந் தருவ தானுல் தன்னையே துன்புறுத்திக் கொள்பவனுவான்; ஏனெனில் தானே அனைத்தும்; அவனிடம் துன்பச் சாயலே கிடையாது; தன்னிடம் இல்லாததை அவன் எப்படி உயிர்களுக்காகத் தரமுடியும்?

அன்பும், அருளும், நலமும், மெய்யறிவின்பமும் ஆன அவனிடம், துன்பம் எப்படி யிருக்க முடியும்? சுதந்தரனுன அவனைப் பந்தம் அணுகமுடியுமா? முடியாது. அவனே அனைத்துமானபோது, அவனுகிய ஜீவர்களுக்குத் துன்பம் வருவதெப்படி? துன்பம் அவனுல் வருவதன்று; இயற்கையில் துன்ப வுணர் வில்லை; புயல், இடி, பூகம்பம், வெள்ளம்—இவற்றுல் எவ்வளவோ சேதம் உண்டாகிறது; இயற்கை அதில் பற்றில்லாமல் ஏதோ ஒரு சக்திக்கு உட்பட்டுத் தனது செயலைச் செய்கிறது. விலங்கியல்பில்கூட இந்த

வுணர்வில்லை; புலி பசித்தால் ஆட்டைக் கொன்றுண்கிறது; பாவம் பார்த்து வருந்துவதில்லை; அதன் மேல் குற்றஞ் சொல்வதற்கில்லை. புயல் படகைக் கவிழ்த்தால் அதை நாம் தண்டிக்க முடியாது. நாம் சுயநலத்தாலேதான் சுக துக்கங்களை அளக்கிறோம். தன்னை உயர்த்திக் கொள்வது மனித வியல்பு; தன் உயர்விற்கும் மகிழ்விற்கும் தடையானதை யெல்லாம் கெட்டதென்றும், தனக்குத் துணையானதை நல்லதென்றும் மனிதன் நினைக்கிறான். அறம், பாவம், நலம், தீது என்னும் நீதியுணர்ச்சி அவனிடம் பலமாயிருக்கிறது. பேதபுத்தி அவனை இதற்கும், அதற்கும் அலைக்கிறது; அகம்பாவம் அபிமானத்தைத் தூண்டுகிறது; ஆனந்தத்தை மறைக்கிறது. மனிதன் தன்னையும் அறியவில்லை; உலகையும் அறியவில்லை; மனம்போனபடி செய்கிறான்; அகந்தை மனம் இருவிகற்பமுள்ளது. அதனால் சுகதுக்கங்களில் மனிதன் வருந்துகிறான். அகங்காரத்தை விட்டுயர்ந்து, தனது சொரூபமான சச்சிதானந்தத்தைப் பெற்றால் மனிதன் பந்ததொந்தமின்றி இருவினை யொப்பெய்தி இருள் விலகி இன்புறலாம்.

வாழ்வே இன்பம்; வாழ்வின் நோக்கமும் இன்பம்: அதன் வேரும் கிளையும் பூவும் கனியும் இன்பமே; பிறவிப்பயனும் இன்பமே; நமது உண்மை யியல்பும் இன்பமே. பரமானந்தனான இறைவனின் பரவச லீலையே உலகம். அதில் அவனே அரங்கம், நாடகம், ஆட்டம் அனைத்தும்; ஸத்தாகிய பரமன் சித்தாகிய சக்தியால் ஆனந்தமாகிய ஆடலைச் செய்து பலவேறு நாமரூபங்களால் தன்னின்பத்தையே அனுபவிக்கிறான்—இதுவே உலக வாழ்வின் உண்மையாகும். உள்ளார நாம் அந்தச் சர்வானந்தனே. நம்மை நாம் முழுதும் அறியவில்லை; நமது மிக மேலான பாகத்தையே புலனுணர்வால் அறை

குறையாக நாம் அறிந்திருக்கிறோம்; நாம் இரு விகார மனத்திற்கும், சஞ்சல சித்தத்திற்கும் கட்டுப்பட்டிருக்கிறோம். நாம் மனத்தைப் புறத்தே விட்டலைகிறோம்; விருப்பு வெறுப்புகளைச் சுமக்கிறோம். உள்ளாழ்ந்து வாழ நாம் பழகவில்லை; உள்ளே ஆழத்தில் அனந்த சக்திப் பொருள் உள்ளது. அதை நாம் அறிய முயலவில்லை. நம் ஞானம், ஆற்றல், அன்பு, அமைதி, புலமை, சித்தி எல்லாம் அந்தப் பொருளினின்றே வருகின்றன. அதுவே உள்ளக் கடவுள். அதுவே உண்மையாக நாம். நமது உண்மை நம் உள்ளே யுள்ளது. அதில் வாழக் கற்றால் சுக துக்கம் கிட்ட வரமுடியாது; முக்குண விகாரங்களையும் இருவினையாட்டங்களையும் நாடகம் பார்ப்பது போலவே சாட்சியாகப் பார்த்து, நாம் எப்போதும் நிர்விகாரமாக, நிரஞ்சனமாக, நிராமயமாக இருக்கலாம்.

இருக்கிற இடத்தில், இருக்கிறபடி யிருந்தால், இன்பமாயிருக்கலாம்; சுகதுக்கங்களை உதாசீனமாகப் பார்க்கலாம். எதுவும் நம்மைப் புண்படுத்தாது. நாம் மேலளந்தவாரியாக, பிராண — மனக்கோசத்தில் வாழ்வதால், விகாரப்படுகிறோம்; யாராயினும் நம்மைப் புகழ்ந்து "சபாஷ்" போட்டால் மகிழ்ந்துபோகிறோம். யாராவது நம்மை இகழ்ந்தால், தூற்றினால், மனங் கசக்கிறோம்; பொறுமைகொண்டு கெடுதல் செய்கிறோம்; எடுத்த காரியம் கைகூடினால், லாபம் வந்தால் களிக்கிறோம்; தோல்வி, ஏமாற்றம், துரதிட்டம், இவை வந்தால் தளர்ந்துபோகிறோம்; ஆத்திரப்படுகிறோம். நமக்கு மகிழ்ச்சி இனிக்கிறது; துயரம் கசக்கிறது. ஏனெனில் நாம் சமநிலை பெறவில்லை. இது நமது நரம்பதிர்ச்சியாலான ஒரு நோய் தவிர வேறில்லை. இதற்கு நாம் அடிமையாகக்கூடாது; நரம்பு நமது மிகமிகப் புறவுறுப்பு. நமது சொரூபத்தி

விருந்து பார்த்தால், சுகதுக்க பந்த தொந்தங்களே நமக்கு இல்லை; சுதந்தரமாயிருக்கலாம். மிகவும் கிளர்ச்சியான நேரங்களில் நமக்குத் துன்பம் உணர்வாவதில்லை.

ஜாலவித்தைக்காரர் ஒருவனை மயக்கி வித்தை காட்டும்போதும், உடலுக்கியல்பான உணர்வில்லை. உடலையும், நரம்புகளையும், மனத்தையும் வென்று, நமது ஆனந்த சொரூபத்திலேயே நிர்விகாரமாக வாழ முடியும் என்பது இதனால் சிறிது விளங்கும். நாம் அகம்பாவத்தில் வாழ்கிறோம்; அகம்பாவத்தால் பிறரைப் பார்க்கிறோம்; அகம்பாவத்தால் பொருள்களை மதிப்பிடுகிறோம்; மன-வீரிய அகம்பாவம் விடுத்துப் பிறருடன் ஐக்கியப்பட்டு அந்தராத்ம சுத்தியுடன் வாழ்ந்தால், சமநிலை பெறுவோம்; நட்பும் பகையும், நலமும் தீதும் நமது சமதையைக் கலைக்க முடியா. சுக துக்கங்கள் வக்கிரமான ஓட்டங்கள். அவை நமது குறுகிய நோக்கத்தால் வருவன; நாம் உள்ளாழ்ந்து ஒவ்வொன்றின் ரசத்தையும் கிரகிக்க வேண்டும்; இரசக்ராகிகள் இயற்கையுலகின் நவரச நாடகத்தைக் கலைச்சுவையுடன் ஜுகுப்ஸையின்றி நிர்விகாரமாகக் காண்பர். உலகின் அதிர்ச்சிகளைத் தாங்கத் திறமையில்லாமலே நாம் துன்பப்படுகிறோம்; நமது சொரூப சக்தியை அறியாமல் துன்புறுகிறோம்; இதற்கு முதற்பயிற்சி திதீக்ஷை- புறவுலகின் தாக்குதல்களால் தளராப் பொறுமை. நமது சிறு மன வாழ்வை விசுவ சக்திக்கு அடைக்கலமாக்கவேண்டும். நம் அகந்தை மமதைகளை அதில் கரைத்தொழிக்க வேண்டும். அதுவே வேத ரிஷிகளின் வழி.

தனி மனிதன் விசால ஹ்ருதயனாக, விசுவாத்ம சேதனத்துடன், சர்வாத்ம ஐக்கியத்துடன் வாழ வேண்டும்; சுயநல ஆசைகளையும் வெறுப்புகளையும் விசுவப் பிரேமையாக மாற்றவேண்டும். அவனது

குறுகிய மனம் கட்டுடைந்து, உலகளாவ விரிந்து பரவவேண்டும். அவனது குறுகிய ஜீவன் விசுவ ஜீவனாகி விசுவானந்த முண்ணவேண்டும். அவனது உடல்கூடத் தனிச்சடலம் அன்று; அது சர்வவ்யாபக மான சக்தியின் நிலயம் என்றறியவேண்டும். அவனது இயற்கை மாறி, பரம சச்சிதானந்தத்துடன் ஐக்கியமாக வேண்டும். இதுவே வாழ்வின்பம்.

# 12. மாயா சக்தி

வித்திலிருந்து மரம் முளைக்கிறது. மரம் எங்கிருந்தது? வித்தில் அடங்கியிருந்தது; அதுவே மரமாகி, இலையாகி, மலராகிக் கனியாகி, முடிவில் விதையாகிறது. ஒரு சைத்திரிகன் சித்திரம் எழுதுகிறான்; சித்திரம் எங்கிருந்து வந்தது? அவனது மூளையிலிருந்தே; அவன் பீலியிலிருந்தே வந்தது; ஒரு கவியின் கவி அவன் கனவில் உதித்ததே; ஒரு யந்திரியின் யந்திரம் அவன் மனோ யந்திரத்திலிருந்து வந்ததே; ஓர் அரச தந்திரியின் பேச்சு, சூழ்ச்சியெல்லாம் அவனுள்ளிருந்து வருவனவே; இப்படியே பார்த்தால் நம் செயல், விளக்கமெல்லாம் நாமேயாவோம். நாம் யார்? தனது சிதானந்தத்திலிருந்து அகிலப் பிரபஞ்சமாக விரிந்து விளையாடும் சத்வஸ்து எதுவோ அதுவே நாம். உள்ளது ஒன்று, ஒரு சக்தி, ஓர் ஆனந்தம், அதுவே அனைத்தும்; "இது நான்" என்று சொல்வதெல்லாம் அதுவே. நாமரூபங்களெல்லாம் அதன் பல பான்மையான ஆடலேயாம். அது சிருஷ்டிக்கும் எல்லாம் அதுவே; சிருஷ்டிப் பொருளெல்லாம் அதையே பலவாறு நாடுகின்றன. அதை அடைந்தால் அதுவேயாகலாம்; இஃது அதுவாதலே பரிபூரணம். ஆனால் மட்டுப்பட்ட வியக்தி சேதனத்திற்கு இது முடிவதில்லை; ஏனெனில் அது குறுகிய தனியுணர்விலேயே பழகிவிட்டது; முதலில் அது தன்னை அறியவேண்டும்; தனது உயிராயிருக்கும் அனந்த சேதனத்தை உணரவேண்டும். அந்த உணர்ச்சி படிப்படியாகவே வரமுடியும். முதலில் சச்சிதானந்தப் பொருள் இடத்திலும் காலத்திலும் கணக்கில்லாத பொருட்குலமாகப் பரந்து விரிந்துள்ளது; பிறகு உணரும் மரம், ஐம்புல விலங்கு, நினைக்கும் மனிதனாக அது

படிப்படியாக வளர்கிறது. முடிவில் மனோமயத்தில் அடைபட்ட நர ஜீவனை மேலுயர்த்தி, சொரூபானு பூதிதந்து, தன்னை விளக்குகிறது. பிரபஞ்ச ரகசியம் இந்த மூன்று கதிகளில் அடங்கியுள்ளது. இதுவே வேதாந்த வுண்மை; இதுவே தற்காலப் பரிணாம வாதிகள் தேடும் உண்மை. வேதம் சேதன பரிணாமத்தைப் போற்றும்; தற்கால ஆராய்ச்சி ஸ்தூல பரிணாமத்தைப் போற்றுகிறது; இரண்டும் சேர்ந்தே பரிணாமதத்துவம் நிறைவாகும். எல்லாம் சச்சிதானந்தம் என்ற அறிவுமட்டும் போதாது; அது திறவுகோலே; அதற்கேற்ற பூட்டைத் தேட வேண்டும். ஏனெனில், சச்சிதானந்தம் ஒரு ஜால வித்தை போல நம்முன் வந்து குதிக்காது. அதற் கொரு வழி யுண்டு, விதியுண்டு. அந்த விதியை ஆளும் ஒரு சக்தியுண்டு; இதுவே மாயா சக்தி. எல்லாம் வல்ல சச்சிதானந்தத்திற்கும், சிருஷ்டிக்கும் இடையே ஒரு மாயா சக்தி யிருப்பானேன்? அதில்லாமல் எல்லாம் ஓரேயடியாக மேல் படிக்கு உயர முடியாதா? மாயா சக்தி இருக்கவேண்டும்; இல்லாமல் தீராது. "ஒளி நிலவட்டும் என்றார் கடவுள்; உடனே ஒளி நிலவியது" என்று பைபிள் கூறுகிறது. அதுபோல் "எல்லாம் சச்சி தானந்தமாகட்டும்" என்று சொல்லி அப்படியே பரம் பொருளுக்கு ஆக்கமுடியாதா? பைபிள் வசனத்தில் ஒரு குறை யுள்ளது. "ஒளி நிலவுக" என்றால், அதுகாறும் எங்கும் இருளா யிருந்தது; புதிதாக ஒளி வந்து, இருளைப் போக்கியது என்பதாகும். நமது உண்மை அதுவன்று. நம் உண்மையில் அகண்டம் ஒளி மயம்; நாம் அகண்டமாகக் காண்கிறோம். இருள் ஒரு திரையே. இத் திரை எதற்காக ஏற்பட்டது? எப்படி விலகும்? இதற்கு மாயா சக்தியை அறியவேண்டும்.

மா-ஒடுக்கம்: யா-தோற்றம்; உலகின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாய்ப் பிரபஞ்ச லீலையை ஊக்குவது மாயை. அது வேத முனிவர் அனுபூதியால் உணர்ந்த அனந்த சக்தியாகும். அதுவே பலவான நாமரூபங்களாக விளையாடுகிறது. அதனாலே தான் அசலமான பிரம்மம், லீலாப் பிரம்மமாகி முத்தொழில் புரிகிறது. மாயை இரண்டு வகையாகும்: ஒன்று பிரகிருதி மாயை, மற்றொன்று மஹா மாயை. பிரகிருதி மாயை அபரம்; மஹா மாயை பரம். அபர மாயை மனத்தை விகாரப்படுத்தி, ஒன்றைப் பலவாகக் காட்டுகிறது; புத்தியைப் பேதிக்கிறது, சோதிக்கிறது; ஆசாபாச அஞ்ஞானப் போர்களுக்கெல்லாம் இதுவே காரணம். இது பெரிய ஆவரண சக்தி. மஹா மாயை நானாப் பிரபஞ்சத்தில் தெய்வ லீலையை விளக்கும்; தெய்வானந்தத்திற்கு வழி காட்டும்; ஒளி காட்டும். இது தெரியாமலே மாயா வாதம் கிளம்பியது. மாயாவாதிகள் "மனமாயையே உலகை ஆக்கியது; அதைப் போலவே உலகமும் இந்திர ஜாலப் பொய்; அகம் உதித்தால் ஜகம். ஜகம் மனத்தின் கற்பனைக் கனவு" என்பர். பிரம்மமே உண்மை; அதன் சிருஷ்டி மித்தை என்பதில் இவர் கொள்கை முடியும். இவர்கள் மஹா மாயையை அறியாமற் பேசுகிறார்கள்.

உலக ரகசியம் மனத்திற்கு எட்டாதது. மனம் சிற்றறிவும், விகற்பமுமானது. மனக் கண்ணாடியால் பார்த்தால் மாயாவாதமே தோன்றும். மனம் ஒரு இடை நிலை; அதற்குமேல் எத்தனையோ படி தாண்டி மஹா மாயை உள்ளது. அதை மனத்தால் அறிய முடியாது. மனத்தைத் தாண்டி விஞ்ஞான நிலை பெறவேண்டும். அங்கிருந்து பார்த்தால், சிருஷ்டி ரகசியமும், ஈஸ்வர மாயா லீலையும் புலனாகும்.

# 13. விஞ்ஞானம்

விஞ்ஞானம் மனத்திற்கு எட்டா உயரம் உள்ளது; அதுவே சிருஷ்டி சக்தி; அதுவே மாறும் நானா ஜகத்திற்கும், மாருத ஏக ஸத்வஸ்துவுக்கும் தொடர்பாயிருப்பது. அஃது ஒன்றே பலவானது, பல வஸ்துக்களிலும் உள்ளது ஒன்றே என்பதை அஃது அறியும். அது ஞானம், சோதி, வல்லமை, காரியசக்தி. வேத ரிஷிகள் அதை அகண்ட சத்திய சேதனமாக வர்ணிக்கிருர்கள். அஃது எல்லாம் அறிந்தது; எல்லாம் வல்லது; அதன் விளக்கமே தேவர்கள், தேவஜீவனம்; அதனுலேதான் தேவர் அருட்காட்சியும், அருட்கேள்வியும், தெய்வப் புலமையும் பெற்று விளங்குகிருர்கள்.

இந்த விஞ்ஞானம் வாய்மனம் கடந்த உண்மை. மனம் பொருள்களைப் பின்னமாகவே காணும்; அரைகுறையாகப் பார்க்கும்; குழப்பும்; எல்லாம் பார்த்ததாகச் செருக்கும்; அதற்கு ஆழ்ந்த பார்வை யில்லை. மனமே மனிதன் நிலையன்று; அஃது ஒரு வழிக் கல்; மனிதன் அதைத் தாண்டிச் செல்ல வேண்டும்; வகுக்கும் மனவுணர்ச்சியை மீறித் தொகுக்கும் விஞ்ஞான வுணர்ச்சி பெறவேண்டும். அப்போதே மாயா வாதத்தை வெல்லலாம்; மஹா மாயையை அறியலாம். மனம் கிளையைப் பார்த்து எல்லாம் தனி வேறுபாடு என்கிறது; விஞ்ஞானம் வேரைப் பார்த்து அந்த ஒன்றின் விரிவே மரம் என்கிறது. மனம், கடவுளுக்கும் உலகிற்கும் இடையே பிளவை உண்டுபண்ணுகிறது. விஞ்ஞானம் கடவுளே உலகாக விரிந்த உண்மையை விளக்குகிறது; எல்லையில்லாத உலக வேறுபாடுகளில் அகண்ட ஏக ரசத்தை உணர்கிறது.

ஞான மூலமான இந்த விஞ்ஞானமே தெய்வத்

தன்மையாகும். இதுவே தெய்வ வுண்மை, சத்திய சேதனம். இஃது அகிலாத்மகதியை ஆளுவது ; உலக சமரசத்தின் இரகசியம் இதுவே. இதுவே இடமாக. விரிந்தது ; காலமாகச் செல்லுகிறது. உலகம் இட மகன்ற காலக் கட்டுப்பாடுடையது. சாதாரண மனம் இடத்தைப் பல பிரிவுகளாகக் காண்கிறது ; காலத்தை இறந்த காலம், நிகழ்காலம், வருங் காலம் என மூன்ருகக் காண்கிறது ; காரண காரியங்களை வெவ்வேருகக் காண்கிறது. விஞ்ஞானம் காலத்தை ஒரே சங்கிலித் தொடராக, என்றும் நிகழ்காலமாகக் காண்கிறது. அதன் பின்னுள்ளதையே நாம் சென்ற காலம் என்கிறோம் ; முன்னுள்ளதையே வருங்காலம் என்கிறோம். காலத் தொடர்களையும், இட வகுப்பு களையும் விஞ்ஞானமே ஐக்கிய வுணர்வுடன் காண வல்லது. ஒரு நாடக மேடையில் வெவ்வேருன காட்சிப் படலங்கள் காண்கின்றன ; எல்லாம் ஒரு நாடகத்தின் நவரசக் காட்சிகளே. அதுபோல் விசாலமான இடத்தில் கால சக்தியின் நாடகம் நடக்கிறது ; அதில் திடீர் திடீரென்று எத்தனையோ சம்பவங்கள் எழுகின்றன. மனம் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கண்டு மயங்குகிறது ; காலப் போராட்டங்களெல்லாம் ஒருஜீவபரிணமத்தின் காட்சி களே என்று விஞ்ஞானம் அறிகிறது. மனம் ஒரு குறிப்பான இடத்தையும் காலத்தையுமே அரைகுறை யாகக் காணும். விஞ்ஞானம் முன்னும் பின்னும், நடுவும் ஆராய்ந்து பார்த்து, முழுதும் நிறைவாகக் காணும்; தான் ஆக்கிய அனைத்தையும் அது தன்னில் அணைத்துக்கொண்டு அவற்றுள் வசிக்கிறது. அதுவே இயல்பாக வஸ்துக்களின் உரு, செயல், திறமை, அளவு முதலியவற்றைத் தீர்மானிக்கிறது. ஒவ்வொரு உள்ளத்திலும் பரமாத்மாவைப் போலவே விஞ்ஞான சக்தியும் குடிகொண்டிருக்கிறது. இந்தச் சத்திய

சேதனமே அந்தர் சைதன்யமாயிருந்து அறிவை உயர்த்தி, மரம் விலங்கு மனிதன் என்று பரிணமத்தைப் படிப்படியாக நடத்துகிறது. அஃது எல்லாம் காண்பது, அறிவது, அனைத்திலும் நிறைவாயிருப்பது; காலதேச வர்த்தமானங்களில் கட்டுப்படாது எல்லையற்ற விரிவாயிருப்பது; தனது ஞான சக்தியால் அனைத்தையும் ஆள்வது.

இந்த விஞ்ஞான சேதனத்தில் அறிஞன், அறிவு, அறிபொருள் மூன்றும் ஏகமாயிருக்கும். இவற்றை முப்புரியாகக் காண்பது விகார மனமே. அறிபவன் நான்; அறிவும் நான்; நான் சைதன்யம்; அதுவே என்முன் உள்ளதெல்லாம்; ஆதலால் நான் அறிவதும் என்மயமான நானே. மூன்றும் ஒரு சத்து, ஒரு கதி, ஒரு சைதன்யப் பிரகாசமேயாகும். நாம ரூப பேதங்கள் பலவானாலும், உள்ளே சைதன்ய ஓட்டம் ஒன்றே. வித்து மரமாகிறது, மரம் வித்தாகிறது; விதை, கிளை, இலை, மலர், கனி என்று மனம் பகுத்துக் காண்கிறது. விஞ்ஞானம் அனைத்தையும் வித்தின் எழுந்த வித்தாகும் சக்தி விளக்கமாகக் காண்கிறது.

"அனைத்திலும் பிரமம்; அனைத்தும் பிரமனில்; அனைத்தும் பிரமம்" என்ற ஏகரஸபாவனை விஞ்ஞானத்திற்கே சகஜமாகும். இந்த ஏகத்துவமே அதன் அடிப்படையாகும். அதன் விரிவே அனைத்தும். அதன் நீட்டமே மனமும் உயிரும் உடலுமாம். ஒரு மலையருவி இடைவிடாமல் ஓடிக் கடலில் கலக்கிறது; கடலாவி மேகமாகி மழையாகப் பெய்து மீண்டும் அருவியாகிக் கடலில் கலக்கிறது. மலையூற்று, அருவி, கடல், ஆவி, மேகம், மழை, வெள்ளம் எல்லாம் ஒரே பொருளின் தொடர்ச்சியான விளக்கமேயாம். அதுபோல் அறிவோன் அறிவே அறிபொருளாக விளங்குகிறது; மறுபடியும் அறிவிற் கலக்கிறது.

அதேமாதிரி இன்பம், இன்புறுவோன், இன்பப் பொருள்; போகி, போகம், போக்யம்; இறைவன், சக்தி, சிருஷ்டி; ஆத்மா, மாயை, பிரபஞ்சம் ஆகிய முப்பொருள்களெல்லாம் ஒரு பொருளின் சின்மய விளக்கமேயாகும். விஞ்ஞான சத்திய சேதனத்தாலே தான் இந்த அகண்ட ஏகரசம் தெளிவாகும்.

நாம் ஆத்ம மலர்ச்சி பெறவேண்டும்; இப்போது பொய்யிலும் அகம்பாவத்திலும் வசிப்பதை விட்டு, தெய்வ சேதனத்துடன் ஐக்கியமாக வேண்டும்—அப்போதே நாம் தேவ ஜீவனம் பெறலாம். தனது சக்தியால் தானே பரந்து விரிந்து அனைத்துமாக விளங்கும் ஒன்றே 'தெய்வம்' எனப்படுவது. அதுவே காலதேசமாகத் தன்னை விரித்துக்கொண்டது. அண்ட சராசரங்களனைத்தும் அதன் சிற்சக்தியின் அமைப்பே ஆகும். அது தன் இச்சா சக்தியாலும், ஞான சக்தியாலும் அனைத்தையும் ஆளுகிறது. எல்லாம் அதன் ஆடலே; அஃது ஒரு செயல், ஒரு வடிவிற் கட்டுப்பட்டதன்று; அது சர்வ சமரஸம், சர்வ வியாபி, சர்வ வல்லமை, சர்வாந்தர்யாமி. நாம் ஒரே சமயம் ஒன்றையே அறிவோம். அஃது ஒரே சமயம் பலவாகி அனைத்தையும் அறியும். அத்துடன் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திய ஆன்மாக்களை அது படிப்படியாக உயர்த்துகிறது. அதன் ஞானம் விஞ்ஞானம்; நம் எண்ணங்களும் கனவுகளும் அதனின்றே எழுகின்றன. பேத புத்தியால் வரும் நானாபாவனைகளெல்லாம் இந்த விஞ்ஞானத்தினாலே தான் ஒழியும்; அதுவே சர்வாத்ம ஐக்கியத்தின் திறவுகோல். அதுவே ஜீவ, ஜக, பர விளக்கத்தின் ஒருமையை உணர்த்தவல்லது. உயிர், இறை, உலகு ஆகிய முப்பொருளின் உண்மையை அது விளக்கும்; இந்த முப்பொருளின் ஐக்கியத்தை அறியாமல் ஒன்றே உண்மை, மற்றது பொய் என்னும் பிடிவாதத்

தாலேதான் உலகில் தத்துவச் சண்டைகள் எழுந்தன. சிலர் முப்பொருளும் தனித்தனி என்பர்; சிலர் ஆன்மாவே கடவுள்; அதற்கு அன்னியமில்லை என்பர்; சிலர் உலகம் பொய், அசத்து மாயை என்பர்; சிலர் ஏகமே உண்மை, அநேகம் மாயை என்பர்; சிலர் உலகே மெய், மற்றதெல்லாம் மனமயக்கம் என்பர். ஒன்றின் ஆடலே பல; பலவான பொருள்களும் ஒன்றிற்கே திரும்புகின்றன. இதுவே உண்மை.

★

பிரமம் பராத்பரம்; பரிபூரணம்; அதன் விளக்கமே நம்முள் உள்ள சுத்தான்மா; அதுவே அறிவிற்கறிவு. தெளிந்த நிலையில் அது தன்னைச் சச்சிதானந்த மென்றறியும். அதுவே ஜீவனின் அடிப்படை; ஆனந்த நிலயம், சுதந்தர சக்தி. அதுவே வாழ்வின் வேரும், சத்தும் ஆகும். அஃது அநேகத்தில் ஏகம். விஞ்ஞான நிலை யடைந்த சுத்தான்மா அனைத்தையும் தன் மயமாக, ஒரு மயமாக, ஏகரசமாகக் காணும்.

அது தன்னுள் அனைத்தையும், அனைத்திலும் தன்னையும் காணும். தானே ஆதாரம், ஆதேயம் என்றறியும். இந்த அறிவே உண்மையான ஒற்று மைக்கு அடிப்படையாகும். இந்த வுணர்வில் நிலை கொண்டால், பின்னுவிருந்து அனைத்தையும் இணைத்துப் பிடிக்கும் ஐக்கிய வஸ்துவை அறியலாம்; வேதத்தில் சொல்லப்பட்ட பல தெய்வங்களும் ஒன்றின் விளக்கம் என்று காணலாம். பல வேறுபாடுள்ள உலகில் பேதமே தோன்றாமல், எல்லாம் ஒரு ஆனந்தகானத்தின் வித வித மெட்டுக்கள்போல உணரலாம். அப்போது, அஞ்ஞானத்தால் வரும் பேதவுணர்ச்சி யிராது; தனிச் செருக்கிராது; எல்லாம் சரி நிகர் சமானமான

உண்மை விளக்கம் என்பதை அறியலாம். அப்போதே ஐக்கியானந்தம் கைகூடும்.

அன்பு, அறிவு, சக்தி, சிவம், ஆனந்தம், ஜோதி —இவையே கடவுள்; உள்ளும் புறமும் கடவுளைக் கண்டவரிடம் இந்த ஆறு சம்பத்துக்களும் விளங்கும். இவை ஆத்மாக்களுக்கு இயல்பானவை; அஞ்ஞானத்தாலும், தனிச் செருக்காலும், பேத புத்தியாலும் தன்னை யுணராத மதிமயக்கத்தாலுமே உயிர்கள் துயரப்படுகின்றன. பேத வுணர்வால் வந்த அகம் பாவமே மனிதனைப் பிடித்த பழம் பாவமாகும். இதை ஒழித்தாலே தேவ ஜீவனம் பெற முடியும். விசுவாத்ம சேதனம் தேவ ஜீவனத்தின் அஸ்திவாரமாகும். அதைத் தருவது விஞ்ஞானம்.

---

# 14. மனத்தின் வேலை

நமது வாழ்க்கை ஸ்தூல-சூக்ஷ்ம தேகத்தில் இணைந்தது. இது குறையும் துயரும் நிறைந்ததாகத் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவது கீழ் மாயையால். மேல் மாயை அல்லது தெய்வ மாயை தனது இன்பத்தினின்றே பலவித வுலகைத் தோற்றும் சத்திய சேதனம், விஞ்ஞான சக்தி. கீழ்மாயை அபரமாயை; இதைப் பற்றி இங்கே ஆராய்வாம்.

இவ் வுலகம் சச்சிதானந்தப் பிரமத்திலிருந் தெழுந்து அதிலேயே வசிக்கிறது. அதுவே அனைத்திலும் தலைவனாய் ஆத்மாவாய், சாக்ஷி சேதனனாய் விளங்குகிறது. ஆனால், இந்த ஸ்தூல சூக்ஷ்ம ஜீவன் நமக்கு இன்பமாகத் தோன்றுவதில்லை; துன்பந் தருகிறது; இதைத் தப்பி யொழிய வேண்டும். அல்லது இந்த மனத்திற்கு மேற்பட்ட ஓர் உண்மை நிலை பெறவேண்டும்—இரண்டே இன்ப வழி யெனத் தோன்றுகிறது. தப்பியோடும் நினைப்பு அறியாமையாகும்.

உடல் உயிர் மனமும் தெய்வ சக்தி விளக்கமே; ஆதலால், அவையும் திவ்ய ரூபாந்தரம் பெறவே வேண்டும். அவை இப்போது திவ்ய சேதனத்தை விலகி வாழ்கின்றன. திவ்ய சேதன சக்தி மலர்ந்தால் அவையும் தெய்வப் பொலிவு பெறலாம்; சோக மோகங்களின்றி வாழலாம். தெய்வ சேதனம் வளர வளரக் கீழியல்பும் மாறும்; அது போதிய மட்டும் பரவினால் மனமுயிருடலும் அவற்றிற்குரிய திவ்விய சுபாவத்தை யடையும். உலகும் திருந்திப் பொலியும்; விண்ணரசு விளங்கும். முதலில் ஆத்ம சித்தியால் உள்ளே தெய்வப் பொலிவெய்தவேண்டும். இதைப் பல யோகிகள் அடைந்திருக்கிறார்கள். உள் சித்தியால்

உடலையும் உலகையும் திவ்யமாக்கும் செயல் இனித் தான் நிறைவேற வேண்டும். உலக வாழ்வு எப்போதும் இரு விகாரப் போரா யிருக்க வேண்டுவ தில்லை. உலகிலும் பரமானந்தம் பரவும். இப்போதுள்ள இருள் நீங்கி, மன முயிருடலும் பூரணம் பெறும். பூரணத்தை நோக்கி நமது அறிவு வளரவேண்டும்.

இப்போது மனம் சிறைவிலங்கிற்பட்ட அரசன் போலிருக்கிறது. அளந்து, வகுத்து, பிரித்துக் கூறுவைப்பதே மனத்திற்கு ஏற்பட்ட வேலை. பண்ணிக் குவிப்பதும், பங்கு வைப்பதும் அவசிய மான காரியங்களாகும். காணல், அறிதல், உணர்தல், நினைத்தல் அனைத்திலும் மனம் பிரிக்கும் தொழிலையே செய்கிறது. மனம் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுக்கலாம்; ஆனால் இந்தக் கணக்கிற்கு மேல் அது போக முடியாது. மனம் தன் மட்டுக்குமீறி எல்லையற்ற பொருளை அடையத் துணிந்தால், அது தன்னையே இழந்து ஏதோ ஒன்றினால் விழுங்கப் படுகிறது. அது அனந்தானந்த வஸ்துவை அடைய முடியாது; சத்திய ஜோதியைச் சேரமுடியாது; அது செயலற்று ஒரு சமாதியின் பாதாளத்தில் விழுந் தொழியும். விஞ்ஞான நிலைக்கு ஏறினாலே பரமானந்த வஸ்துவைப் பெற முடியும். பங்கு போடும் மனமே உலகிற்கு மூலம், அதுவே மஹா மாயை என்னும் கொள்கை சுத்தப் பிசகு. மனத்திற்கு மேல் ப்ரக்ஞானம் உள்ளது; அதுவே இஃது இன்னது என்று மதிப்பிட்டு முறை வகுப்பது. அதுவே புருஷ சேதனத்தையும், பிரகிருதி சக்தியையும் வகுத்துக் காட்டுவது. புருஷன் அறிபவன், பார்ப்பவன்; சாட்சி, தலைவன், அனுமதிப்பவன். பிரகிருதி, அவனது காட்சி, சிருஷ்டி சக்தி; இரண்டும் ஒரு சத்வஸ்து விளக்கமே. ஒரு பரமனே அறிவாகவும், அறிஞனாகவும், அனந்த சக்தியாகவும், சிருஷ்டி

முதல்வனுகவும் விளங்குகிருன். எல்லாம் அவனது சக்தி விலாசமே; அஃது எவ்வளவு பகுப்புகளாகத் தோன்றினுலும், பரமாணுவின் அணுவாக அதை வகுத்தாலும் அதுவும் அந்தச் சக்தி வடிவேயாம்.

உண்மை அதுவே. மற்ற தெல்லாம் அதன் விளக்கமே. அதுவே பூரணம்; மற்றதற் கெல்லாம் குறித்த இடம், காலம், காரணம் உண்டு. எல்லா மனமும் பல சாகையாக விரிந்த ஒன்று; எல்லா வுயிர்களும் பல வுள்ளங்களில் துடிக்கும் ஒருயிர்; எல்லா உருவும், உடலும் ஒரு சக்தியின் பல தோற்றங்கள். எல்லாம் அடிக்கடி மாறும் காட்சிப் படலம்; அவற்றின் உள்ளுண்மையான ஒன்றே என்றும் நின்று நிலைப்பதாம். அந்த உண்மையை மறுபடி கண்டுபிடிக்கவேண்டும். மனம் பேத புத்தியில் மயங்கி, நானு ஜகத்தில் சுழன்று, வழி தப்பி அஞ்ஞானத்தில் அலைவதால், தனக்குப் பின்னுள்ள ஆழ்ந்த உண்மையை அறிய முடிவதில்லை. தற்போதத்தால், உடலே தான் என்னும் மயக்கத்தால், அந்த அஞ்ஞானம் அதிகரிக்கிறது. மனம் தன் புறவினைகளுக்கு உடலை உபயோகிக்கிறது; அதனுல் உடலே மனதைத் தீர்மானிக்கிறது என்று பிசகாக நினைக்கிறோம். உடலிற் பதிந்த மனமே ஸ்தூல மனம், தேகாத்ம புத்தி; அதுவே பிறவிக்கு வித்தாகும். அதற்குப் பின்னுல் பிராணமய புருஷன் உள்ளது. அதனுடன் கூடிய மனம் பிராண மனம், அல்லது பிராணுத்ம புத்தி எனப்படும். அதுவே வினை யுடலிற் போக்கு வரவு செய்வது; அது காலத்திற்குக் கட்டுப்பட்டது; அது தன்னை யறியாது; தனக்குப் பின்னுள்ள உண்மை யறியாது. அது வீரிய தேகத்தில் கட்டுப்பட்டது; அதற்கும் பின்னுல் மனம் உள்ளது; அதில் மனேமய புருஷன் அல்லது மானஸாத்மா உள்ளது; அதுவே உலகை மனே

மயமாகக் காண்பது. இதையே சிலர் சுத்தாத்மா வென்று பிசகாக நினைக்கிருர்கள். சுத்த மனங்கூட ஆத்மாவன்று; அதிலும் மனத்திற்குரிய விகாரம் உண்டு; அதுவும் தனி யுணர்ச்சி கொண்டது; அன்னிய பாவனே கொண்டது; அது வாழ்வி னின்றும் தன்னே விலக்கி உள்ளே சென்று ஒரு வகையான ஐக்கியத்தில் மறைந்து அமைதி யாகலாம். அஃது உண்மையின் சாயலேக் காணலாம்; அசல் உண்மையைக் காணமுடியாது. அதற்கும் அவித்தைத் திரை யுண்டு. இந்தத் திரையை விலக்கி, பேத புத்தியை ஒழித்து, சாந்தமும் மௌனமும் கைவந்த பிறகே வஸ்துக்களின் உண்மை புலப்படும்; அப்போதே உலகம் இன்னதென்று தெரியும்; அதன் புதிரை அவிழ்க்கும் இரகசியம் புலப்படும்; அப்போதே நம்மை அனைவருள்ளும், அனைவரையும் நம்மிலும், உலகை ஒன்றின் பன்மையென்றும் காண்போம். அப்போதே எல்லாப் பிழைகளுக்கும் மூலமான தனிச் செருக்கொழியும். அந்த அதிமனமே விஞ்ஞானம் அல்லது சத்திய சேதனமாகும். அதன் ஆயுதமே மனம். மனம் தனது அறிவின் வேரைக் கண்டுபிடிக்கவில்லே; தான் இன்ன பொருளின் அங்கம் என்பதை அறியவில்லே. அதுவே அதன் பிழைகளுக்குக் காரணம். நான் எனதென்னும் அகம்பாவமே அதன் முதற் பிழை. அது விஸ்வாத் மாவை உணராது, தன்னேயே பிரதானமாக நினேக் கிறது; இந்த மடமையினின்றே மற்றெல்லா மயக்கங்களும் பிழைகளும் உண்டாகின்றன. அதன் பார்வை, உணர்வு, அறிவு, இன்பம் எல்லாம் குறுகியன; ஆதலால் அதற்கு எல்லாம் குறுகலும் கோணலும், பேதமுமாகக் காண்கின்றன. வஸ்துக் களின் சங்கிலித் தொடர்பை அஃது அறிவதில்லே. அறிவின்மையில் அகங்காரங் கொண்டு மெய்யின்பங்

காணுது அது துன்புறுகிறது. அஃது உள்ளாழ்ந்து தன் சொரூபத்தையும், காரியத்தையும் அறிய வேண்டும். சச்சிதானந்தம் பலவாக விளையாடுவதற்கு அஃது ஒரு சாதனம் என்று உணரவேண்டும். அப்போதே வாழ்வின் தத்துவம் அதற்கு விளங்கும். மனம் விஞ்ஞானத்துடன் சேர்ந்தொழுகினுல் அது வக்கிரமும் பொய்யுமின்றி அகில வுண்மையை அறிந்து நடக்கும். மனம் இருக்குமிடம் விஞ்ஞானமும் அந்தர்கதமாயிருக்கும்; அதை யறிந்தால் மனப் பிழைகள் நீங்கும்.

# 15. பிராணன்

அடுத்தபடி பிராணனை ஆராய்வோம்; பிராணன், ஜீவன் என்றதும், மாயை, துன்பக் கனவு, மனப் பைத்தியம், அதை விட்டொழித்துக் கைவல்ய பதவி யடைவதே இன்பம் என்றல் கூடாது. பிராணன் என்றால் என்ன, அதன் பயனென்ன, சிறப்பென்ன என்பவற்றை ஆராய்வோம்.

பிராணன் பௌதிக சரீரத்தை ஆதாரமாகக் கொண்டு விளங்கும் ஓர் உள்கை சக்தி; பிராண சக்தி அழியாவோட்டமுள்ளது. அதற்குச் சாவு கிடையாது; சாவு என்பது சட்டை மாற்றமே; பிராண சக்தி பழைய உடலை உதறிப் புதிய உடலைப் பூண்டு ஜீவிக்கிறது; அஃது உருமாற்றமே; உயிர்மாற்ற மன்று; உயிரைச் சூழ்ந்த மனம் ஒவ்வொரு மாற்றத்திலும் ஏற்றமடையும். இயற்கையில் எதுவும் அழிவதில்லை; எல்லாம் புது மாறுதல் அடைகின்றன.

பிராண சக்தி எங்கும் நிறைந்த ஒரு வஸ்து; செடி கொடி, விலங்கு, மனிதர் அனைத்திலும் அது நிறைந்திருக்கிறது; எல்லா உருவங்களுக்கும் அஃது உயிராயிருக்கிறது; பிராணசக்தி பௌதிகத்துடன் சேர்ந்தே உலகம் ஜீவிக்கிறது. மண்ணிலுள்ள பிராண சக்தியை உண்டு செடிகள் வளருகின்றன; செடிகளின் பிராண சக்தியை உண்டு உயிரினங்கள் வாழ்கின்றன. எல்லாம் ஒரு விசுவப் பிராணனால் உயிர்க்கின்றன; சிருஷ்டியே அழிந்தாலும் அந்தப் பிராணன் அழியாது. அதுவே சடவுருவில் உயிர்ப்பது.

பிராணன் என்றால் என்ன? பிராணிகளில் உண்டு, உணர்ந்து, உயிர்ப்பதே பிராணன் என்று நாம் நினைக்கிறோம்; ஆனால் இவை பிராண கர்மங்களே யொழிய அசல் பிராணனல்ல. மூச்சு, உணர்வு

அசைவு இவற்றை அடக்கலாம்; இவை நின்றும் மனிதன் உயிரோடிருக்கலாம்; சில ஹடயோகிகள் மூச்சுப்போக இடமில்லாது குழியில் புதைத்தாலும் உயிரோடிருப்பதைக் காண்கிறோம்; இதயத் துடிப்பைக் கூடக் கட்டுப்படுத்தும் யோகிகள் இருக் கிறார்கள். சமாதியில் உடல் மன வுணர்வே யின்றி லயித்துப்போகும் யோகிகள் உள்ளனர். அப்போதும் பிராணன் உள்ளே யிருக்கும். நம்மைப்போலவே மரஞ் செடி கொடிகளும் உண்டு உறங்கி உயிர்த்து இன்பதுன்பப்பட்டு மரபை வளர்த்து ஜீவிக்கின்றன; அவற்றிற்கும் உணர்ச்சியுண்டு. அவை வெயிலில் வாடுவதும், மழையில் சிலிர்ப்பதும் காண்கிறோம்; பருவ முதிர்ச்சியால் தளர்ந்து படக் காண்கிறோம். செடிகள்போலவே உலோக வகைகளுக்கும் உயிருண்டு என்று ஒரு புலவர் ஆராய்ந்திருக்கிறார். அப்படியானால் அஃது உண்டாகும் மண்ணிலும் உயிர் அடங்கியிருக்கவேண்டும். நுட்பமாகப் பார்த்தால் ஜீவனில்லாத இடமே கிடையாது. தெரிந்தோ தெரியாமலோ, அடங்கியோ, விளங்கியோ, எல்லாப் பொருள்களுள்ளும் பிராணன் பரவியிருக்கிறது; அஃது என்றுமுள்ளது, அழியாதது. அதன் உருவும், தொகுப்புமே வெவ்வேறு. பிராண சக்தி ஒன்றுதான். அதுவே பௌதிக சக்தி, வீரிய சக்தி, மனோ சக்தி யாகப் பரிணமிக்கிறது. ஜீவனற்ற சடமாகத் தோன்றும் வஸ்துக்களிலும் அஃது உள்ளது. அதன் விளக்கமே வெவ்வேறாயிருக்கிறது. செடிக்கு நரம் புண்டு, நரம்புணர்வுண்டு; குளிர் வெப்பத்தால் அது மாறுபடுகிறது; ஆனால் அதன் உணர்வு அவசேதன வுணர்வு; அதில் மன வுணர்வு விகசிக்கவில்லை. மனிதனுள்ளும் அவசேதனம் உள்ளது; அது மனத்தின் மூலம் விளங்குகிறது. நான் எழுதும் போது மனம் சிந்திக்கிறது; ஆனால், பேனாவை அவ

சேதன வுணர்வே ஓட்டுகிறது. கை நரம்பால் அசைகிறது. மனம் நினைப்பிலிருக்கிறது.

ஒவ்வோரணுவிலும் பிராண சக்தியுள்ளது. அணுக்களில் கவர்ச்சியும், ஒதுக்கமும் உண்டு; அவை நம்மிடம் உள்ள விருப்பும் வெறுப்பும் போலாகும். சடப்பொருள்களிலும் பிராணசக்தி உள்ளடங்கி உறங்குகிறது; அதுவே தாவரத்தில் உணர்ச்சி கொண்டு விளங்குகிறது; விலங்குகளில் ஐம்புல வுணர்வுடன் காண்கிறது; மனிதனில் மன வுணர்வு பெற்று விளங்குகிறது; அணுமுதல் ஆள் வரையில் பிராணன் ஏக ரசமாயுள்ளது. அது மனத்திற்கும் சடத்திற்கும் தொடர்பூட்டுகிறது. அது நரம்புகளில் இயங்குகிறது. அது வீரியசக்தி.

# 16. சாவு, ஆசை, சோர்வு

பிராணசக்தி ஜடவுருக்களை ஆக்கி, ஊக்கி, மாற்றி யமைக்கிறது. அதுவே ஜடத்தையும் மனத்தையும் இணைக்கிறது. ஜடப்பிரகிருதி அதற்கு ஆதாரமாகும். அதிலும் உயிர் உள்ளுறைந்துள்ளது. பிராணனில் மனம் உள்ளுறையும். மனத்துள் விஞ்ஞானம் கரந்துள்ளது. விஞ்ஞான சக்தியினாலேதான் மனமும் உயிரும் செயல் புரியும்; விஞ்ஞானம் சச்சிதானந்தத் தொடர்புடையது. பிராணன் விகசிக்க விகசிக்க, தன்னையும் சச்சிதானந்த சக்தி என்றறியும். நமது உடலில் உள்ள வியக்தி ஜீவன், தனியுணர்வில் மட்டுப் பட்டது, கட்டுப்பட்டது; அது விசுவ ஜீவனத்தை, விசுவ சக்தியைக் கலந்தாலே தனியுணர்வு மாறி அகண்ட சேதனம் பெறும்.

அதுகாறும் ஆசையும், சோர்வும், சாவும் அதை வாட்டிக்கொண்டே யிருக்கும். தனியுயிர் உலகுயிரின் சிறு பங்கு; எத்தனையோ நாம ரூப பேதங்களில் அஃதொன்று: தனது ஆடல் முடிந்ததுமே அது கரைந்துபோகும். உலகில் எத்தனையோ சக்திகள் விளையாடுகின்றன; வியக்தி ஜீவன் அவற்றுடன் பொருது வசப்படுத்திப் பிழைக்கவேண்டியிருக்கிறது. இஃது அவற்றிற்கு இரையாவதும் இயல்பு. ஜடத்தை உபநிடதம் 'அன்னம்' என்னும். "உணவை உண்பவன் உண்ணப்படுகிறான்" என்பது வசனம்.

உடலுயிருக்கும், உலகுயிருக்கும் அடிக்கடி போட்டி நடக்கிறது; உலகுயிர் உடலுயிரைப் பலமாகத் தாக்குகிறது; அதைத் தாங்கமுடியாமல், ஜீரணிக்கமாட்டாமல் உடலுயிர் தளர்ந்து புதுமை பெற மறைகிறது; இதையே சாவு என்கிறோம். உலகுயிரின் தாக்குதலைத் திண்மையாகத் தாங்க முடிந்தால், உடலுயிருக்கு அழிவில்லை. உடலுக்குப்

பிராண சக்தி உணவாகிறது; பிராணசக்திக்கு உடல் உணவாகிறது; ஒன்றை யொன்று உண்டு செரிக்கிறது. இரண்டிற்கும் நிறை சரியாயில்லாது போனால் உடலுயிரின் சகன சக்தி தளர்ந்தால், உடல் நிலை குலைகிறது. நோவும், தளர்வும் அதை அழிக்கின்றன. நோவும் தளர்வும் இயல்பான நிறை குலைவதனால் வருவன. உலக சக்திகளை உடலுயிர் வெல்லப் புகுந்தால், கிளர்ச்சியும் புரட்சியும் எதிர்ப்பும் அதிகரிக்கின்றன. மட்டுப்பட்ட உடலுயிர் எவ்வளவு தான் உலக சக்திகளை எதிர்த்து நின்றாலும், முடிவில் இணங்கித் தோற்றோடி மறுபடியும் புதிய பலத்துடன் வந்து மீண்டும் மறையும். அது தானே உலக சக்தியாகுமட்டும் இதே கதிதான். உடலுயிர் காலத்தில் ஓடுகிறது; அது புதுப்புது அறிவையும் அனுபவங்களையும் பெறவேண்டும். புதிய திறமைக்கும் நுகர்வுக்கும் தயாராக வேண்டும்; இவ்வாறே அது பக்குவமெய்தும். இதற்கே அஃது உடலையும் உருவையும் அடிக்கடி மாற்றவேண்டி யிருக்கிறது.

வாழ்வும் சாவும் பெரிய போராட்டமே; இந்தப் போராட்டத்தை வெல்லவே தனியுயிர் மீண்டும் மீண்டும் உடலெடுக்கிறது. முன் அனுபவங்களை அது தன்னுடன் கொண்டுவருகிறது. சாவு என்பது உயிர் ஒழிதலன்று; அஃது உயிரின் யாத்திரையாகும். உயிர் காலத்திலும் இடத்திலும் கட்டுப்பட்டது. அதற்குப் பல அனுபவங்கள் அவசியம். அவற்றை ஒரே உடலில், ஒரே வாழ்வில் அடைய முடியாது. ஆதலால், அது பலவுடல் எடுத்து, புதிய புதிய சந்தர்ப்பங்களுடன் பொருது பல அனுபவங்களால் பக்குவமாகவேண்டி யிருக்கிறது. இதற்கே அஃது உருமாறுகிறது. உடலுயிரை உலகுயிர் உண்டு உண்டு புதிப்பிக்கிறது. இதன் அவசியத்தை உடலுயிர் உணராமல் போராட்டத்தால் கலங்கி, நலிந்து துயரப்

படுகிறது. அதனால், அஃது உலகையும் உயிரையும் அனாத்மா, அன்னியம் என்று வெறுத்துப் பிறப்பை ஒழிக்க விரும்புகிறது. உடல் போனாலும் உயிர் இருக்கும். அதனுடன் நமது மனோ சங்கற்ப விகற்பங்களெல்லாம் இருக்கும். இதைக் கூட நினையாமல், உடலுயிர் சாவை அஞ்சுகிறது. உபநிடதம், உயிரை "ஆசன்ய ம்ருத்யு," கொல்லும் பசி என்கிறது. பௌதிக உலகமே இந்தப் பசியால் ஆனதே.

ஆசை ஒரு பகாசுரப் பசி; அணுவாகிய உயிர் உலகை வென்று பரவ வேட்பதே ஆசை. தேக பலம், நீண்ட ஆயுள், புத்தி பலம், அனுபவம், தர்மபலம் இவற்றால் உலகை வளைத்துத் தான் மேலோங்க வேண்டும் என்ற அவா வியக்திஜீவனை உந்துகிறது. அந்தப் பசியைத் தீர்க்க அது பிறர் தலையில் கை வைக்கிறது; பிறர் பொருளை அபகரிக்கிறது; சுற்றியுள்ளதைச் சுரண்டுகிறது; பிறரை விழுங்குகிறது. விழுங்குவோன் விழுங்கப்படுகிறான்; பறிப்பவன் இழக்கிறான். இது கர்மவிதி; வினைக்கு எதிர்வினை யுண்டு. அதன்படி சுரண்டும் உயிர் சுரண்டப்பெற்று, சோர்ந்து, தளர்ந்து வீழ்ச்சி யடைகிறது. உயிர்ப் பசி மனத்தில் நைப்பாசை யாகிறது; புத்தியில் அந்த ஆசையைத் தீர்க்கும் சங்கற்பமுண்டாகிறது. உலகிற் கிறைவனான, அனந்த வஸ்துவுடன் ஒன்றுகுமட்டும் இந்த ஆசைப்பசி மனிதனை விடாது. மனிதன் தியாக புத்தியால் தன்னைப் பிறருக்குத் தந்து, பிறர் உதவியையும் ஏற்பது முன்னேற்றத்திற்கு முதற்படியாகும். மனிதன் தன்னைக் கடவுளுக்கு தருவதே அடுத்தபடி. தம்மைக் கொடுத்தவருக்கு இறைவன் தன்னையே கொடுப்பான். இறைவன் அன்புமயன், நித்தியன், சர்வாத்மன்; மனிதன் தன்னை முழுதும் இறைவனுக்குத் தந்தால்,

அவனது அடங்காப் பசி தீரும்; பசி பக்தியாக மாறும்; மன வேறுபாடொழிந்து, ஐக்கியம் உண்டாகும்; சாவொழிந்து அமரத் தன்மை உண்டாகும். இதுதான் வியக்தி ஜீவனின் நிறைவேற்ற மாகும். இந்த நிறைவேற்றம் கைகூடுமட்டும் சாவின் அச்சம் ஜீவனைச் சூழ்ந்துகொண்டே யிருக்கும். ஆசை யென்பது காலத்தை வென்று, இடத்தைக் கைப்பற்றும் உயிர்ப்பசி; அனந்த சச்சிதானந்த மயனை இறைவனிடமே அதற்கு முடிவிடமாகும்.

உயிர் உடலில் கட்டுப்பட்ட அளவற்ற சக்தி. அதன் செயல்கள் குறையும், தளர்வும், தடுமாற்றமும் ஆனவை; எனினும் அதன் அந்தரங்கத்திலும் அனந்த சக்தி யுணர்வு மறைந்திருக்கிறது. அந்தச் சக்தியின்றி அணுவும் அசையாது; எந்த இயக்கமும் நடை பெறாது. உடலுயிர் சுற்றிலுமுள்ள எத்தனையோ உயிர்களுடன் போராட வேண்டி யிருக்கிறது. எத்தனையோ பலங்கள் அதை மோதிச் சிதறடிக் கின்றன; அவற்றிற்கு ஈடு கொடுக்க முடியாது, அது தளர்ச்சி யடைகிறது; அசக்தமாகிறது. இந்த அசக்தம் தனி உயிருக்கு இயல்பான மூன்றாவது குறையாகும். சுற்றத்தை வெல்லத் திறனில்லையே என்ற தளர்வுடன், எப்படியாவது வெல்லவேண்டும் என்ற ஆசையும் அதை உந்துகிறது. வியக்தி ஜீவசக்தி சுத்த மனதைப் பின்பற்றி இறைவனுக்குத் தன்னைத் தரவேண்டும். அவனே அதன் குறை நிறைகளை அறிவான். எப்போது எதைச் செய்ய வேண்டு மென்பது அவனுக்கே தெரியும். நம் தோல்விகளும் நன்மைக்கே; அவையும் எல்லாம் அறிந்த இறைவன் இச்சையே; உலக இயக்கத்தில் எது எப்படி யிருக்க வேண்டும் என்பதை அவன் அறிவான். அசுத்த மனத்தை உயிர் பின்பற்றி ஆசாபாசங்களை வேட்டை யாடித் திரிந்தால் தளர்வும் துயரும் தோல்வியும்

வரத்தான் செய்யும்; 'இந்த வழி போகாதே; உனக்கு வழி அது' என்று காட்டவே அவை வருகின்றன. சகோதர மனிதரிடையே போட்டி, பொறாமை, மாச்சரியம், எல்லாம் ஆசைப் பசியால் கிளம்பி ஆளைத் தளர்த்துகின்றன. உயிர் உயிரைத் தழுவிக் கொள்வதற்குப் பதிலாகப் பகைத்துப் பொருது அழிக்க முயலுகிறது. இந்தப் போராட்டமும் வேண்டியதுதான். சாவும், ஆசையும், அசக்தமும், தானெனக் கிளம்பும் உடலுயிர்ப் போராட்டத்தில் அவசியம் இருக்கும். எல்லாம் மனிதனின் பேத புத்தியாலும் மனப் பசியாலும் வருவன.

---

# 17. ஜீவ விசாலம்

தெய்வ சேதனம் அமரத் தன்மை பெற்றது; கட்டு மட்டற்றது; ஒளிமயமானது; இரு விகார இருள் மனம் அதன் மங்கிய வடிவமே; சோர்வும், பசியும், சாவுங்கொண்ட நமது சாதாரண ஜீவனும் அதன் மங்கி மழுங்கிய வடிவமே. மனவுணர்வு விஞ்ஞான திவ்ய சேதனத்தை எட்டி அருட்சோதி பொலியவேண்டும்; அதுபோல் பிராணனும் திவ்ய சேதனத்தால் அமரத்தன்மை பெற வேண்டும். உயிருக்கு மூன்று வளர்ச்சியுண்டு. முதலில் அது ஜடத்தில் கட்டுண்டு உணர்வற்றிருக்கிறது; பிறகு உயிர் வெளிப்பட்டு, அவசேதன சக்தியால் மோதப் பட்டு, அஞ்ஞான அந்தகாரத்தில் இடர்ப்படுகிறது. அதனின்று படிப்படியாக உயர்ந்து உயிர் மனோமய சேதனத்தை எட்டுகிறது; மனத்தில் கட்டுப்பட்ட உயிர்கள் ஆசை, பசி, தளர்ச்சி, போட்டி, போராட்டம், சாவு இவற்றால் வருந்துகின்றன; ஒன்றை யொன்று விழுங்குகின்றன. கட்டுமட்டுகளை உடைத்தெறிந்து விஞ்ஞான சுதந்தரத்திற்கு உயர்ந்து அமர வாழ்வு பெறவே உயிர் இப்படிப் போராடிப் பரிணமிக்கிறது. இந்தப் பரிணாமத்தை டார்வின் நவீன உலகிற்கு விளக்கினார்.

அமரத்தன்மை பெறும் முயற்சியில் வழித் தடுமாற்றமே சாவென்பது. பசியும் ஒரு சந்துஷ்டியை நோக்கிய தூண்டுதலாம்; ஆசையும் ஜீவானந்தத்தை அடையவே போராடுகிறது; ஜீவன் திவ்ய ஜீவனை நோக்கி முட்டித்தள்ளிச் செல்லும் வேகமே போராட்டம். நமது தளர்ச்சியும் பலத்தை நோக்கிய தடுமாற்றமே; நமது குறையும் நிறைவை எட்டும் வழிப்பிசகே. வாழ்வுப் போராட்ட மெல்லாம் ஒன்றை யொன்று உண்டு பிழைக்கவன்று. படிப்படியாக

விசாலித்து அகண்ட பரிபூரணத்தை எட்டுவதே அதன் நோக்கம். மேலும் மேலும் பெருக வளர்தலே அழியா வாழ்விற்கு வழியாகும். டார்வின் "வல்லது நிலைத்தல்" (Survival of the fittest) என்பதால் இந்த அழியா நிலையையே விளக்க முயன்றார்; ஆனால், டார்வின் பௌதிக மூளையால் ஆராய்ந்தார். சுற்றத்தை வென்றோங்குவதே அவர் கண்ட வழி; அவர் கொள்கை மாந்தரின் ஆசை மனத்தில் வேரூன்றியது; அதனால், தான் தனக்கு என்ற தனிச் செருக்கும் சுயநலமும் மேலிட்டன; தன்னைக் காத்து, தான் முதன்மை பெற்று, மற்றவரை அடக்கி யாளும் ஆக்கிரகம் எழுந்தது; டார்வின் மனிதன் தனக்கே வாழ்கிறான். தானே பிழைத்திருக்கும் அவனது ஆசையைச் சாவு முறியடிக்கிறது. பிறகு, மனிதன் தனது மரபைக் காக்க முனைகிறான். அதற்குச் சுயநலத்தை விடவேண்டும்; பிறருக்கு உதவியாகச் சேர்ந்து வாழவேண்டும். தன்னையே மதிக்கும் சுயநல மனிதன், மரபன்பால் தன் மனை மக்கள், சுற்றம், நண்பர், இனத்தினர் முதலியோருக்கு இதமாக வாழத் தொடங்குகிறான். அதனால் அவன் இதயத்தன்பு விரிந்து மலர்ந்து இனத்தைத் தழுவுகிறது. இந்த இனத்தன்பும் சுயநலத்தின் விரிவேயாகும். அனுபவத்தால் மன விசாலமாகி, அன்பும், பிறர்க்கு உதவியும் அதிகமாகவே தான் என்பது அற்பமாகத் தோன்றும்; அகிலாத்மா பெரிதெனத் தோன்றும்; அகிலாத்மாவின்றித் தனக்கு வாழ்வில்லை யெனத் தெரியும். தனக்கு மிஞ்சி உலகம் உள்ளது, ஜீவாத்மா வுக்கு மேல் விசுவாத்மாவுள்ளது, தன்னுயிருக்கு மேல் உலகுயிர் உள்ளது என்று அறிந்ததுமே, அகில வுண்மை விளங்கும்; சுயநலம் மறையும்; விசால மனம், எல்லாம் ஒன்றெனக் காணும்; விஞ்ஞானத்தை நோக்கி உயரும்.

உயிர் அணுவில் தொடங்குகிறது ; அணுவுக்குத் தனி உருவும் இயக்கமும் உண்டு ; என்றாலும் அது பல சேர்ந்தே பொருள் வடிவாகும். தனிமையை விட ஒற்றுமைக்கே பலம் அதிகம். பல அணுக்கள் ஒன்றுபட்டு நெருங்கியே இயற்கையிலும் செயற்கையிலும் உருவங்களாக விளங்குகின்றன.

உயிர் எங்கும் நிறைந்தது ; ஆதலால் நம் உடலில் உள்ள உயிருக்கும் மற்ற உடல்களிலுள்ள உயிருக்கும் சம்பந்தமுண்டு ; அதேமாதிரியே நம் மனத்திற்கும் பிறர் மனத்திற்கும் தொடர்புண்டு. ஸ்தூல தேகத்திற்குள் சூக்ஷ்ம தேகம் உள்ளது ; இரண்டையும் உயிர் இணைத்து நிற்கிறது. ஒரு சூக்ஷ்ம சரீரத்தில் கிளரும் உணர்ச்சிகளும், ஆவேசங்களும் மற்ற சூக்ஷ்ம சரீரங்களிலும் புகுந்து பரவும். ஒருவர் மனத்தில் நினைத்தது பிறர் மனத்திலும் தாக்கிப் பரவும். அணுக்களும், பூதங்களும் ஒன்றோடொன்று கலப்பது போலவே உயிர்களும், மனங்களும் கலப்பது இயற்கை விதியாகும்.

ஆகையால் ஜீவதத்துவம் இரண்டாகும் : ஒன்று தான் தனக்கு என்று தன்னைக் காக்க, தான் மேலோங்கவே வாழ்வது ; மற்றொன்று மற்ற ஜீவர்களுடன் கலந்து உலகளாவ வாழுதல். தன்னுயிர், தன் விரிவான உலகுயிர் ஆகிய இருவகையாக உயிர் விளங்கும். உருவும், நிலைப்பும் பெறுவதற்கு உறுதியான தனி யுணர்ச்சி வேண்டியதே ; அதற்கே இயற்கைதான் தனது தனக்கு என்னும் நினைப்பைத் தருகிறது ; தன்னுறுதியும் நிலைப்பும் ஏற்பட்டபிறகு இயற்கை 'இனி நீ விரிந்து பரவு!' என்று உயிரை உந்துகிறது. உடனே உயிரின் தனிச்செருக்கொழிந்து, 'எங்கும் நிறைந்த உயிரே நாம் ; ஆதலால் எல்லா உயிர்களுடனும் நாம் கலந்திருக்க வேண்டும்' என்ற உணர்ச்சி தளிர்க்கிறது. தன்னில் நிலைத்துப் பிறருடன்

கலந்து உலகளாவ வாழ்வதே உயிரின் இயற்கையாகும். தனது நிறைபோற்றி அது உலக வாழ்வுடனும் பங்கு கொள்ளவேண்டும். உடலுக்குக் கூட அதே நியமந்தான்; எங்கும் நிறைந்த பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உடல் உருவாகிறது. உடல் அழியும் போது, அதன் தாதுக்கள் பஞ்ச பூதங்களில் லயமாகின்றன. இப்படித் தனித்தும், அனைத்துமாயுமிருக்கும் தன்மை தூல பிராண சேதனத்தில் வாழும் விலங்குகளால் அறிய முடியாது; புத்திமானுகிய மனிதனே அதை அறிவான். தனக்கொரு தனியுயிரும் தொகுப்புயிரும் உண்டென்பதை அவன் உணர்வான்.

தூலவடிவம் ஆயுள் தீர்ந்ததும் வீழ்ந்து மண்ணுகி மறைகிறது. எனினும் உயிர் மறைவதில்லை; அஃது இன்னொரு வடிவுடன் வருகிறது. உயிர் நித்தியத் தொடர்ச்சி; பிறவி அதன் சங்கிலிக் கோவையாகும். ஸயன்ஸ்கூடப் பரம்பரைக் குணத்தை ஒப்புகிறது.

அதனுல் பூர்வ ஜன்ம வாஸனையால் திடீரென்று சிலர் மேதாவியா யிருக்கக் காண்கிறோம். புறவுடல், வந்து வந்து சென்றாலும், நுண்ணுடல் போர்த்த வுயிரோட்டம் என்றுமிருக்கும்; அறிவாளி முக்காலத்தையும் ஒரு காலத் தொடர்பாகக் காண்கிறான்; முற்பிறவி, இப்பிறவி, வருபிறவி மூன்றையும் ஓர் உயிர்த்தொடர்பாகக் காண்கிறான்; ஆதலால் அவன் பிறப்பிறப்பினுல் மாறாது நித்திய வுணர்வில் வாழ்கிறான். அன்பினுலேதான் மனிதன் தன்னுயிரைக் கொண்டு பிற வுயிர்களுடன் கலந்து வாழமுடியும்; அன்பினுல் ஆத்மா விசாலிக்கும். இந்த ஆத்ம விசாலமின்றி அன்பிற்கு ஓட்டமில்லை; வளர்ச்சியில்லை; கலப்பில்லை; ஒன்றோடொன்று கலந்து பரவாமல் உயிர்வாழ்வு சுருங்கி உலர்ந்துபோகும். தன்னுயிர் மன்னுயிருடன் கலந்து, சுயநலமொழிந்து, எல்லாம் தான், தானே எல்லாம் என்றுணர்ந்து

அன்பும், பரோபகாரமும், ஆத்ம நேசமும், தியாகமும், ஒற்றுமையும் கொண்டு சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமையாகும்; அதுவே எல்லாரும் எல்லாருக்கும் வாழ்ந்து, எல்லா வுயிர்களுடனும் கூடித் தனியுயிரும் இன்புற வழியாகும். தன்னைக் கொடுக்கக் கொடுக்கத் தனக்கு மேன்மேலும் கிடைக்கும்; தனது திறமை மேன்மேலும் வளரும். இதயத்துடன் கலந்து மனம் விசாலிக்க விசாலிக்க அன்பு விசாலிக்கும்; இன்பம் விசாலிக்கும். இங்கே நாம் அன்பு என்பது பிராணனைப்பற்றிய ஆசாபாசமன்று, காமமன்று; காமம் ஒரு பசித்தினவே. இங்கே தூய வுள்ளன்பையே பேசுகிறோம். தனக்கே வாழுமட்டும் ஆசாபிமானத்தில் உயிர் கட்டுப்படுகிறது; அதன் பசி அடங்குவதில்லை; அது தன்னைக் கொடுக்கச் சம்மதிப்பதில்லை; பிறரிடம் பெற்றுக்கொள்ளவே விரும்புகிறது; தன்னைக் கொடுத்து விசாலிக்காத ஜீவன் குறுகிப்போகும். அப்படிப்பட்ட கருமிச் சீவனுக்கு இயற்கையில் இடமில்லை, நிலைப்பில்லை. "கொடு கொடு" என்று இயற்கை அதை உந்தித் தள்ளும். ஒருவருக்கொருவர் உதவி, அன்பு, தானம், ஆத்ம நிவேதனம், தியாகம் ஆகியவற்றாலேதான் தனியுயிர் உலகளாவ விரியும். அதனால் பிறர் இன்பம் தனதின்பம், பிறர் செழிப்பு தன் செழிப்பு, பிறர் நலம் தனது நலம், பிறர் அன்பு தன்னன்பு, பிறர் வாழ்வு தன் வாழ்வாகி ஜீவாத்மா சர்வாத்ம சேதனத்தில் வாழலாம். இந்த அகண்ட ஜீவ நிலை சித்துணர்வால் உண்டாகும். ஜடத்தன்மையில் உயிர் ஒருவடிவில் கட்டுப்பட்டு வாழ்கிறது. இது முதற்படி; அடுத்தபடியில் அஃது இந்தக் கட்டுப்பாட்டை உடைத்துத் தள்ளித் தன்னை விசாரிக்கத் தொடங்குகிறது; மூன்றாவது படியில் தான் என்பது சமஷ்டி சேதனத்தில் லயமாகிறது. ஒருவருக்கொருவர்

அன்பும் உதவியும் ஐக்கியமும் கொண்டு வாழ்வத னாலேயே இந்த நிலை எய்தும். இதனினும் உயர்ந்த நான்காவது நிலையுள்ளது. அதில் எனது யான் என்ற உணர்வேயிராது: இரு விகார மனமிராது: தாகமோக சோகங்கள் இரா; அதில் எல்லாம் ஏகரஸமாகக் காணும்; தானே பிறர், பிறரே தான்; உள்ளுயிரே உலகுயிர்; உலகுயிரே உள்ளுயிர்; எல்லாம் ஒரு சின்மய விலாசம் எனக் காணும். அந்த நான்காவது நிலை மனங்கடந்தது; அது விஞ்ஞான நிலை; அது சுத்தாத்ம சுதந்தரத்தாலும், ஐக்கியத்தாலும் உண்டா வது. அதிலேதான் ஜீவவிலாசம் பூரணமாகும்.

---

# 18. வாழ்வின் கேள்வி

அகண்ட பரிபூரண சச்சிதானந்த விளக்கமே ஜீவன் என்பதை அறிந்தோம்; இருள் சூழ்ந்த மனத்தினுலேதான் அதன் பரிசுத்தத் தன்மையும், சக்தியும் விளங்கவில்லை. இதனுலேதான் இருவிகாரப் போராட்டங்கள் உண்டாகின்றன; ஒன்றை யொன்று போட்டிபோட்டு எதிர்த்துப் போராடு கிறது; எல்லாப் போராட்டங்களும் ஜீவனுக்குப் பின் மறைந்த உண்மை ஐக்கியத்தைத் தேடுகின்றன. அதை அடைவதே வாழ்வின் ஓயாக் கேள்விக்கு விடையாகும். அந்த விடையை வாழ்விலேயே, ஜீவ சேதனத்திலேயே கண்டுபிடிக்கவேண்டும். ஜீவ ரகசியம் சிற்சக்தியிலிருக்கிறது. உணர்வொடுங்கிய ஜடம், உயிர் தளிர்த்து அவசேதனத்துடன் விளங்கும் விலங்கு, மனத்தனுன மனிதன்—இம் மூன்று வகை யாக ஜீவன் இருக்கிறது. மனத்தில் கட்டுப்பட்ட மனிதன் தனி யுணர்வுடன், தனக்கென வாழ்கிறுன்; ஜீவனின் அகண்டத்தன்மையை அவன் அறியவில்லை; அகில ஜீவனில் தான் ஓர் அம்சம் என்பதை உணரவில்லை. அவன் சுற்றத்தை ஆள உலகை அறிகிறுன்; தனது உயிருக்கு உறுதி தேடவே அதை ஆராய்கிறுன்; தனது ஆதிக்கத்திற்கே மனத்தால் ஆராய்கிறுன்; உலகை ஆளவே தன்னை யறிகிறுன். தனது நிஜ சொரூபத்தை அவன் அறிவதில்லை; தன்னுள் அந்தர்யாமியான இறைவனை அறிவதில்லை. "அறி அறி!" என்று உள்ளே ஒன்று உந்தித் தள்ளுகிறது; இந்த அறிவிற்காகவே மனம் போராடிச் செல்லுகிறது. மனிதன் தன்னிடமுள்ள தெய்வத் தன்மையைக் கண்டு, தேவ மனிதனுகு மட்டும் போராட்டம் நிற்காது. ஏனென்றுல், மனம் மங்கலானது, பிளவுபட்டது, குறையுள்ளது;

பொருள்களை வகுத்தறிவதன்றித் தொகுத்தறியாதது. மனப்பான்மை பலவிதம்; ஒன்றுக்கொன்று முரண்; ஆதலால், உலக வொற்றுமை கடினமாயிருக்கிறது. உயிர், உலகம் இரண்டுமாக விரிந்த உயர் பொருளை உணரு'மட்டும் சமரசப் பேச்சுப் பலியாது. அனைத்திற்கும் ஆதாரமான சச்சிதானந்தத்தை அடைந்தாலே, தான் எதுவோ அதுவே உலகம் இரண்டும் ஒன்று என்ற உணர்வு வரும். உலகை யறியாது, பிறரை மதியாது, தனக்கே என்று வாழும் வாழ்க்கை நாம் காணுகிறபடியே இரு விகாரக் களனுகவேயிருக்கும். அத்தகைய வாழ்வில் ஒருவரை யொருவர் அறியார்; ஒருவர் உதவி மற்றவருக்கு வேண்டியதைக் கருதார். ஒருவருக்கொருவர் பொருமைப்பட்டு, முட்டி மோதிச் சண்டையிட்டுப் பிரிந்து, வஞ்சமும் வன்மமுங்கொண்டு வாழ்வர். உணர்வின்படியே வாழ்வும் இருக்கும். உணர்வில் ஒருமையிருந்தால் வாழ்விலும் ஒருமையாம்; உணர்வு வேறுபட்டால் வாழ்வும் விகாரப்படும்; சுற்றத்துடன் பொருந்தாது. ஐக்கியத்தின் அடிப்படை, உள்ள உணர்வில், ஆத்ம சேதனத்தில் உள்ளது. அதை யறிந்தால் அவரவர் சுதர்மத்தைப் பூர்த்திசெய்து, எல்லாரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லாருக்கும் வாழலாம். எல்லா உடலிலும், உயிரிலும் உளத்திலும் கலந்து விளங்கும் ஆனந்தத்தை ஒன்றுக அனுபவிக்கலாம்; குணகர்ம விபாவங்கள் எப்படி யிருந்தாலும், எல்லாரும் ஒரு பரம்பொருளில் இணைந்து வாழலாம். ஏனென்றுல் ஒன்றே எல்லாமாய் விரிந்தது. எல்லாம் சச்சிதானந்தத்தில் ஒன்று. சேதனத்திற்கேற்றபடியே சக்தியிருக்கும்; சித்தும் சக்தியும் உலகமாக விரிந்தன.

முதலில் சித்தும் சக்தியும் சச்சிதானந்தத்தில் ஒன்றுபட்டிருந்தன; பிறகு ஜடப் பிரகிருதியாக

விரிந்தன; பிறகு மனோமய ஜீவனாகப் பரிணமித்து, மானிடத்தில் விளங்கின; மானிடத்தை ஆயிரம் பிரச்சினைகள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை மனத்தால் தீர்க்கமுடியாது. நான்காவதான விஞ்ஞான நிலை பெற்றாலே அவற்றை இயல்பாகத் தீர்க்கலாம். அதிலேதான் உண்மையான மனிதன் வெளிப்படுவான். உலகில் தோன்றிய அருட்கவிகள், தீர்க்கதரிசிகள், தவமுனிவர், பெரிய மேதாவிகள் எல்லாரும் விஞ்ஞான ஜோதி மின்னல்களாக விளங்கினவர்களே.

சாதாரண மானிடன் தன்னையே சரியாக அறியவில்லை. அவன் மேலெழுந்தவாரியாக மனத்தையும், உயிரையும், உடலையும் அறிகிறான். உள்ளே எத்தனையோ குப்த சக்திகள் சூழ்ந்துள்ளன; அவற்றை அவன் அறியவும் ஆளவும் முடியவில்லை; அவையே அவனை அடிமையாக்கி ஆளுகின்றன. செய்வதெல்லாம் இயற்கை; தான் செய்வதாக மனிதன் அகம்பாவத்தால் நினைக்கிறான். இறைவன் எல்லார் உள்ளத்திலும் இருக்கிறான்; எல்லாரையும் தனது மாயா சக்கரத்தில் வைத்துச் சுழற்றுகிறான். எவ்வளவு அறிவாளியானாலும் அதைத் தப்பமுடியாது; இறைவனை அடைவதே உய்யும் வழி. பலவான உலகைப் படைக்கும் மாயா சக்தி, அவனிச்சையாலேயேதான் ஆடுகிறது; அவனே ஜீவ பரிணமத் தலைவன். அவனை அறியாதமட்டும் மனிதன் இரு விகாரப் போரில் வருந்தி வாழ்வின் இன்பத்தையும் ஐக்கிய ரகசியத்தையும் காணமாட்டான். மனிதன் தன்னை ஆழ்ந்து அறியாததால் வருந் துயரம் பெரிது; அதனினும் அவன் தன்னவரான மனிதரையும், தான் வாழும் உலகையும் அறியாது படும் துயரம் மிகப் பெரிது. உள்ளும் அறியாது, உலகும் அறியாது, ஒற்றுமை உண்டாகாது. மனிதனுடைய கீழியல்பு

மனிதனுடைய பொறுமையைத் தகர்க்கின்றன. அமைதி, இன்பம், ஐக்கியம் என்று கதறுகிறோம்! பதிலில்லை. மடமையும் கெட்ட எண்ணமும் ஒழிய வேண்டும்; ஒருவருக்கொருவர் மன வொருமை யேற்படவேண்டும்; சித்தம் சித்தத்துடன் ஒன்று சேரவேண்டும்; உள்ளம் பிறர் உள்ளுணர்வுடன் ஒன்றி உணரவேண்டும். உயிர் உயிருடன் கலந்து பிராண சக்தியை வளர்க்கவேண்டும்; உடல் மனத்தின் சிறையாகக் கூடாது; பிறர் நலத்துடன் அது கலக்கவேண்டும். அப்போதே தனி மனிதன் உலக மனிதனாக, உலகோருடன் ஒன்றுபட்டு வாழ முடியும். இருட் படலம் மூடிய ஜட சமுத்திரத்தி லிருந்து எழுந்து, மனிதன் நித்திய ஜோதியில் விளங்கும் தெய்வத்தின்பால் உணரவேண்டும். அன்னை நடத்துகிறாள்; அன்பும், ஆர்வமும், ஒள்ளிய அறிவுங் கொண்டு, அவளைப் பின்பற்றி ஏக வஸ்துவுடன் விஞ்ஞானத்தால் ஒன்றாகவேண்டும். அதுவே ஜீவவுன்னதி; அதுவே நர வாழ்வை தேவ ஜீவனமாக்கும். அதுவே வாழ்வின் கேள்விக்கு விடையளிக்கும்.

---

அகம்பாவம் பிடித்தது; அது பிறருடன் சேராது, தனிச் செருக்குடன் வாழ்கிறது; அதனாலேதான் உலகில் இவ்வளவு போர்கள் வருகின்றன. எது எல்லாருள்ளும் ஏகரசமாக உள்ளதோ, அந்த மெய்ப் பொருளுடன் ஒன்றுபட்டாலே, மனிதன் உலகிலும் ஒன்றுபட்டு வாழமுடியும்.

சடம், உயிர், மனம் ஆகிய மூன்று பரிணாம நிலைகளால் வேறு ஜீவன் பாதிக்கப்படுகிறது. உடலுக்கும் உயிருக்கும் போர் நடக்கிறது. உயிர் தன் ஆசைகளையும், வேகங்களையும் உடம்பில் மோதுகிறது; உடம்பு தாங்காமல் வருந்துகிறது, புரட்சி செய்கிறது. உடல் உயிர் இரண்டுடனும் மனம் போராடுகிறது. அஃது உயிராசைகளை அடக்கி, உடலைப் போற்ற முயலுகிறது; பிராண சக்தியைத் தன் மகிழ்வுக்கே திருப்ப முயலுகிறது. மனத்தின் கொடுங்கோலைப் பிராணன் எதிர்க்கிறது. புறப்போர் களைவிட உட்போர் பலமாகிறது. அதை நிறுத்த மனத்தால் முடியாது. ஆதலால் அஃது ஒன்று உலகாயதத்தில் இறங்கி உயிராசைகளுக்கும் உடலுக்கும் அடிமைப்படுகிறது. அல்லது உலகைத் துறந்து ஓடுகிறது. இரண்டும் பயனில்லை. மனத்தைக் கடந்த விஞ்ஞான சேதனத்தை எட்டினாலே வழியுண்டு. மனம், உயிர், உடல் மூன்றும் அவற்றிலுள்ள ஆத்ம தத்துவத்தை விட மெலிந் துள்ளன. உள்ளேயுள்ள சக்தியைக் காப்பாற்ற அவற்றால் முடிவதில்லை. ஆதலால், ஒன்றுக்கொன்று உள்ளும் புறமும் எதிர்த்து மோதி ஓயாது போரிடு கின்றன. மூன்றற்கும் ஐக்கியம் உண்டாக்க மனத்தால் முடியாது. மூன்றும் பூரணமானாலே அமைதியும் ஐக்கியமும் உண்டாகும். அபூர்ணமான மனம் பூரணத்தை எட்டாது. போகப்போக உலகுறவிலுள்ள வெறுப்பும் கசப்பும் கலகமும்

மனிதனுடைய பொறுமையைத் தகர்க்கின்றன. அமைதி, இன்பம், ஐக்கியம் என்று கதறுகிறோம்! பதிலில்லை. மடமையும் கெட்ட எண்ணமும் ஒழிய வேண்டும்; ஒருவருக்கொருவர் மன வொருமை யேற்படவேண்டும்; சித்தம் சித்தத்துடன் ஒன்று சேரவேண்டும்; உள்ளம் பிறர் உள்ளுணர்வுடன் ஒன்றி உணரவேண்டும். உயிர் உயிருடன் கலந்து பிராண சக்தியை வளர்க்கவேண்டும்; உடல் மனத்தின் சிறையாகக் கூடாது; பிறர் நலத்துடன் அது கலக்கவேண்டும். அப்போதே தனி மனிதன் உலக மனிதனாக, உலகோருடன் ஒன்றுபட்டு வாழ முடியும். இருட் படலம் மூடிய ஜட சமுத்திரத்தி லிருந்து எழுந்து, மனிதன் நித்திய ஜோதியில் விளங்கும் தெய்வத்தின்பால் உணரவேண்டும். அன்னை நடத்துகிறாள்; அன்பும், ஆர்வமும், ஒள்ளிய அறிவுங் கொண்டு, அவளைப் பின்பற்றி ஏக வஸ்துவுடன் விஞ்ஞானத்தால் ஒன்றாகவேண்டும். அதுவே ஜீவவுன்னதி; அதுவே நர வாழ்வை தேவ ஜீவனமாக்கும். அதுவே வாழ்வின் கேள்விக்கு விடையளிக்கும்.

# 19. சைத்ய சித்தி

ஜீவனின் முதல்நிலை ஜடம், அணு; அது சுதந்தரமற்றது; அது பிரகிருதிக்குக் கட்டுப்பட்டது; இரண்டாவது நிலை விலங்குத் தன்மை; அதன் வேர் எதிரிலிருப்பதைப் பற்றிக்கொள்ளும் ஆசை; அந்த ஆசையை அது சிறிதளவே நிறைவேற்றும். மூன்றாவது மனோ நிலை; இஃது ஓர் அன்பு மொட்டு; பற்றல், பற்ற உடன்படல், ஈதல், ஏற்றல்—இவை அதன் இயல்பு. நான்காவது மலர்ச்சி பெற்ற நிலை; அஃது ஒள்ளியது; அதில் அன்பு, தியாகமும் போகமுமாக விகசிக்கிறது. தெய்வாத்ம ஐக்கியத்தால் அது தன்னுள் அனைத்தையும், அனைத்துளும் தன்னையும் கொண்டு விளங்குகிறது. இவ்வாறு ஜீவன் ஜடத்தினின்று சித்திற்கு உயர்ந்து செல்லுகிறது.

மாசற்ற தெய்வானந்தமே ஜீவ நோக்கம்; அதை நாடித் தேடி, அதுவாதலே அதன் நிறைவேற்றம். உலகமே அந்த ஆனந்தத்தின் வேஷ ரூபம்; அந்த ஆனந்தத்தை ஜீவன் இழப்பது அகங்காரத்தால். சாவு, துயர், தளர்ச்சி—எல்லாம் ஜீவானந்தத்தை மறைத்து நிற்கும் போலி மறைவுகளே. சத்து, சித்து, ஆனந்தம், விஞ்ஞானம் இவை நான்கும் தெய்வ தத்துவங்கள்; சிருஷ்டி ரகசியங்கள்; உலகெங்கும் ஆனந்தம் நிறைந்துள்ளது; அது கடத்தில் மறைந்தும், உயிரில் தளிர்த்தும், மனத்தில் கிளைத்தும், விஞ்ஞானத்தில் மலர்ச்சி பெற்றும் விளங்கும்.

இந்த மலர்ச்சியைத் தருவது **சைத்யான்மா.** அஃது உடல், உயிர், மனம் இவற்றினின்றும் வேறுபட்டது. அதுவே அன்பு, இன்பம், அழகு, ஒளி, தூய்மை இவற்றைத் தரும். நம்மிடம் இரண்டு மனங்கள் உள்ளன; ஒன்று அகந்தை நிறைந்த புற மனம்; இது நமது உண்மையன்று; மற்றொன்று உள் மனம்; இது சக்தி பெற்றது, விசாலமானது,

ஒளி நிறைந்தது. நம்மிடம் இரண்டு பிராணன்கள் உள்ளன. ஒன்று உடலைப்பற்றி அதன் சுக துக்கங்களையும் பிறப்பிறப்புகளையும் வருத்துவது; இது நமது உண்மை யன்று; மற்றொன்று பிறப்பிறப்பில்லாமல், கட்டில்லாமல், விசாலித்த பிராண சக்தி. ஜடத்திலும் இருவகையுண்டு; ஒன்று எலும்பும் சதையுமான தூலம்; மற்றொன்று பின்னிருந்து அதைத் தாங்கிப் போஷிக்கும் உள்ளுடல். அதே மாதிரி நம்மிடம் இரண்டு இதயத் தன்மைகள் உள்ளன. ஒன்று பாஹ்ய ஹ்ருதயம். அஃது ஆசை, ஆவேசம், கலைத் திறமை, சுகபோக விருப்பம், புகழ் விருப்பம், ஆதிக்கம் இவற்றுடன் கூடியது; இதற்குப் பின் அந்தர் ஹ்ருதயம் உள்ளது. அது சுத்த சைத்யத்தன்மை யுள்ளது; ஜோதி சக்தி, பிரேமை, ஆனந்தம், இனிய தன்மை இவற்றுடன் கூடியது; இதுவே நமது உண்மை; அந்தர் ஹ்ருதய விகாசமே சைத்ய ஜீவனமாகும். இதைக் கொண்டவனே ஆத்மவான்; இதயமற்றவன் அநாத்மவான்.

அகங்கார ஜீவனம் நமது குறுகிய புற வடிவே யாகும். சைத்ய ஜீவனமே நமது விசால சொரூபமாகும். அது விசுவ ஜீவனத்துடன் இணைந்திருக்கும். சைத்ய மனம் விசுவ மனத்துடனும், சைத்யப் பிராணன் விசுவப் பிராணனுடனும், சைத்ய தேகம் விசுவப் பிரகிருதியுடனும் இணைந்திருக்கும். சைத்யான்மா விசுவானந்தத்தில் ஐக்கியமானது. அதனின்று நம்மைப் பிரிப்பது பண்பற்ற புறமனவுயிர் உடல்களேயாம். அகங்காரத் தடிச்சுவர்களே பிரிவினைக்குக் காரணமாகும். அவற்றாலேயே நாம் அனுபவிக்கவேண்டிய அகில புவனானந்தம் குன்றிக் குறுகிப் போகிறது. தனி மனிதன் சத்யாத்ம தரிசனம் பெறாததே உலகின் பெரிய பிணியாகும். அதனாலேயே அவன் சர்வாத்ம ஐக்கியத்தை

உணராமல் பிரிவினையால் கேடு செய்து இடர்ப் படுகிறான். தனது சிறு மதியைக்கொண்டு சுக துக்கங்களைத் தேடுகிறான்; அவன் விருப்பத்திற்கு எதிரிடையாகவே எல்லாம் முடிகின்றன.

மனிதன் மட அகந்தையால் உலகை அணுகு கிறான்; உதை வாங்குகிறான்; கோபதாபங்கள், அச்சம், அவநம்பிக்கை, இடர், துயர்க்குலங்கள் அவனை வந்து மோதுகின்றன. விருப்பும் வெறுப்பும், ஆசையும் ஏமாற்றமும் அவனை முற்றுகை போடு கின்றன. அதனால் அமைதியும், சமதையும் கெட்டு, இன்பம், துன்பம், உதாசீனம் ஆகிய மூன்று நிலையில் மனிதன் ஊசலாடுகிறான். இன்பம் துன்பமாகலாம், துன்பம் இன்பமாகலாம்; இரண்டையும் பெருக்க லாம், சுருக்கலாம்; இன்ப துன்பம் ஒன்றே; உணர்ச்சியும் ஆவேசமும் அவற்றைப் பெருக்கவோ சுருக்கவோ செய்கின்றன. அசட்டை, அவமதிப்பு, வாங்கிக் கொள்ளும் திறமையின்மை — இவற்றால் உதாசீனம் வருகிறது.

இதய விசாலமே இதற்கு மருந்து; மனிதன் சைத்யான்ம வுணர்வில் வாழ வேண்டும். சைத்யான்மா ரசத்தைச் சுவைக்கும்; அதுவே கீழுணர்வினின்று மனிதனைத் திவ்ய சேதனத்திற்கு உயர்த்தும். அவசேதனத்தில் மூழ்கி, அங்கிருக்கும் சரக்குகளை வெளிப்படுத்தி, ஒளிக்குத் தூக்கிப் பிடிக்க வேண்டும். அதனின்று திவ்ய சேதனத்திற்கு உயர வேண்டும். அது விசுவாத்மாவுடன் ஒன்றுபட்டது, பேதபுத்தியற்றது. அதுவே வஸ்துக்களின் உண்மை யையும் இன்பத்தையும் அறியும்; அதுவே இருவினை யொப்புள்ளது. அஃது அனைத்திலும் ஆனந்தத்தை ரசிக்கும், கிரகிக்கும். அஃது இயற்கையின் உள்ளத் தில் ஒளிமயமாக விளங்கும். அதுவே நமது முன் னேற்றத்தைத் தீவிரப்படுத்தும். நாம் கேவலம் புற

உடலுயிர் மனத்தின் அறியாமையிலேயே வாழ்ந்தால், இருவினைப் பாசத்திலேயே சுழன்ருல், முன்னேற வழியில்லே. அப்போது நாம் ஜடமனிதர் அல்லது விலங்கு மனிதராகவே யிருப்போம்.

ஊக்கம் தூக்கம், இன்பம் துன்பம், பிறப்பு இறப்பு—இவை ஒன்றையொன்று தொடரும்; இரண்டிலும் உதாசீனமாயிருப்பதே அமைதிக்கு வழி என்று பழைய வேதாந்தம் சொல்லும். இதுகூட வழியன்று. இன்ப துன்பங்களே அகம்பாவ வுணர்ச்சிகள். அகம்பாவத்தைத் தவிர்த்து, சொரூப ஞானத்தால் உலகைப் பார்த்தால் தானன்றி வேறில்லே; தானே உலகம், உயிர்க்குலம் என்றறிந்தவனுக்கு அச்சமும் மயக்கமும் துன்பமும் இல்லே. இயற்கை யழகில் சொக்கிய உள்ளம், பொருள்களிலெல்லாம் இன்பம் காண்கிறது. சாதாரண மனிதன் அறிய முடியாத இன்பத்தைக் கலேவாணன் உலகில் அறிகிருன். ஒரு கவியும், ஓவியனும் உலகப் பொருள்களில் ரசத்தை உவக்கின்றனர். இவர்களேவிட ஓர் அருட்புலவன் எங்கும் கடவுளேக் காண்கிருன்; அனேத்துயிர்களிலும் அன்பைப் பரப்புகிருன். அறிஞன், கலேஞன், அருட்புலவன், சொரூப சித்தன் ஆகியோர் தத்தம் பக்குவதிற்கேற்றபடி உலகில் இன்பத்தைக் காண்பர். அவர்கள் அறிவு, அழகு, இன்பம், தெய்வத்தன்மை—இவற்றை நாடுவர். தான் தனது தனக்கே என்ற அகம்பாவந்தான் நமது சஹஜானந்தத்தில் மண்ணேப் போடுகிறது. அகங்கார மடத்தனம் தெய்வ வொளியைக் கூசி ஒதுங்கித் தனது என்ற அகப் பொந்திலேயே குறுகிப் போகிறது. அஃது ஒன்றைச் சுயநலமின்றிச் செய்வதில்லே. இந்தக் குறுகிய வாழ்வினின்று நாம் விடுபட வேண்டும்.

விடுதலேயின் இரகசியம் சைத்யான்மாவில்

உள்ளது. சைத்யான்மா மனங் கடந்தது; அஃது உள்ளத்தில் ஒளிரும் தெய்வச் சுடர். அஃது அணையாத் தணல்; இரகசியமான ஜீவ சாக்ஷி, எஜமான்; நியாமகன். அதையே சொக்ராத்தன் 'தேமன்' என்றான். அதையே உபநிஷத்து "அங்குஷ்டமாத்ரம் புருஷன்" என்கிறது. அதற்குப் பிறப்பிறப்பில்லை; அழிவில்லை; நிறைகுறையில்லை. அதுவே பின்னிருந்து மனமுயிருடலை நடத்துகிறது. அதுவே படிப்படியாக ஆன்ம பரிணாமத்தை நடத்துகிறது. அஞ்ஞான மனிதனை சுஞ்ஞான ஜோதிக்கு நடத்துகிறது. அதுவே உண்மை, நேர்மை, அணி, அழகு, அன்பு முதலிய தெய்வத் தன்மைகளை நம்முள் தூண்டு கிறது. இந்தச் சைத்யான்மாவே தீர்க்கதரிசியாகவும் ரிஷியாகவும் முனிவராகவும் நிலவுகிறது. மனப் பக்குவம் வருமட்டும் அஃது உள்மறைந்து தணலு கிறது; பக்குவ நிலையில் அஃது எழுந்து விளங்கும். அப்போதே தெய்வப் புலமை உண்டாகும். அப் போதே திவ்ய சத்யம், ஞானம், பிரேமை, ஆனந்தம், திவ்ய ஸௌந்தர்யம், ஆன்ம நேயம், விசாலமான கருணை, சர்வாத்ம ஐக்கியம், அகண்டேக ரசம் —இவற்றை நோக்கி ஜீவன் உயரும். சைத்யசக்தி விளக்கமாகாவிட்டால் வாழ்க்கை சுகப்படாது. கூர்மதி, வீரியக் கிளர்ச்சி, மனவுறுதி, தேக பலம், செல்வம், செல்வாக்குகள் இருந்தாலும் பயனில்லை; உலகையே வளைத்து ஆண்டாலும் சுகமில்லை, சாந்தமில்லை. துயரம் பிடுங்கும். எல்லாம் பாசான்மாவின் போலி மினுக்குகளாகும். பாசான்மா சைத்யான்மாவைப் பணிய வேண்டும்; சுத்தான்மா முன்வர வேண்டும். அப்போதே நமது இயற்கை மாறும்; கீழ்த்தனம் போகும்; அசுத்த ஜீவனம் ஒழியும்; சுத்த ஜீவனம் ஒளிரும். இந்தச் சைத்ய ரூபாந்தரம் முதன்மையானது.

ஆனல், இதுவே போதாது; இதுவே திவ்ய ஜீவனத்தைப் பூரணமாகத் தராது; இது நம்முள் மறைந்த தெய்வத் தன்மைகளுக்கு வழி திறக்கும், ஒளி காட்டும்; திவ்ய சேதனத்துடன் தொடர்பூட்டும்; ஆனல், சைத்ய சித்தியுடன் நின்றவர் வாழ்க்கை உன்னத மானிட வாழ்க்கையாவதுடன் சரியாய்ப் போகும்; அல்லது உலகினின்றும் வேறுபட்டு ஒன்றில் லயித்துப் போகும். சைத்யான்மா சுத்தான் மாவிலிருந்து பிரகிருதியில் ஆவிர்ப்பவிக்கிறது. அது திரும்பவும் ஆளே உள்ளே லயப்படுத்தலாம்; அல்லது சைத்யான்மா தனது பரமாத்மக் காதலனுடன் சாயுஜ்யமெய்தி, அப்படியே இருந்து போகலாம். இவை யெல்லாம் அற்புதமான ஆத்மானுபவங்களே. ஆயினும், இவையே ஆத்ம சித்தியின் உச்சமன்று.

இதெல்லாம் மனத்தின் சித்தி; மனம் தன்னைத் தாண்டி ஆத்மஜோதியில் கலப்பதன் பயன். இந்த லயஸ்திதியிலும் மனத்தின் தன்மை போவதில்லே. அஃது உரு அரு, நிர்குணம் சகுணம், காதலன் காதலி, நாயகன் நாயகி என்று வெவ்வேறு விதமாகப் பரமாத்மனைப் பாவிக்கும். விஞ்ஞான நிலேயில் பெற்ற ஆத்மைக்கியமே இவ்வித வேறுபாடுகளில்லாது அகண்டேக ரசத்தைக் காணவல்லது. அதிலேதான் அபேத சைதன்யப் பிரகாசம் புலனகும். சைத்ய ரூபாந்தரம் அடைந்த பிறகு, விஞ்ஞான ரூபாந்தரம் பெற்ருலே ஜீவ பரிபூரணம் சித்தியாகும். அப்போதே ஜீவ பரபேதமும் நீங்கும்; சித்தும் ஜடமும் தெய்வத் தன்மை பெறும். இந்தச் சித்திக்குத் தடையாயிருப்பது அகம்பாவம்; அஃது ஒரு பாறைபோன்று உள்ளத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது. அதைத் தகர்த்தெறியவேண்டும். தான், தனக்கு என்பதை ஒழித்து, அகிலாத்ம வுணர்வில், அவ்யக்தி சேதனத்தில் வாழவேண்டும்.

கேவலம் மனோலயசித்தியில் நாம் கருதும் பரிபூரணம் வராது; சித்தியெல்லாம் புறத்தில் இருக்கும்; உள்ளே குறைகளும் வக்கிரங்களும் இருக்கும். ஜடம்போல், பாலர்போல், உன்மத்தர் போல், பைசாசம்போல் ஞானிகள் இருப்பார்கள் என்பதெல்லாம் மேற்படி சித்தியைச் சேர்ந்தது. ஆத்மலயம் இருக்கலாம்; ஆனால் மனம், உயிர், உடலில் வக்கிரங்களும் குறைகளும் இருக்கும். அஃது அஞ்ஞானம் சூழ்ந்த ஞானமாகும்; சொத்தை மந்திரிகளைக் கொண்ட அரசன்போலாகும்.

சைத்ய ஜீவனை விஞ்ஞான ஜோதிக்கு உயர்த்த வேண்டும். அப்போதே அகண்ட சமத்துவமும், தெய்வானந்தமும் கைகூடும்.

---

# 20. ஜடம்

ஜீவன் தீமையன்று, துக்கமன்று என்பதை அறிந்தோம். அதன் அஸ்திவாரம் ஜடவுடல்; அதைப்பற்றி இங்கே ஆராய்வோம். ஜடமே உயிர், மனம் இரண்டிற்கும் ஆதாரம்; மனமே மனிதன்; அவனது விஞ்ஞான விரிவு மனத்தினின்று கிளைக்கிறது என்றாலும், அவனது ஜீவனுக்கு நிலைக்களன் உடல். ஜட விதையிலிருந்தே வாழ்வு தளிர்த்துக் கிளைத்து மலர்கிறது. மனிதனுக்கு அரிய உடல் கிடைத்திருக்கிறது. அதனாலேதான் அவன் விலங்குகளை விட அதிக முன்னேற்ற மடைந்திருக்கிறான். மனிதன் ஜடத்தை அலட்சியம் செய்யக்கூடாது. அதைச் சரியானபடி வளர்த்துத் திவ்யமாக்க வேண்டும்.

மனவுறுதிக்கு உடலுறுதி அவசியமாகும். பூரண ரூபாந்தரத்திற்கு உடலின் மாறுதலும் அவசியமாகும்; இன்றேல் நமது முயற்சி தனது அடிப்படையான ஒன்றை இழக்கும். ஸ்தூல பீடத்தின் மேலேதான் ஜீவ விக்கிரகத்தை எழுப்ப வேண்டும். திவ்ய சரீரம் திவ்ய ஜீவனுக்கு அடிப்படையாகும்.

ஆனால், உடம்பு மனிதனுக்குத் தொல்லை தருகிறது; அதன் மர்மம் அவனுக்குத் தெரியவில்லை; அதனால் பரமார்த்த சாதகன் இந்த ஊன் கூட்டை உதறித்தள்ளி ஒரேயடியாக முத்திக்குத் தாவ முயல்கிறான். அதற்காகக் காயக்கிலேசம் பண்ணுகிறான்; “காயம் பொய், காற்றடைத்த பை, புழுக்கூடு, மலப்பாண்டம்” என்று அதை இழிவு செய்கிறான். ‘அவருக்கென்ன உடலை வெறுத்த மகான்!’ என்று உலகோரும் புகழ்கிறார்கள். இந்த

வறட்டு வெறுப்பு காசுபெருது. இதனுல் உடலுக்கும் நன்மையில்லை, உயிருக்கும் நன்மையில்லை.

உலக வெறுப்பும், உடல் வெறுப்பும் திவ்ய ஜீவனத்தைத் தடுக்கின்றன. வேதரிஷிகள் உடலை வெறுக்கவில்லை; வருத்தவில்லை. "ஜடமும் பிரம்மம், துர்ப்பலனுக்கு ஆத்ம சித்தி வராது" என்று அவர்கள் அழுத்தமாகச் சொன்னுர்கள். வானத் தந்தை, பூமாதா, ஆத்ம சேதனம், ஸ்தூல சேதனம் அனைத்திற்கும் அவர்கள் மதிப்பு வைத்தார்கள். ஜடத்திற்கும் சித்திக்கும் சண்டை கிளப்பியது பின் வந்தவர்களே; ஜடத்தின் முடிச்சை அவிழ்க்க முடியாமல், அவர்கள் அப்படி மித்ரபேதம் செய்தார்கள். உடலின் இரகசியம் தெரியவில்லை; உயிருக்கும் அதற்கும் வாட்டம், சண்டை; உடலைக் காக்கும் சக்தியை உயிர் பெறும் வழி தெரியவில்லை; இடையில் பேத மனம் புகுந்தது. அது சண்டையை அதிகப்படுத்தியது; மனம் உடல் உயிர் இரண்டையும் புறக்கணித்தது; அது மேலே செல்லச் செல்ல ஜடத்தை முனிந்தது. மனத்தை வெல்லப் புகுந்தவர்கள் உடலையும் உயிரையும் வெறுக்கப் புகுந்தனர். இன்னும் மேலே சென்றவர், ஆத்மாவேசத்தால் மனத்தைக் கொல்ல முயன்றனர். மனமே உடல், உயிர், உலகம். அதைக் கொன்று சாம்பலாக்கினுல் பிறகு அகமும், ஜகமும் கிளம்பா என்றனர். இந்த மனப்பேயை அழித்து உலகை மறந்து, நிர்வாணம் அல்லது நிர்விகல்ப சமாதியில் தன்னை யிழப்பதே தொல்லையில்லாத வழி என்று முடிவு கட்டினர். இப்படிப்பட்டவர்கள் வெற்றி பெற்றவர்கள் அல்லர். இவர்கள் உடலுக்கும் உயிருக்கும், உலகுக்கும் தோற்றவர்கள். இவற்றை வெல்லும் திறமை அவர்களிடம் இல்லை.

உடலுக்கு உயிர் தோற்கவில்லை; உயிருக்கு

மனம் தோற்கவில்லை ; ஜீவன் பக்குவப்படுவதற்காகப் போக்குவரவு செய்கிறது. சாவின் பொருளை முன்பே யறிந்தோம். உயிர் உடலை வென்று, மனம் உயிரை வென்று, மூன்றும் தெய்வ வொளி பெற்று விளங்கவேண்டும். ஆத்ம சித்தி கீழேயுள்ள இந்த மூன்று தத்துவங்களையும் மாசறப் புதுக்கியமைக்க வேண்டும். அதுவே நமது முயற்சி. அதற்கு உடலறிவு அவசியம்.

ஜடத்தைப் பற்றித் தற்போது வழங்கும் அபிப்பிராயம் அரைகுறையானது ; ஸயன்ஸ் ஜடத்தைச் சத்தி வடிவம் என்கிறது; அஃது ஓர் அகில தத்துவமே; ஆனால், ஜடத்திற்குமேல் உள்ள சின்மயத்தை ஸயன்ஸ் அறியவில்லை; அஃது அதன் குறை. வேதாந்தம் இன்னும் ஆழ்ந்து சென்று, சித்வஸ்துவான ஆத்மாவே உண்மை, ஜடம் அதன் தோற்றம் என்கிறது. அப்போதும் சந்தேகம் தெளிய வில்லை; சக்தி ஓர் ஒட்டமாகப் பரவாமல் ஏன் நாமரூப பேதங்களாக, ஜட வடிவுகளாக விளங்க வேண்டும்? சித்து அதன் பரமானந்த உபசாந்த நிலையை விட்டு ஏன் கீழே வரவேண்டும்? நாம ரூப பேதங்களைப் பூணவேண்டும்? நாமரூபத் தோற்ற மெல்லாம் மனத்தின் வேலை என்பான் வேதாந்தி. மனம் நேராக உண்டாக்குவதில்லை ; அஃது இந்திரி யங்கள் மூலமே செயல்புரிகிறது ; ஆதலால் ஜட வுருக்கள் இந்திரிய வியாபாரங்கள் என்னல்வேண்டும். ஜகமெல்லாம் மனத்தில், மனத்தால் உண்டானது ; மனோ நாசமானால் ஜகத்தேயில்லை என்பர் சிலர். ஆனால் மனத்திற்கு முன்பே சகம் இருந்தது ; மானதனான மனிதன் வருமுன்பே உலகம் இருந்தது; சமாதியில் மனோ நாசம் ஆன பிறகும் உலகம் இருக்கிறது. மனித ஜாதியே அருகிப்போனாலும் உலகம் இருக்கும். மனமே விஞ்ஞானத்தின் விழுது

தான். மனம் ஒன்றைப் பலவாகக் காட்டும், வகுக்கும்; ஆனால் அதன் விசை மேலேயிருக்கிறது. மனம் உயிர் உடல் ஆட்டமெல்லாம் விஞ்ஞான சேதனத்தால் ஆவன. எல்லாச் சக்தியும் ஒரு சிற்சக்தி விளக்கமே; ஜடத்திலுள்ள சக்தியும் அதுவே. அதுவும் ஒரு சித் ரூபமே. சித் சக்தியே விஞ்ஞானத்தி லிருந்து இறங்கி மனதாக விளங்குகிறது; அதுவே இன்னும் இறங்கிப் பிராண சக்தியாக விளங்குகிறது; அதுவே அணு சக்தியாகி ஜடத்தில் வியாபித் திருக்கிறது. ஜடத்தினுள் சித்து உறங்குகிறது. ஜடமும் சச்சிதானந்தத்தின் ஸ்தூல விளக்கமேயாகும். ஜடத்திற்கும் சித்திற்கும் சம்பந்தமேயில்லாத வேற்று மையைக் கற்பித்தது மனத்தின் நீண்ட பழக்கமேயாம். ஜடவுலகம் பன்மையில் ஒருமை; விவித ஐக்கியம். அதன் நானுபாவம், ஏகரஸத்தின் அநேகத்வமேயாகும். சித்து ஜடம் இரண்டும் தொடர்பான ஒன்றே. சித்து ஜடத்தின் ஆத்மா; ஜடம் சித்தின் உடல், உரு; பொருள் ஒன்றுதான்; அது பெயர் வடிவ பேதமாகக் காணும்போது உடல், சடம் என்கிறோம். அதை ஐம்புலனால் உணர்கிறோம். அதே பொருள் உடலில் உயிர்ப்பாக இயங்கும்போது உயிர், பிராண சக்தி என்கிறோம்; அதே பொருள் இன்னும் நுட்பமாகி நினைவாகப் பரிணமிக்கையில் மனம் என்கிறோம்; அஃது இன்னும் அதி சூக்ஷ்மமான சமஷ்டி ஞானப்பொருளாக விரிந்து விளங்கும் நிலையில் விஞ்ஞானம் என்கிறோம். அதுவே இனிப் பிரிக்கமுடியாமல் ஏகரஸமாகி காலதேச வர்த்தமானங்களைக் கடந்து எங்கும் நிறைந்து விளங்கும்போது சித்து, ஆன்மா என்கிறோம். அதற்குமேல் சடம் சித்து என்ற வேறுபாடே யில்லாமல், எல்லாம் தன்னுட்கொண்டு தானே தானான நிலையில் பரம்பொருள் அல்லது சத்வஸ்து

என்கிறேம். இவ்வாறு சத்திலிருந்து சடத்திற்கும், சடத்திலிருந்து சத்திற்குமாக இறங்கி ஏறி ஒரே சச்சிதானந்த பிரம்மம் விளையாடுகிறது. பிரம்மம் எங்கும் நிறைந்திருப்பதுமட்டு மன்று; அதுவே எல்லாமா யிருக்கிறது; உலகின் சடமும் சித்தும் அதுவே. உண்மை இதுதான்; ஆழ்ந்து பார்த்தால் தெரியும்; மனித மனத்திற்கு இந்த ஐக்கிய பாவனை புலப்படுவதில்லை. அது சித்தையும் சடத்தையும் உண்டு இல்லை என்று பிரித்து விடுகிறது; வெட்டொன்று துண்டு இரண்டாக்குகிறது; ஜீவனை ஒப்பி ஜகத்தை மறுக்கிறது; ஜட ஜீவனத்திற்கும் அத்யாத்ம ஜீவனத்திற்கும் இடையே தடைச் சுவர் எழுப்புகிறது. உலக வாழ்வை ஒரேயடியாக விட்டொழிப்பதே மோட்சத்திற்குச் சுருக்குவழி யெனப் பாய்கிறது. ஆனால் சுருக்கு வழியில் விதாயகம் ஏற்படுவதில்லை; சந்தேகம் தீருவதில்லை; உண்மை விளங்குவதில்லை. அதன் அவசரத் தீர்மானம் அரைகுறையானது.

சங்கடமெல்லாம் சடத்திலிருக்கிறது. அதன் பிரச்சினை மிகக் கடினமாயிருக்கிறது. அதனுலேதான் பிராணனுக்குப் பிணி மூப்பு சாக்காடெல்லாம் வருகின்றன; அதனுலேதான் அகண்டப் பிராணன் ஒரு வடிவில் குறுகியிருக்க நேரிடுகிறது. அதில் கட்டுப்பட்டதனுலேதான் மனம் சிறகிழந்த பறவை போலச் சுதந்தரமில்லாமல், விசாலமிழந்து காற்கட்டுடன் இருக்கிறது. அதனுலேதான் முமுக்ஷு இந்த மண்ணுடலை வெறுக்கிறான்; ஒறுக்கிறான்; ஒழிக்க முயலுகிறான்; அஞ்ஞான ஜடத்தைப் பொய்யென ஒதுக்கி அவன் சித்தில் நிலைத்திருக்கப் பார்க்கிறான். உடலை விடலே விடுதலையாக அவனுக்குத் தோன்றுகிறது.

நாம் உடல் அநித்யம் என்று எவ்வளவு

பேசினுலும் அதற்குரிய சுகதுக்கங்கள் நம்மை விடுவதில்லே. பௌதிக உலகம் நம்மைச் சும்மா விடுவதில்லே. அஞ்ஞானம் அசுரத்தனமாக உலகைப் பற்றி ஆட்டுகிறது. அதன் கண்ணற்ற கொடுமையும், இரக்கமற்ற வன்மையும், கல்லினும் கடுமையும் சொல்லத்தரமல்ல. ஜடமடமையுடன் குஸ்திபோட்டு மனிதனுல் முடியவில்லே ; அதை இணக்கும் வழி அவனுக்குத் தெரியவில்லே. அது சுயவுணர்வற்ற யந்திரம்போல் ஒரு விதிபற்றி ஒரு போக்கில் கண் மூடிச் செல்லுகிறது ; அதுவும் எல்லேயற்ற சலனமும், சக்தியும், செயலும் கொண்டது. ஜட சக்திகளேக் கண்டு நாம் வியக்கிரேம். ஆனுல், அது கண்மூடித் தனமானது ; பகுத்தறிவற்றது, சுய உணர்வற்றது. ஆத்மா சைதன்ய வஸ்து, உணர்வு மயம். அது சுதந்தரமானது, தனக்குத் தான் எஜமானுயிருப்பது, தனது செயல்களே ஆளவல்லது, வினேக்கட்டற்றது. அது விதியை விதிப்பது.

பிராண சக்தி பௌதிக சக்தியைக் கைக்கொண்டு, அதற்கு வடிவீந்து, உள் மனம் விழித்தெழுந்து, யார், ஏன், எப்படி என்று தன்னேயும் உலகையும் ஆராய்ந்து பகுத்தறியும்போது, பௌதிக இயற்கை சிறிது வசப்படுகிறது. பிராணன் தன்னே விசாலமாக்கவும் நீண்டிருக்கவும் முயல்கிறது. ஆனுல் அதன் அளவுக்கு மிஞ்சி அமரத்தன்மையை நாடும்போது, சக்தியின் இரும்புத் தடை அதை எதிர்த்து ஆயுளேக் குறுக்கிச் சாவின் வாயில் தள்ளுகிறது. மனம் அறிவும் ஒளியும் அன்பும் இன்பமும் உண்மையும் ஆக முயலுகிறது. ஆனுல், அதன் ஒளிக்குப்பின் இருள் கரந்திருக்கிறது. அது பெறும் உண்மை முழு வுண்மையன்று ; அதன் அன்பு, இன்பம் இவற்றுடன் பகையும், துன்பமும், சினமும் நோவும், உதாசீனமும், அதிருப்தியும்

கலந்திருக்கின்றன. மனமும் உயிரும் ஜடவிருளுடன் பொருது வெல்ல முடியவில்லை. அதனாலேதான் உலகில் அஞ்ஞான மிருகபலம் தாண்டவமாடுகிறது. இதனால் ஆத்ம சக்தி விளக்கமாகாதிருக்கிறது. ஜட சக்தியின் எதிர்ப்பு அவ்வளவு பலமாயிருக்கிறது. பிரிவினையும், மந்தமும், இணங்கா வன்மையும் அதனியல்பாயிருக்கின்றன. மனிதனின் மன முயற்சிகள் ஆக்கமும் அழிவும், ஏற்றமும் இறக்கமும், எழுச்சியும் வீழ்ச்சியுமாக முடிகின்றன. ஜடத்தின் மடமை, மந்தம், பிரிவினைகளில் மனமுயற்சி மோதி உடைந்துபோகிறது. உயிரும் மனமும் அஞ்ஞான பிண்டமாயிருந்தால் ஜட மந்தத்தில் கட்டுப்பட்டிருக்கும். ஆனால், உள்ளிருந்து ஓர் அதிருப்தி மனத்தை உந்தித் தள்ளுகிறது.

மனத்தினால் அடையும் சிறு வெற்றிகள் அவனை மகிழ்விப்பதில்லை. அச்சிறு வெற்றிகளும் அசுரத்தனமான ஜட சக்திகளில் மோதித் தகர்கின்றன. மனிதன் தனது தனி மன-வுயிர்-உடல்-உணர்விலேயே அடைபட்டிருக்க முடியாது. உலக பலங்கள் அவனைச் சும்மா இருக்கவிடா; அவை வந்து வேகமாக முட்டிப் பொருதும்போது, மனிதன் ஒன்று எதிர்த்துப் போர் புரியவேண்டும், அல்லது தோற்று வீழவேண்டும். அவனைப் போலத் தனித்தனி உருவங்கள் எத்தனையோ கோடி உள்ளன. அவற்றிடையே எப்போதும் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. 'மனிதா, நீ குறுகிய மனத்தில் கட்டுப்பட்டிருக்காதே; உன் சொரூபம் அகண்ட சேதனம்; நித்தியம், நிராமயம், நிரஞ்சனம், சுதந்தரம், எல்லையற்றது. அதை யடை!' என்று இயற்கை சூடு கொடுத்துத் தள்ளுவதே இப் போராட்டமாகும். தனியுணர்வில் அடைபட்ட மனிதனுக்கு இப் போராட்டத்தின் கடுமையும் துயரும் அதிகமாகும்.

உலக சக்திகளை அவனது தனிமை எதிர்க்கமுடியாது; அவற்றுடன் பொருதும்போதும் சுக துக்க பந்த தொந்தத் துயர்கள் புயலாகக் கிளம்பி, அவனை அல்லற்படுத்தும். ஒளிக்குப் பின் இருள், களிப்புக்குப் பின் கவலை; ஊக்கத்திற்குப் பின் தளர்வு தொடர்ந்து மனிதன் அமைதியைச் சின்னா பின்னமாக்குகின்றன. மனிதன் அயர்ந்துபோகிறான்; 'சை! இந்த உலகுடன் முட்டி யலைவது முட்டாள் தனம்; இதை விட்டொழிப்பதே விடுதலை' என்கிறான்.

உலகில் இன்பம் வருமென்பது அவனுக்கு முயற்கொம்பாகத் தோன்றுகிறது. உலகாடலே வெறும் மோகக் கனவாகக் காண்கிறது. சித்தும் சடமும், உலகும், ஆத்மாவும், பிரமேயமும், அப்ரமேயமும் எதிரிடையானவை; இவை சேர்ந்து இன்பம் வராது என்ற முடிவுக்கு வருகிறான் மன மயக்கில் வாழும் மனிதன். சடத்தின் கடினமான முடிச்சை அவிழ்க்க முடியாமல், அதன் கல் நெஞ்சில் அடைபட்ட இரகசியத்தைப் பிளந்தறிய முடியாமல் தோற்றுப்போய், மனிதன் இந்த முடிவுக்கு வருகிறான். அவன் வாழ்வு பரலோக யாத்திரையை நாடுகிறது; அங்கேதான் அவன் இன்பம் இருப்பதாக நினைக்கிறான். அவன் உலகைப் புலனால் கண்டு, மனத்தால் உணர்ந்து இந்தப்படி நினைக்கிறான். மனத்திற்கு மேலே விஞ்ஞானப்படி யடைந்தால் அவன் உலகின் புதிரை விடுவிக்கமுடியும். அப்போது அவன் உணர்வும், உள்ளமும், காட்சியும், அனுபவமும் மாறும்; ஜடத்தினின்று சித்திற்குயரும் சேதனம் விளங்கும். வாழ்க்கை மனத்திலேயே கட்டுப்பட்டதன்று. அது மேன்மேலும் மேலேறி அகண்ட சச்சிதானந்தத்தை எட்டும் ஏற்றம் என்பதை மனிதன் விஞ்ஞான உணர்வால் அறிகிறான். அந்த ஏணி யேற்றத்தை இனியறிவாம்.

---

# 21. படியேற்றம்

ஜடப்பொருள் திட்டமானது; நிலைத்த வடிவுள்ளது; எளிதில் புலனாவது; காலத்தின் மோதுதலைச் சிறிது தாங்கி நிற்பது. அதை நாம் தொடலாம், பிரித்து வகுத்துச் சோதனைசெய்து பார்க்கலாம். ஆதலால், அதுவே பலருக்கு மெய்யாகத் தோன்றுகிறது. வேதம் ஸ்தூலத்தையே பிராணாதாரமாகச் சொல்லுகிறது; பூமியை, இயற்கையை ஸ்தூலாதாரமாக வர்ணிக்கிறது. ஸ்தூலாதாரத்திலேதான் பிராணன் தனது வடிவை ஆக்குகிறது; மனம் தன் பாவனைகளைச் செய்கிறது. அதுவே அனைத்திற்கும் அடிப்படை, பீடம், ஆதர்ரம், பிரதிஷ்டை. அதுவே திட்பமாக நிற்பது. மற்றப் பூதங்களும், புலனுணர்வுகளும் போகப்போக நுட்பமாகின்றன. அவற்றை ஒன்று சேர்த்தல் எளிது. பூமியைவிடத் தண்ணீர் நுட்பமானது; அதற்கு நிலைத்த வடிவில்லை; எளிதில் உருமாறும்! ஸ்தூலத்தைப்போல அதைக் கட்டிப்பிடிக்க முடியாது. அதைவிடத் தீ அதி நுட்பமானது; அதைப் பார்க்கலாம். அதைவிடக் காற்று மிக நுட்பம்; அதை மேலே படும்போது உணரலாம். அதைவிட ஆகாசம் அதிசூக்ஷ்மமானது. ஆகாச சக்திதான் வானொலி, மின்சாரம் முதலிய அற்புதங்களாக விளங்குகிறது. அதை ஒரு யந்திரத்தில் இறங்கி வேலை செய்யும்போதே அறியலாம். அதைவிட சூக்ஷ்மாகாசம் உள்ளது. அதைவிட எவ்வளவோ சூக்ஷ்மமானது மனம்; அதை விட புத்தி, அதைவிட உள்ளம், அதைவிட ஜீவாத்மா அதிசூக்ஷ்மமானது. சூக்ஷ்மாகாசம் உச்சமானது. பூமி ஸ்தூல பூதம்; அதுவே எளிதாகக் கையாள முடிந்தது; அதுவே நாம் கண்ணுக்கு மெய்யாகக் காண்பது; அதுவே பரிணாமத்தின் கீழ்ப்படி; அதிலிருந்தே பரிணாமம்

தொடங்குகிறது. நீர், கனல், காற்று, ஆகாசம் இவற்றை எப்படி வேண்டுமானாலும் சேர்க்கலாம். நாம் எந்தப் பாத்திரத்தில் வைக்கிறோமோ அதன் வடிவாகவே தண்ணீர் நிற்கிறது; பிறகு வேறு பாத்திரத்தில் விட்டு வடிவை மாற்றலாம்; அல்லது அதைக் கடலில் கொட்டிக் கடலாக்கி விடலாம். காற்று அகண்டமாக விரிந்து பரவும். அந்தமாதிரி ஸ்தூல வடிவை எளிதில் உரு மாற்றவோ ஒன்றோடொன்று கூட்டவோ முடிவதில்லை. ஜடப் பொருளுக்குத் தனித்த வடிவும் பிரிவினையுமே இயல்பு. அதனாலேதான் ஜட வுணர்வுடன் வாழும் உலகிலும் பெயர் வடிவுகளில் கட்டுப்பட்ட இத்தனைப் பிரிவினைகள் காண்கின்றன. அதனாலே தான் ஐக்கியத்திற்கு இங்கே அவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது.

ஜடத்திலும் சித்து உறங்குகிறது; அஃது எளிதில் மாறாது, இறுகிக் குறுகிப் போயிருக்கிறது. ஆத்மாவில் இதற்கு மாறாகச் சித்துணர்வு விரிந்து பரந்து எல்லை யற்ற சுதந்தர சக்தியாக விளங்குகிறது. அதுவே பொருளின் சஹஜ நிலை. மனத்திற்கும் புத்திக்குங் கூட அதன் சூக்ஷ்மத் தன்மை எட்டாதிருக்கிறது. இந்த ஜட இறுக்கத்திற்கும், அந்த உயர்ந்த ஆத்ம விரிவிற்கும் இடையே படிப் படியாகச் சேதனம் நுட்பமடைந்து மேலேறுகிறது.

தேக புத்தியிலேயே வாழும் ஒருவனுக்கும், அகமாத்ம சேதனத்தில் வாழும் ஒருவனுக்கும் இத்தகைய நுட்ப வேறுபாடு காண்கிறோம். சாவு, நோய், பிரிவு, எதிர்ச்சி, தனிப்பு, ஒதுக்கம்—இவை யெல்லாம் தேக வாசனையிலேயே வாழ்பவன் அனுப விப்பவையாம். ஆனால், உயர்ந்த படியேறிய சித்த னுக்கு உடலும் உலகுமே ஆனந்த மயமாகின்றன. ஜடத்திலும் அவன் பல சின்மயப் படிகளைக்

காண்கிறான். நாம் காணும் உலகினும் உயர்ந்த பல சூக்ஷ்ம லோகங்கள் இருக்கின்றன. அவை போகப் போக அதி சூக்ஷ்மமாய், மனத்திற்கும் எட்டாமல் பூதாகாசத்திற்கும் அப்பாலாய் விரிந்திருக்கின்றன. பரிபக்குவத்தால் அந்த லோக சக்திகளைக் கீழே கொண்டுவந்து, ஸ்தூலாதாரத்தைப் பண்படுத்தினால், இதே உடலிலும் தேவ ஜீவனம், தேவ சேதனம், திவ்ய ஜோதி — இவற்றை விளக்கலாம். உலகன்னையும் அப்போது தனது தெய்வத்தன்மையை விளக்குவாள்.

பிரபஞ்சத்தில் வெறுமை என்பதில்லை; நாம் அறியமுடியாத சூக்ஷ்ம வஸ்துக்கள் அனந்தம். வஸ்துவின் மிக முரடான பருமை ஜடம்; மிக மிக நுட்பமான நுண்மை ஆத்மா. இந்தப் பருமையிலிருந்து, மனம் கடந்த அந்த நுண்மைக்கு ஒரேயடியாகத் தாவிவிட முடியாது; இரண்டிற்கும் இடையே பல நுட்பப் படிகள் உள்ளன. சடவுலகிற்கும் அப்பால் மேன்மேலும் நுட்பமாகச் செல்லும் அநேக சூக்ஷ்ம வஸ்துக்கள் உள்ளதைப் பௌதிக அறிஞரும் ஆராய்கின்றனர்.

நமது கொள்கைப்படி சேதனப் படியேற்றங்கள் ஏழாகக் காண்கின்றன. அன்னம் (ஜடம்), பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம், சித்து, சத்து—இவை உடல், உயிர், மனம், அறிவு, இன்பம், அருளுணர்வு, உண்மை எனப்படும்.

ஜடவுலகில் எல்லாம் ஜட விதிகளைப்பற்றியிருக்கும். புலன்கள், உயிர், மன நினைப்பு எல்லாம் பிரகிருதியான ஜட சக்தியை ஆதாரமாகக் கொண்டு, அதன் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன. ஸ்தூலக் கருவிகளான ஞான கர்மேந்திரியங்கள் மூலமே பொறி புலன்கள் வேலை செய்கின்றன. பிராணன் வீரிய தேகமான நரம்புகளால்

இயங்குகிறது. மனமும் ஸ்தூலாதாரத்தில் ஊன்றியே மூளையில் நினைக்கிறது, புலன் வழியே சஞ்சரிக்கிறது.

ஆனால், மனமும் உயிரும் இவற்றில் கட்டுப் பட்டவையன்று. ஏனெனில், ஞான கர்மேந்திரியங் களோ நரம்புகளோ, மூளைகளோ வெறும் ஆயுதங் களே; அவை தாமே உண்டாகவில்லை; எதையும் ஆக்கவில்லை; ஒரு பிணத்திற்கு ஐம்பொறி, நரம்பு எல்லாம் உண்டு; எனின் செயலில்லை. இவை செயல் புரிவது உடம்பிலுள்ள சித்துணர்வால். ஆனால், ஞான கர்மேந்திரியங்கள் உணர்ச்சிக்குக் கருவிகள்; நரம்புகள் உயிரின் கருவிகள்; மூளை நினை-மனத்தின் கருவி தான். ஒரு குழலோனுக்குப் புல்லாங்குழல் கருவியா யிருப்பதுபோல், இவை உயிர், மனம் ஆகிய உலக தத்துவங்களுக்குக் கருவிகளா யிருக்கின்றன. இப்படியிருப்பது விசுவ சக்தியின் செயல்; உலக பரிணமத்திற்கு இந்தச் சார்பும் சேர்வும் அவசிய மானவை. ஜடத்திற்கு மேலுள்ள பிராணன் விசுவ சக்தியை ஆதாரமாகக் கொண்டது. அது வீரிய சக்தி, ஆசா சக்தி; அதுவே சடத்திற்குப் பல வடிவு களை அமைக்கிறது. பிராணனில் எழும் உருவங்கள், உடல்கள், வன்மைகள், உயிரியக்கங்கள், புலனியக் கங்கள், நினைப்போட்டங்கள், வளர்ச்சி, நிறைவு— எல்லாம் விசுவப்பிராண சக்திக்கு அடங்கியே இருக்கும்; அதன் சட்ட திட்டம், ஆற்றல், அளவு— இவற்றைச் சார்ந்தே பிராணன் சஞ்சரிக்கும். பிராணனிலுள்ள ஸ்தூலமும் சூக்ஷ்ம மனமும் அதே சக்தியைச் சார்ந்தியங்கும்; பிராணன் உயர்ந்த பக்குவ நிலையில் தெய்வ விளக்கம் பெறும்.

அடுத்த படியேற்றம் மனத்திற்கு வரும். மனம் மனோமய புருஷனைச் சார்ந்திருக்கிறது. அதைத் தாண்டிஅப்பாலுள்ள விஞ்ஞானமே மனிதனுக்கும்

தேவனுக்கும் நடுவேயுள்ள இணைப்பு. அதற்கு மேலுள்ள சச்சிதானந்த சேதனத்தையே பிரம்ம லோகம், கோலோகம், பரமானந்த சுவர்க்கம் என்று மஹர்ஷிகள் உணர்ந்து உரைத்தனர்.

இந்தப் படியேற்றங்கள் மிக நுட்பமானவை. சாதாரண உடலுணர்விலும் புலனுணர்விலும் சிறைப் பட்ட மனிதனுக்கு இவற்றின் இயல்பு புலப்படுவது அரிது. படி உயர உயர அறிவின் சக்தி விசாலிக்கும். சேதன பூமி சூக்ஷ்மமாக ஆக அதற்குச் சக்தியும் அதிகமாகும்; மேற் படியிலிருந்து பார்த்தாலே கீழ்ப் படியின் தத்துவம் உணர்வாகும்.

இந்தப் படியேற்றம் ஒன்றுக்கொன்று தொடர் புடையது; அது தனித் தனியாகத் தமக்கேயாக இருந்தால், எவ்விதமான பரிணாமமும் இராது. அவை ஒன்றுக்கொன்று தொடர்பான இணைப்புடனிருப்பத னாலேதான் தூல சேதனத்திலிருந்து உணர்வு படிப் படியாக ஆத்ம சேதனத்தை அடைய முடிகிறது.

ஜடத்திலும் மற்றெல்லாச் சேதனங்களும் உள் ளடங்கி உறங்குகின்றன. அதிலிருந்துதான் பரிணாம முளைகிளம்பி, உயிரும் மனமுமாக விளக்கம் பெற்றது; அஃது இன்னும் வளர்ந்து விஞ்ஞான விளக்கம் பெறும். இந்த விளக்கம் கீழிருந்து எழுந்தால் மட்டும் போதாது; மேலிருந்தும் இறங்கவேண்டும்; மனித பரிபூரணம் ஏற்றமும் இறக்கமுமானது.

சாதாரண மனிதன் உடலைக்கூடச் சரியாக அறியவில்லை. தோலும் எலும்பும் சதையும் நரம்பும் குடலும் நாடி நாளமும் மட்டும் உடம்பல்ல. இவற்றிற்கும் மேல், நாம் அறியாத பல நுட்பங்கள் ஸ்தூல தேகத்திலேயே இருக்கின்றன. வேதாந்த ஞானிகள் அன்னம், பிராணம், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்ற பஞ்சகோசங்களைச் சொன்னார்கள்; ஆத்மா பஞ்சகோசாதீதப் பொருள் என்றனர்.

பிற்காலம் ஆராயும்போது இந்தப் பஞ்சகோசங்களும் ஸ்தூல, சூக்ஷ்ம காரண சரீரங்களின் போர்வைகளே என்று அறிஞர் அறிந்தனர். அவற்றுளெல்லாம் ஆத்மா வசிக்கிறது; யோகிகள் அக்கோசங்களை நன்ருக உணர்வர். ஹட யோகிகளும், தாந்திர யோகிகளும் இக் கோசங்களை நன்ருக ஆராய்ந்து சாஸ்திரம் எழுதி யிருக்கிருர்கள். அவர்கள் பல சாதனங்களால் ஸ்தூல பிராண கோசங்களை வசப்படுத்தி, பலமும் ஆயுளும், சக்தியும் பெறுகிருர்கள். அவர்கள் மூலாதாரம், சுவாதிஷ்டானம், அனுஹதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு சக்கரங்களை மலர்த்தி, சக்தியை உச்சநிலைக்கேற் றவும் வழி கண்டுபிடித்திருக்கிருர்கள்.

இந்த நுட்ப ஆராய்ச்சிகளால் ஸ்தூல தேகமே நமது இருப்பன்று; அதற்குள்ளும் மேலும் எத்தனையோ நுட்ப வுணர்வுப் படிகள் உள்ளன; மேலே செல்லச் செல்ல நாம் அபார சக்தி பெற்று உடலையும் மாற்றலாம்; பிணி, கவலை, மூப்பு, சாக்கா டற்ற திவ்ய தேஜஸையும் ஜீவனனந்தத்தையும் தேகத் திலும் அனுபவிக்கலாம்; உலகிலேயே நர வாழ்வி லேயே அமரத் தன்மை பெறலாம் என்பது விளங்கும். நமது மனேமய ஜீவனுகிய ஜாடியில் நித்தியப் பரம் பொருள் மேலிருந்து ஆனந்த அமுதம் பொழிகிருன். அதனுல் நாம் அமரானந்தம் பெறுவோம்.

---

# 22. ஏழு தந்தி

சிருஷ்டித் தொழில் ஏகவஸ்துவின் அநேகத்வ மாகும். ஓர் உண்மை, ஓர் அறிவு, ஓர் இன்பமே எல்லையற்ற உலகாய் உயிராய்ப் பரந்து விரிந்து பரிணமித்து விளையாடுகிறது. ஒரு பான்மையான சச்சிதானந்தம் பல பான்மையான உலகாகி, அந்தப் பல பான்மை படிப்படியாக ஒரு பான்மைக்கு உயர்ந்து வளர்வதே சிருஷ்டி லீலையாகும். சிருஷ்டி யுலகங்களை யெல்லாம் ஒருமய வுணர்வில் சேர்த்துப் பிடித்து நிற்பது விஞ்ஞானமே. அதுவே உலகை ஆக்கி, ஆண்டு, நிலை நிறுத்துகிறது. அதுவே ஞானம் அஞ்ஞானம் இரண்டையும் பொருத்தி நிற்கிறது. சத்து சித்து ஆனந்தம்—இம்மூன்றும் உன்னத தத்துவங்கள், தெய்வச் சிகரங்கள்; நான்காவதான விஞ்ஞானம் இணைப்பு; இடைநிலை. அதன் கீழ் இருக்கும் மனமும் உயிரும் உடலும் கீழ்ப் படிகள். மனம் விஞ்ஞானத்தினின்றும் கிளைத்தது; அது ஒன்றைப் பலவாக வகுத்துக்காட்டும் பிரிவுத்திறன். விஞ்ஞான வொளி பெற்றால் அது தனது இயல்பான நிலை சேரும்; பேத புத்தி நீங்கும். பிராணன் மனம் வகுத்த பொருள்களுக்கு வடிவைத் தந்து உலகாடலை நடத்தும் சக்தி. அதுவும் சச்சிதானந்தத்தின் வல்லமையேயாகும். ஜடம் சச்சிதானந்தத்தின் கீழ்ப்படியாகி, விரிவும் உருவும் கொண்டு இறுகி நிற்பது.

இந்த மூன்று கீழ்ப்படிகளுக்கும் இடையே மற்றொரு தத்துவம் உள்ளது; அதுவே இவற்றை இணைத்து வாழச் செய்வது; அதையே ஜீவன் என்கிறோம்; ஆத்மா இரண்டு வகையாயிருக்கிறது:— (1) பாச ஜீவன்; அது தனுகரண புவனபோகங்களை நாடுகிறது; விஷயங்களைப் பற்றிச் சுகந் தேடுகிறது. (2) அதன் பின்னே உண்மையான சுத்த ஜீவன் அல்லது

சைத்ய ஜீவன் உள்ளது. அதுதான் ஆத்மானுபவங்களின் வைப்பாகும். ஜீவன் ஆனந்த விகாசமே; அதன் சொரூபம், சுபாவம் எல்லாம் அறிவு, ஆனந்தம். அதன் அகண்டத் தன்மையை அஞ்ஞானத்தால் மானதன் அறியவில்லை.

ஆக நமது ஆராய்ச்சியில் எட்டு ஜீவ பரிணாமப் படிகளை அறிகிறோம்:—(1) சத்து (2) சித்து (3) ஆனந்தம் (4) விஞ்ஞானம் (5) மனம் (6) சைத்ய ஜீவன் (7) பிராணன் (8) அன்னம் அல்லது ஜடப் பிரகிருதி. சைத்ய ஜீவனை மனமுயிருடலில் உட்படுத்தி வேதரிஷிகள் ஏழு தத்துவங்களை விளக்கினர். அவற்றையே ஏழு கதிர்கள், ஜீவ வீணையின் ஏழு தந்திகள் என்றனர். அவற்றையே ஏழு மலை; ஏழு படிகள் என்பர். இந்த ஏழு படிகளில் பரம்பொருள் இறங்கி மீண்டும் ஜீவராசிகளைத் தனது ஐக்கிய நிலைக்கு அழைத்துக்கொண்டு உச்சியை அடைவதே ஜீவ யாத்திரையாகும்.

இந்த ஏற்றம் இறக்கத்தைப்பற்றி முன்பே சொன்னோம். இந்த ஏழெட்டுத் தத்துவங்களும் உலகாடலுக்கு அத்தியாவசியமாகும். இவையின்றி முத்தொழிலில்லை. நர மனிதன் சவலைக் குழந்தை போலிருக்கிறான். அவன் தனக்கு மேல் ஓங்கி வளர்ந்த உன்னத தத்துவங்களை அறிய முடியாது இருளில் ஆழ்ந்திருக்கிறான். அவனுக்கும் தெய்வ தத்துவங்களுக்கும் இடையே தடிப்பான மனத் திரை இருக்கிறது. விஞ்ஞான ஜோதிசக்தி இறங்கித் திரை விலகினாலே அவன் தனது தெய்வத்தன்மையை உணர்ந்து, சோக மோக தாகங்களை வென்று திவ்ய ஜீவனம் பெறுவான்.

மனிதன் தன்னை அறிந்தால் ஆனந்தமாவான்; வாழ்வில் ஆனந்தமே காண்பான். அறிவால் அறிந்து, சக்தியால் வென்று, அன்பால் கலந்து, புவனானந்

தத்தை அனுபவித்தலே வாழ்வின் குறிப்பாகும். உலகை ஆக்கி அளித்து ஆளுவது சச்சிதானந்த சக்திதான். அதை யறிந்தால் புறத்திலிருந்து வற்புறுத்திய சட்ட திட்டங்களில்லாமலே மாந்தர் ஆத்ம சுயேச்சையில் வாழலாம். வித்திலிருந்து மரம் முளைத்துக் கிளைப்பதுபோலவே, ஆத்ம சத்திலிருந்து வாழ்வுக் கற்பகம் தளிர்த்தெழுந்து செழிக்கும். எல்லா விதைகளும் ஓர் உண்மையின் வித்துக்களே; எல்லா வளர்ச்சிகளும் அகத்திலிருந்து கிளைக்கும் ஆத்ம வளர்ச்சியே. ஒவ்வோர் ஆன்மாவிலும் அனந்த சக்தியானந்தம் பொங்கித் ததும்பிப் பூரணமா யிருக்கிறது. புறத்திலிருந்து வந்த எந்தச் சட்ட திட்டமும் பூரணமாயிராது; கட்டற்ற சுதந்தரம் மட்டற்ற ஆத்ம சுதந்தரமே; விடுதலையும் உள்ளிருந்தே வரவேண்டும். சத்து சித்து ஆனந்தம் என்பது அந்தராத்மாவுக்கு வேதரிஷிகள் கொடுத்த மூன்று பெயர்கள்; 'விஞ்ஞானம்' நான்காவது பெயர்; கீழிருந்தும் மேலிருந்தும் அது நான்காவது படி—நடுநிலை. இந்த நிலைக்கு ஏறி அதற்கு மேலுள்ள சச்சிதானந்தத்தில் வாழ்வதே ஜீவ பரிபூரணமாகும்; அந்தப் பரிபூரண நிலையை வேதரிஷிகள் வர்ணித்திருக்கிறார்கள்; ஆனால் மனமுயிர் உடலில் கட்டுப்பட்ட இந்த நரவுலகில் அத்தகைய இன்ப வாழ்வைக் கொண்டுவருவதுதான் சிரமம். தற்கால மனிதன் அப்படிப்பட்ட வாழ்வொன்றிருப்பதை நம்ப முடியாதிருக்கிறான். அவன் மனோபலமும் தேக பலமும் உள்ளவனையே அதிமனிதன் என்கிறான். மூளைக்கும் உடலுக்கும் மேலே அவன் புத்தி செல்வதில்லை. உள்ளே சத்திய ரகசியங்கள் ஆழ்ந்துள்ளன; நாம் தேடத் தேடக் கிடைக்கும்; ஆனால், இந்த உன்னத தத்துவங்களை மனிதன் சிந்திக்காமலே திரிகிறான். அவன் மன மடமையில் வாழ்கிறான்.

---

# 23. மேல் மனம்

பேத வுணர்ச்சியே மடமையின் காரணம். அகண்ட வுலக ஐக்கியத்தை உணராத தனிப் பிரிவினையே மனிதனை மேலேறாது தடுக்கிறது; அதனால் மனித மனம் இருளும் ஒளியும் கலந்த மங்கலாயிருக்கிறது. மனம் விஞ்ஞானத்தின் அனு பந்தமே. ஆனால், இரண்டிற்கும் இடையே பல படிகள் உள்ளன. மனம் இருளில் உண்மையைத் தடவிக் கொண்டிருக்கிறது. மிஞ்சிப் போனால் அது உண்மையின் புகைப் படத்தைக் காணும்; அதன் உயிர் வடிவைக் காணாது. அஃது உடலுயிரில் கட்டுப்பட்டு விசாலிக்காதிருக்கிறது; ஆனால் பரிணாமக்கிரமத்தில் அது விரிந்து பரந்து மேலே வளர்ந்து சென்றே தீரவேண்டும். மனத்திற்கு மேலே ஓர் உள்ளுணர்வு உள்ளது. பரிசுத்தமான உள்ளுணர்வு பொருள்களின் தத்துவத்தைத் தெளிவாக அறியவல்லது; அதுவே புலமையின் தாயகம். அதிலேதான் சாதாரண மூளைக்கு எட்டாத அருளாவேசமும் காட்சியும் உண்டாகின்றன. அதற்குமேல் விஞ்ஞானத்திற்குப் படிகள் உயர்ந்து செல்கின்றன. இப் படிகளைச் சாதாரண மனம் ஏறமுடியாது; உள் ஆழ்ந்து அந்தராத்ம ஞானத்தை எட்டினால் ஏற்றமும் எளிதாகும். உள்ளுணர்வுடன் உள்ளறிவும் விழித்தெழுந்தால் மோனமான அசலாத்ம தரிசனம் பெறலாம். சாதாரண யோகிகள் அதிலேயே லயப்பட்டு நிர்வாண மெய்தி உலகைப் பிரிந்து, எதிலும் ஒட்டாமல் வாழ்வர். இது நமது முடிவன்று என்பதை முன்பே சொன்னோம். அந்தராத்ம சித்தியில் இன்னொரு நிலையுண்டு: சத்திய ஜோதி ஆனந்தம் வந்திறங்கி, உலகையும் வாழ்வையும் ஆனந்தமயமாக்க அனுபவிப்பதே அந்த நிலையாகும்.

அதுவே நமது சம்மதம். அந்த நிலையிலிருந்துதான் திவ்ய ஜீவனம் மலரும், திவ்ய ரூபாந்தரம் விளங்கும். அந்த நிலையிலிருந்து மேலே செல்லச் செல்ல அருட்சோதிக் கதிர் பொழியும்; கடல் வெள்ளம் போல் சேதன சக்தி அலை மோதி எழும்; படிப்படியாக சத்திய சக்தி, உண்மைக் காட்சி, உண்மையுணர்ச்சி, உண்மை நினைவு, உண்மை அறிவு, உண்மைச் செயல் எல்லாம் புலனாகும். இந்த நிலையிலேதான் உண்மையான அந்தர்ஞானம் உதிக்கும். இடையே ஒரு தங்க மூடியுள்ளது; அதைத் திறந்தே சத்தியஜோதி நிலயத்தை எட்ட முடியும். அதற்கு இப்புறம் **மேல் மனம்** உள்ளது. அதை உயர்மனம் என்னலாம். இதன் மூலமே விஞ்ஞான ஜோதி இறங்கிவந்து மனவிருளை நீக்குவது. இரண்டிற்கும் இடையே வரம்புண்டு; எனினும் மேல் மனம் விஞ்ஞான சக்தியை அறியும். ஆனால் இது விஞ்ஞானத்திற்கு இணையாகாது; அதற்குள்ள வல்லமை இதற்கில்லை. மேல் மனத்தின் திறமையெல்லாம் விஞ்ஞான மண்டலத்திலிருந்தே வரும். அதனால் இதுவும் பொருள்களின் ஐக்கியத்தை உணரும். புருஷனும் பிரகிருதியும் மேல் மனத்தில் தனித்துணரத் தொடங்கும். பிரகிருதியினின்று புருஷன் பிரிந்திருப்பதே முக்தி என்னும் சாங்கியக் கொள்கை இதிலிருந்தே போந்தது. விஞ்ஞானத்தில் புருஷனும் பிரகிருதியும் ஒருண்மையின் இரண்டு கிளைகளேயாம்.

மூர்த்தி பேதங்களெல்லாம் மேல் மனத்தில் உதித்தன. "உண்மை ஒன்று; அதையே புலவர் பலவாய் உரைப்பர்" என்றது வேதம். வேதத் தேவர்களெல்லாம் ஒரே பிரம்மத்தின் அனந்த குண வடிவுகள் என்பர். மேல் மனம் ஆயிரக்கணக்கான தேவதைகளைப் பாவிக்கிறது. ஒவ்வொரு

தேவதைக்கும் தனித் தனி வியக்தியும் சக்தியும் கற்பிக்கிறது; அவர்களிடையே நட்பும் பகையும் புகுத்துகிறது; ஒரே சைதன்யத்தைப் பல சக்திகளாக, பல சைதன்ய வடிவுகளாகப் பாவிக்கிறது; ஒவ்வொன்றிற்கும் தனித் தனி மகிமைகளைக் கற்பிக்கிறது; ஒரே ஆனந்தத்தை அனந்தமான ஆனந்த வடிவுகளாக்குகிறது. இவ்வாறு ஒரே சச்சிதானந்தத்தை மேல் மனம் அனந்த மூர்த்திகளாக்குகிறது; ஆனால், அவற்றை அபேதமாக நோக்கும் திறமையும் அதற்குண்டு. எனினும், விஞ்ஞானமே அனைத்தையும் ஒரு மயமாக அறியும்; ஒரு நிர்க்குணமே அனந்தகுண சின்மயமாக விளங்குவதை யுணரும்.

மனத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை; பிரிவினையே அதன் இயற்கை. அது நிர்க்குணத்தையும் சகுணத்தையும், வெவ்வேறாகவே பாவிக்கிறது. ஒரு பாவனையை நம்பி மற்றதை மறுக்கிறது. ஒன்றுக்கொன்று விரோதம் கற்பிக்கிறது; தனது சரக்கிற்கேற்றபடியே அஃது அனைத்தையும் தீர்மானிக்கிறது. கண்டதே காட்சி; எல்லாம் மனம், உயிர் அல்லது பௌதிக வடிவங்களெனக் காண்கிறது. தன் வழியே வழி என்று மற்ற வழிகளை மறுக்கிறது. மேல் மனம் அதனதன் தத்துவத்திற்கேற்றபடி சத்தை மதிக்கிறது; அததன் உலகில் அதனை வைத்து நிதானிக்கிறது. பௌதிக உலக சக்திகளை ஜட சக்திகளாக மதிக்கிறது; ஆனால், மற்றச் சேதன நிலைகளும் அதில் கரந்திருப்பதாக உணர்கிறது. பல நூல்களை, வர்ண வரிசையில் வைத்து ஆடை நெய்பவனைப் போல், மேல்மனம் நானாபாவனைகளையும் இணைத்துப் பொருத்திப் பார்க்கிறது.

பலவித வுலகில் ஒன்றின் விளக்கத்தை உணர்கிறது. அதில் மித்யாதிருஷ்டி யில்லை; பொய்யில்லை.

ஒன்றுதான் உண்மை; மற்றது பொய் என்ற குருட்டுப் பிடிவாதமில்லை. அதன் பாவனை, சக்தி, சங்கற்பம், வல்லமை, இன்பம் எல்லாம் தனித்தனியா யிருந்தாலும், அடிப்படையில் உள்ள ஒருமையை மேல்மனம் உணரும். மேல்மனம் ஒவ்வொரு தேவதைக்கும் உரிய இடம் தந்து, அதை மற்றத் தேவதைகளுடன் இணைத்தே கருதும். இப்படியே அது எதைப் போற்றினாலும் மற்றதை மறுக்காமல் ஐக்கிய பாவனையுடனே காணும். மேல்மனம் ஒரு சக்திபெற்ற உலகுண்மை; அது ஒரு குட்டி விக்ஞானம்; அது பலவித பாவனைகளுடன் சம பாவனை கொண்டது. அது அனைத்தையும் சம நோக்குடன், ஒன்றிப்புடன் காணும். மனம் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கும் தனிப் பிடிவாதமுடையது; அதனின்றே வேறுபாடுகள் வளர்ந்தன; சாதிமத நாடு நிறப் போராட்டங்களெல்லாம் மனப் போராட்டங்களே.

மேல் மனம் எல்லா மதங்களையும், தத்துவங் களையும், இயக்கங்களையும் ஆழ்ந்தறிகிறது. மதக் கிளைகளின் வேரை ஒன்றெனக் காண்கிறது. சண்டைக்கு மூலமான தனிச்செருக்கு அதனிடம் இல்லை. தனித்தனித் தத்துவங்கள் மொத்தத்தில் எல்லாம் ஒன்று என்பதை அது உணர்கிறது. மேல் மனவுலகில் ஐக்கியம் உண்டு. நாம் வசிக்கும் கீழ்க்கடை அஞ்ஞான உலகில் பேதமும் சண்டையுமே அதிகம். இங்கே ஒவ்வொன்றும் தான் எனக் கிளம்பி, மற்றதுடன் போட்டி போட்டு எதிர்த்துப் போராடு கிறது. "போராட்டமே பொருள்களின் தந்தை" என்று ஹேராக்ளிதன் சொன்னது இங்கே உண்மை யாகிறது. இந்த வுலகிலும் மனவுணர்ச்சி ஏதோ ஒரு ஐக்கியத்தை உண்டாக்க முயலுகிறது.

ஆனால், உண்மையான ஐக்கிய நிலை மனத்தில்

இல்லை. திவ்ய விக்ஞான சேதனத்திலேதான் அகண்ட ஐக்கியத்தை ஒவ்வொன்றிலும் நாம் உணரமுடியும். மேல்மனம் உண்மைக்கும் அஞ்ஞானத்திற்கும் இடையே கோடு கிழித்துவிடுகிறது. அதற்கும் விக்ஞானத்திற்கும் இடையே ஒரு கண்ணுடித் திரை யுள்ளது. அதன் மூலம் இரண்டிற்கும் ஒள்ளிய உறவுண்டு. அதில் விஞ்ஞான மின்னல்கள் வீசி ஐக்கிய ஒளிபரவுகிறது. கீழே வர வரத்தான் போரும் பிரிவினையும், இருளும் பகையும் பெருகக் காண் கின்றன. மனத்தைவிட்டுக் கீழே இறங்கினுல், எல்லாம் தடித்த பிரிவினை யிருளே. அனந்த சத்து அசத்தாகவும், அனந்த சேதனம் அசேதனமாகவும், அனந்தானந்தம் சுக துக்க தொந்தப் போர் வினையாகவும் மாறிக் காண்கின்றன. எல்லாம் குழப்பம்; ஆனுல் இந்த ஜடக் குழப்பத்திலும், உயிர் வகுப்பிலும், மன விகாரங்களிலுமே உலகம் அழுந்திப் போகாது.

ஜடத்திலும் சித்து மறைந்துள்ளது. மனத்திலும் விக்ஞானம் கரந்துள்ளது. படிப்படியாக உணர்வு பெற்று எதிர்ப்புகளை வென்று, இருளைப் பிளந்து மனிதான்மா, மனக்கோட்டையைத் தாண்டி, துயர், பிணி, சாவை வென்று விக்ஞான ரூபாந்தரம் பெற்று ஒருநாள் நரத்தன்மை மாறி அமரத்தன்மையும், தேவ ஜீவனமும் அடைந்தே தீரவேண்டும். மனிதனுள் மறைந்த தெய்வம் புலப்பட்டே தீரவேண்டும். பரஞ்ஜோதி இறங்கி மனவிருளை விலக்கி வாழ்விற்குத் தெய்வப் பொலிவளித்தே தீரவேண்டும். இயற்கையின் பரிணுமக் கிரமத்தில் தேவஜீவனம் கட்டாயம் வந்தே தீரும்.

---

# 24. சிருஷ்டிக்குப் பின் உள்ள வஸ்து

எல்லாம் இறைவன், அவன் சொல் மனங் கடந்தவன், அனைத்தின் உள்ளமாயிருப்பவன், பரமாத்மன், அவனுடைய சித்சக்தி உலகெலாம் பரவியிருக்கிறது; அதுவே ஒவ்வொன்றிலும் மறைந் திருந்து, உலகைப் படைக்கிறது. அதுவே அவ்யக்த சக்தி, பிரகிருதி. இது நமது வெளிக் கண்ணுக்குப் புலனாவதில்லை.

வெளியுலகில், நமது வாழ்விலேயே இரண்டு சக்திகள் உள்ளன—ஒன்று ஞானம்; மற்றொன்று அஞ்ஞானம். எங்கும் எச் செயலிலும் அனந்த ஸத் வஸ்துவின், அனந்த சேதனம் குடிகொண்டிருக் கிறது; ஆனால் அது பொருள்களில் கரந்துள்ளது; எளிதில் அதை அறியமுடிவதில்லை. பௌதிக உலகம் ஜடமாயிருக்கிறது; செத்த ஜடவுறக்கத்திலிருந்து மெல்ல மெல்ல உயிர் துளிர்த்து, உணர்வு பெற்று மேலே உயர்கிறது. இந்தப் பரிணாமத்தை முன்பே விரிவாக அறிந்தோம். உலகில் எண்ணரிய பொருள்களைக் காண்கிறோம்; சிருஷ்டி ஜாலங்களைக் கண்டால் மலைப்பாயிருக்கிறது; சிருஷ்டியின் பின்னே ஏதோ ஒன்றுள்ளது; இன்னதென்று அறிய முடியாமல் அது ஒரு பெரிய புதிராயிருக்கிறது. அதன் முன்னும் பின்னும் பெரிய சூனியமாயிருக் கின்றன. எல்லாம் இருள்; நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒரு குப்தமான வெறுமையிலிருந்து, அசேதனமாகிய சூன்னம் தோன்றுகிறது; அதிலிருந்து அனந்தமான ஒன்று கிளர்ந்தெழுந்து பரவி சத்தாக விரிகிறது. நமக்கு ஸ்தூலமான மண்ணுலகே கண்ணுக்குத் தெரிகிறது; கண்டதே

காட்சி கொண்டதே கோலம்; மற்ற வம்பு நமக்கென்ன என்றிருக்கவும் முடிவதில்லை. காணும் உலகிற்குப் பின் அடுக்கடுக்காகப் பல இரகசிய தத்துவங்கள் இருக்கின்றன. உலகை இடம், காலம், கற்பனை என்று சொன்னமட்டிலும் நமக்குத் திருப்தி வருவதில்லை. "இப்படி எல்லையில்லாமல் விரிந்தது எது?" என்ற கேள்வி நம்மை விடுவதில்லை.

நமது ஸயன்ஸ் அப்பொருளை சக்தி (energy) என்றறிகிறது; அதுவும் அப் பொருளை நேரே கண்டதில்லை; அதன் செயலாலேதான் அறிகிறது. அப் பொருள் இயங்கிச் சுழலும் வேகத்தில் பிறக்கும் கனலைக்கொண்டு ஸயன்ஸ் எத்தனையோ ஆச்சரியங் களைச் செய்கிறது. இந்தச் சக்தித் திரளே பௌதிக உலகம், ஆகாயம் எல்லாம் என்பதை ஸயன்ஸ் அறிகிறது. ஆனால், அந்தச் சக்தி எப்படி உண்டாகிறது என்பதை ஸயன்ஸ் அறியவில்லை. ஆகாசத்தில் மிக நுட்பமான எலெக்ட்ரன் அணுக்கள் சுழல்வதை ஸயன்ஸ் அறிகிறது; அந்த அணுத்திரள் ரேடியோ, மின்சார அற்புதங்களைச் செய்வதும் நமக்குத் தெரிகிறது. ஆனால் இந்த அணுக்கள் எங்கிருந்து உண்டாகின்றன; இவற்றிற்கு சக்தி எப்படி வந்தது. இவை எப்படித் திரண்டு பூமியில் பௌதிக அற்புதங்கள் செய்கின்றன. ஒரேமாதிரியான மின்சார அணுக்களே பல அற்புதங்களை எப்படிச் செய்கின்றன என்பவை ஸயன்ஸ் மூளைக்கு எட்ட வில்லை. இயற்கைத் தாதுக்கள் கலந்து புதிய புதிய பொருள்கள் உண்டாகின்றன; அவை எத் திறனால் கலக்கின்றன, எப்படி என்பது புலனாகவில்லை. உயிர்க்காற்றும், நீர்க்காற்றும் சேர்ந்து மற்றொரு புதிய பொருளாகிறது. அதுவே தண்ணீர். ஆனால் தண்ணீரில் இந்தக் காற்றுமட்டுமன்று, வேறு பொருட்கலப்பும் உண்டு. அது எப்படி உண்டாகிறது

என்பதை நாம் அறிய முடியவில்லை. வித்திலிருந்து மரம் முளைப்பதைக் காண்கிறோம். ஆனால் இவ்வளவு சிறிய வித்தில் மரம் எப்படி அடங்கியிருந்தது, எப்படி வெளிவந்தது, கிளைத்து வளர்ந்தது என்பதை அறிய முடியவில்லை. மூளையில் எண்ணங்கள் ஓயாது எழுகின்றன; எப்படி என்பதை அறியமுடியவில்லை. எலெக்ட்ரன் அணுக்கள், நரம்புகள், ரசாயன சத்துக்கள், கொழுப்புகள் முதலியன சேர்ந்து மூளையாகிறது என்று சொல்லுகிறோம். ஷேக்ஸ்பியர், பிளாத்தன்போன்ற மேதாவிகள் மூளையும் அதே சரக்கால் ஆனவைதாம். ஆனால் அவர்கள் மூளையில் மட்டும் ஹாம்லெட் போன்ற நாடகமும், "Symposium" "Republic" போன்ற அரிய சிந்தனை இலக்கியங்களும் எப்படி மலர்ந்தன என்பதை நாம் அறிய முடியவில்லை. ஸயன்ஸின் கணக்கும் காரியமும் விவகாரத்திற்குச் சரியாகத்தான் இருக்கின்றன. ஆனால், அதன் பின்னுள்ள மூலகாரணம் தெரியாது கூடமாயிருக்கிறது. ஒரே மின்சக்தி ஏகுமின்னல் ஆகுமில்லை, வெற்று மின்னலாக விளங்குகிறது; ஒரே பிருதிவி சக்தி மண், மணல், கல், மலை, விதவித லோகங்களாகக் கிளம்புகிறது. ஒரே மண்ணிலிருந்து எத்தனையோ விதமான மரம் செடி கொடிகள் முளைக்கின்றன; அவற்றை உண்டு எத்தனையோ உயிர் வகைகள் செழிக்கின்றன. ஒரே பூசாரத்தை உண்டு, எத்தனைவிதமான மலர்கனிகள் விளைகின்றன! ஒரே உயிர்த்தத்துவம் கணக்கில்லாமல் விதவிதமான ஜீவராசிகளாக வளர்கிறது. அதே உயிர்த் தத்துவம் மனோமய மனிதனாகிறது. எல்லா மனிதரும் ஒன்று யிருக்கவில்லை; மூளைப் பொருளொன்றுதான். எல்லார் மூளையும் ஒன்றுயிராமல் எத்தனையோ வித்தியாசங் களாய் உள்ளன. இப்படியே பார்ப்போமானால் ஆதியில் எல்லாம் ஏகரஸமாயிருக்கின்றன. அந்த

ஏகரஸத்திலிருந்து புதிது புதிதாக அநேகரஸப் பொருள்கள் உதிக்கின்றன என்பதை அறியலாம். ஒன்றிலிருந்து இப்படிப் பலபான்மைப் பொருள்கள் எப்படி வந்தன, எதனுல் வந்தன? இந்த அநேக ரஸலீலையை ஊக்குவது யார்? கல்லிலிருந்து புல்லுக்கும், புல்லிலிருந்து விலங்கிற்கும், விலங்கி லிருந்து மனிதனுக்கும் எது பரிணமித்தது? அது எப்படி என்பது குப்த ரகசியமாயிருக்கிறது.

சிருஷ்டியானந்த பரவசத்தால் பலவாக விளையாடுவது எது? நமக்குத் தெரியாத ஒரு உண்மை இந்த நாஜைகத்தின் பின்னே உள்ளது. உணர்வற்ற ஜடத்திலும் அது கரந்து, பக்குவகாலத்தில் எழுந்து பரந்து விரிந்து பலவாகக் காண்கிறது. உலகை ஏதோ ஒரு இச்சா சக்தி தோற்றி மாற்றி முன்னேற்று கிறது. ஒவ்வொன்றுள்ளும் ஒரு உட்பொருள் (அந்தர்யாமி) உள்ளது. அது ஒரு சிற்பிபோல பஞ்ச பூதங்களைக் கொண்டு உலகைக் கணக்கற்ற பெயர் வடிவ பேதமாகச் செய்து விளையாடுகிறது.

இந்த ஆடல் எதற்கு? ஆடிவிட்டுப்போகட்டும்; ஆனுல் இந்த ஆடலில் இவ்வளவு அசுரக் கொடுமை களும் துயர்களும் வருவானேன்? உலகம் தெய்வ சங்கற்பத்தால் உண்டானது என்கிருர்கள். அந்தத் தெய்வம் இப்படிப்பட்ட அஞ்ஞான துக்க உலகை ஏன் படைக்கவேண்டும்? இதற்கு எந்த மதமும் பதிற் சொல்ல முடியவில்லை; இந்த உல்கை மறந்து மோட்ச லோகத்தையும் உலகிற்கு அப்பாலான பொருளையும் பார்க்கும் எந்தத் தத்துவமும் இந்தப் புதிரைத் தீர்க்கவில்லை. பரமாத்மன், விசுவாத்மா ஜீவாத்மா என இரண்டுமாயிருக்கிருன். அவனே ஆக்கு வான், ஆட்டுவான். ஆடல் என்பதை உணர்ந்தாலே உலக ரகசியம் தென்படும். அவன் உண்மை, அறிவு, இன்பம்; அவனே ஸத்வஸ்து; அகில

வுலகமும அவனது சின்மயம். உலகாடல் அவன் ஆனந்தம். அவனது சித்துதான் விதைக்குள் இருந்து மரமாகக் கிளேக்கிறது. அந்தச் சின்மயமே ஐம்புல விலங்காகிறது; அதுவே மேலும் பரிணமித்து மானதனுகிறது. அச் சின்மயத்தை மனம் சாக்ஷாத் கரிக்க முடியாது; எவ்வளவு நூலாராய்ச்சி செய்தாலும், தத்துவ வாதம் செய்தாலும், மூளையை எப்படிப் புரட்டினுலும் அந்தப் பொருளே மறைக்கும் திரையை விலக்க மனதிற்குத் திறனில்லே.

யோகத்தால் மனதை அடக்கி, உபசாந்த மோனத்திலிருந்தே அப் பொருளே உணர முடியும். அப்போதே உட்பார்வை ஏற்படும். அப்போது மனம் சூக்ஷ்மப் பொருளாகக் காணும். அதை ஒரு மனே சக்தி இயக்குவது புலனுகும். பெயர் வடிவ பேதங்கள், எண்ணக் குழாங்கள், பாவனேகள், காட்சிகள், உணர்ச்சிகள், விருப்பங்கள் உண்டாகும் வகை புலனுகும். பிறகு சங்கற்பங்கள் மனத்தி னின்றே உண்டாவதில்லே; அவை வெளியிலிருந்து வருகின்றன. மனே சக்தி அலேகளும், ஓட்டங்களும் புறத்தேயிருந்து வந்தே மனத்தில் உருக்கொள்ளு கின்றன. அவற்றையே நமது நினேப்பு என மயங்கு கிருேம் என்பது விளங்கும். பிறகு எண்ணங்களும், இச்சைகளும், உணர்வுகளும் எழும் ஒரு சூக்ஷ்ம மனது புலனுகும். அதற்குமேல் ஒரு உன்னத மனே சக்தி இயங்கும். உயர்ந்த மன நிலேகள் உணர்வாகும். முடிவில் இவையனேத்தையும் பின்னிருந்து தாங்கி நடத்தும் மனேமய புருஷனே உணரலாம். இந்த மனேமயன் இன்றி மனத்திற்கோ நினேப்பிற்கோ எவ்விதமான ஆட்டமும் இல்லே. முதலில் இந்த மனேமய புருஷன் மோன சாட்சியாகக் காணும். அத்துடன் நின்ருல் சிருஷ்டி ரகசியம் தெரியாது. உலகம் பிரகிருதியின் ஆடல்; பிரகிருதியின்

சேட்டையே மனத்தையும் ஆட்டுகிறது; பிரகிருதியி லிருந்து விலகியிருப்பதே சாந்தம் என்ற நிலைக்கு வந்துவிடும். அதுவே உண்மையல்ல. புருஷன் என்றும் தானே தானாக விலகி நிற்கவில்லை. இன்னும் ஆழ்ந்துபார்த்தால் அது தனது மோன சாட்சி நிலையிலிருந்து அனைத்தையும் அறிந்து, ஆணையிட்டுத் தாங்கி நடத்துகிறது என்பதை உணர்வோம். மனோ சக்தி அந்தப் புருஷனிலிருந்தே உண்டாவதை அறிவோம். இதற்குமேல் விசாலமாகப் பார்த்தால், நமது தனி மனம் உலக மனத்தின் ஒரு பங்கு; அது விசுவ மனத்தின் ஒரு கருவி; அகில மனத்தின் நினைப்பலைகள், சங்கற்ப ஓட்டங்கள், விருப்ப எழுச்சிகள் இவற்றை அது ஏற்றுப் பரப்பும் சாதனம் என்பதை உணர்வோம். அகில மனோமய புருஷனை அறிய மனத்திற்குமேல் உயரவேண்டும். மேல் மனத்தில் உலகியல்பின் கதியை அறியலாம்; ஆனால் அதுவும் தனியுணர்வுகொண்டே அறியும். ஐக்கிய உணர்வுடன் அறிய முடியாது. அது எதிலும் பற்றில்லாத சுத்த மோனத் தன்மயத்தையும், அனந்த நாம ரூப பேதங்களுடன் விளையாடும் சின்மயத்தையும் துவைத பாவனையிலே காணும். அது சகுணத்தையும் நிர்க்குணத்தையும் ஒன்ருக அறியாது. நிர்க் குணத்தைப் பற்றினுல் நிஷ்ப்ரபஞ்சமாய், நிராலம்ப மாய், தானே தானுன சதா மோனத்தில் போய் முடியும். சகுணத்தைப் பற்றினுல் தனது ஏகாம்சத்தில் உலகையெல்லாம் தாங்கும் ஒரு அகிலாண்ட நாயகனைச் சேரும். சகுணம் நிர்க்குணம் இரண் டையும் மேல் மனம் தனித்தனியாக ஏற்கிறது.

பரப்பிரம்மன் சுத்த நிர்க்குணமாக, நிஷ்ப்ரபஞ்ச ஞகவே இருந்துவிட்டால், சிருஷ்டி, விளக்கம், உலகம் எதுவும் இரா. இருப்பினும் உலகம் உள்ளது. அதை ஆக்கி நடத்தும் ஒரு சக்தி இருக்கத்தான் வேண்டும்.

இருப்பது பரம்பொருள் ஒன்றே; ஆதலால் அந்தச் சக்தியும் அப் பரப்பிரம்ம சக்தியாகவே யிருக்க வேண்டும். உள்ளது அதுவேயாதலின் அஃதன்றி எதற்கும் இருக்கையில்லை. வெறுமையிலிருந்து எதுவும் வராது; வெறுங் கை முழம் போடாது. சிருஷ்டி பரப்பிரமத்தினின்றே வரவேண்டும்; பரப் பிரம்மம் உண்மை; ஆதலால், அதனிடமிருந்து வந்த சிருஷ்டிப் பிரபஞ்சமும, பரப்பிரம்மம் போலவே நிறைவான உண்மைதான். ஆனல் இந்த ரகசியம் விள்ளமுடியாமல் அநிர்வசநீயமாயிருக்கிறது. பரப் பிரம்மம் சூனியமன்று. எப்போதும் தானே தானக, நிஷ்ப்ரபஞ்சனுக அசைவற்றிருப்பதன்று; அது எல்லையற்றது; அனந்த சக்தியுடையது. அது பரம சாந்த மயமாயிருப்பினும், எங்கும் பரவி ஆடும் இன்பமும் உடையது; அது நிர்விகாரியா யிருப்பினும் சிருஷ்டித் தொழிலையும் செய்கிறது. அதற்கு அன்னியம் எதுவும் இல்லையாதலால், அதுவே உலகைப்படைத்து உலகாக நிறைந்து விளையாடுகிறது. அனந்த சக்திகொண்ட பரம்பொருள் காரியமில்லா மோனத்திலேயே லயித்துப்போக முடியாது. சிருஷ்டி என்பது பரப்பிரம்மத்தின் சுயம்பிரகாசமே; அதன் சக்தி விலாசமே. அதன் சொரூபத்திலேயே அதன் சுபாவம் உண்டாகிறது; சும்மா இருப்பது அதன் சுபாவமன்று. எங்கும் பரந்து விரிந்து எல்லா மாகி ஆடலே அதன் சுபாவம். இது மடவிருளால், இருவிகாரத்தால் மறைந்த மனத்திற்குக் காண்பதில்லை; மேல் மனத்திற்கும் இருவகையாகத் தோன்றும் விஞ்ஞானத்திலேதான் பரம்பொருளின் சிருஷ்டி ரகசியம் நிதர்சனமாகும்; அது அன்பு, இன்பம், அழகுடன் கூடிய சச்சிதானந்த விகாசம் என்பது விளங்கும். பரப்பிரம்மம் ஆத்மா, ஈசன், புருஷன் ஆகிய மூன்று தத்துவ விளக்கம் கொண்டிருப்பதை

அறியலாம். எல்லாம் அதன் மயம், அதன் சத்து, அதன் சித்து, அதன் ஆனந்தம்; அதுவே அறிவோன், அறிவு, அறிபொருள், அன்புப் பொருள், அன்பன், அன்பு. அதுவே இச்சிப்பது, இச்சை, இச்சையை நிறைவேற்றுவது என்பது புலனாகும். அதுவே இன்பன், இன்பம், இன்புறுவோன் என்பது தெளிவாகும்; சிருஷ்டிப் பிரபஞ்சம் இன்பமயமாகக் காணும். ஆத்மாவும் அந்தராத்மா, பகிராத்மா இரண்டையும் சேர்த்துப் பிடிக்கும் சித்தாத்மா என்று காணும். இந்த முப்பிரியான தத்துவங்களின் ஒருமை, விஞ்ஞானத்தால் தெளிவாக விளங்கும். ஜீவஜகபர சம்பந்தமும், ஒன்றிப்பும், உலகம் நடக்கும் வகையும், நாமரூப பேதங்களின் அபேத ரகசியமும் அப்போதே புலனாகும். ஏகமே அநேக பாவனையில் விளங்குகிறது; ஒரு சகுணமே அனந்த குணமாகத் தோன்றுகிறது. ஒரு உயிரே அகில ஜீவனுமானது; ஒரு வியக்தியே அகில ரூபமானது. ஒரு வாக்கே அனந்த மறை யானது. ஒரு சக்தியே விசுவ கர்மாவானது. ஒன்றே எல்லாமாக விளையாடுகிறது. அந்த ஒன்றை அறிந்தால் எல்லாம் அறிந்ததேயாகும். அதை இரண்டாகப் பேசமுடியாது. அதுவே அகிலம்—ஆனால் அகிலத்தில் அது கட்டுப்பட்டதன்று; அது தாக்கற்ற தனிப் பொருள். அது சர்வ சுதந்தர வஸ்து. அது தனது சிருஷ்டியை எப்படி வேண்டுமானாலும் மாற்ற முடியும்; பரப்பிரமம் சூனியமன்று, சிருஷ்டி வெறுமையன்று. அது உண்மை; இதுவும் உண்மை. அது எங்கும் நிறைந்த உறுதிப் பொருள். இதுவும் உறுதிப் பொருள்.

இதுவே ஸ்ரீ அரவிந்த சித்தாந்தம்: இத்துடன் தேவ ஜீவனம் முதற் பாகம் முடிந்தது; இரண்டாம் பாகத்தில் தெய்வத் தன்மையைப் பற்றி ஆராய்வோம்.

---

Printed at the Sunday Times Press, Cathedral, Madras.

WRAPPER DESIGNED AND PRINTED BY SHAKTI PRESS LIMITED, KARAIKUDI.